வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu வீரமலர்

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 15.08.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 254 | பக்கங்கள் : 20






07 இன்று இந்தியாவின் 75ஆவது சுதந்திர தினம்



08 இந்திய இலக்கை தோற்கடிக்குமா இலங்கை, மாலைதீவு இராஜதந்திரம்?



10 இரட்டைக்கோபுர தாக்குதல் பின் விளைவுகள் தலிபான்களை பாதிக்கவில்லை



12 இரு துருவங்கள் இணையுமா?

# “ஈக்கள் போல இறக்கின்றனர் மக்கள்”

## அவிசாவளை வைத்தியசாலை கொவிட் விடுதியில் பணிபுரியும் மருத்துவரின் உணர்ச்சிபூர்வமான பதிவு


*கொழும்பு, ஓக. 15*

“அவிசாவளை பொது வைத்திய சாலை தொடங்கப்பட்ட நாளிலிருந்து நான் கொரோனா நோயாளர் விடுதியில் பணிபுரிந்து வருகிறேன். மருத்துவர்களாக நாங்கள் பன்னிரண்டு கோவிட்-19 நோயாளர் விடுதிகளில் கடமையாற்றுக்கின்றோம்.

இப்போது அவை நிரம்பி விட்டன. தினமும் சுமார் 100 கோவிட்-19 நோயாளிகள் நாற்காலிகள் மற்றும் தரையில் சிகிச்சை பெறுகிறார்கள்.

முடிந்தால், எல்லா வேலைகளையும் இடைநிறுத்தி வீடுகளுக்குச் செல்லுங்கள்.

19



Najith Indika
Yesterday at 11:14 AM

I have been working in it since the Corona ward started at Avissawella District General Hospital. As doctors, twelve of us are working in two wards of Corona.

By now they are full and left. Nearly a hundred corona patients are being treated daily in the chairs and on the floor.

I've heard and read " work stress " but now I feel like what it really is. It feels so hard right now. Within the " internship year " (Internship) known as the hardest time of the job. it's certa... See More

See original · Rate this translation



### கட்டுப்பாடுகளுக்கு அப்பால் சென்று

# கடுமையான முடிவுகள் எடுக்கப்படவேண்டும்!

### பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வலியுறுத்து

**கொழும்பு, ஓகஸ்ட் 15**

**நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றுக்கு தற்போதுள்ள கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்சென்று கடுமையான முடிவுகள் எடுக கப்படவேண்டுமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

19



# 3,245 பேருக்கு நேற்று கொரோனா தொற்று

*கொழும்பு, ஓக. 15*

நாட்டில் மேலும் 3 ஆயிரத்து 245 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 51 ஆயிரத்து 515 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 717 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பி

19

## செஞ்சோலைப் படுகொலை நினைவு; வல்வையில் சிவாஜிலிங்கம் அஞ்சலி



*யாழ்ப்பாணம், ஓக.15*

செஞ்சோலை படுகொலை தினத்தின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டபோதிலும் வல்வெட்டித்துறையில் அஞ்சலி நிகழ்வு நடந்தது.

வல்வெட்டித்துறையிலுள்ள தமிழ்த் தேசியக் கட்சியின் அலுவலகத்திற்கு முன்பாக, கட்சியின் செயலாளர் நாயகம் எம். கே.சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

19

## நாட்டில் கொரோனா கோர தாண்டவம் ஒரே நாளில் 160 பேரை பலியெடுத்தது!

*கொழும்பு, ஓக. 15*

இலங்கையில் 160 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டு நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை உயிரிழந்ததாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்றிரவு உறுதிப்படுத்தினார்.

நாட்டில் ஒரு நாளில் பதிவான அதிக மரணங்களின் முன்னைய எண்ணிக்கையைக் கடந்து நேற்று முன்

19

## வீதியில் வீழ்ந்து உயிரிழந்தவர் உட்பட கிளிநொச்சியில் 2 பேர் தொற்றால் பலி!

*கிளிநொச்சி, ஓக. 15*

கிளிநொச்சியில் உயிரிழந்த இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் உயி

19

## கோவிட் நோயாளிகளை வீட்டிலேயே பராமரிக்கும் திட்டம் இரத்தினபுரியில்

*கொழும்பு, ஓக. 15*

2 தொடக்கம் 60 வயதுக்குட்பட்ட கோவிட் -19 நோயாளிகளுக்கு மருத்துவர்களின் மேற்பார்வையின் கீழ் எந்தவித சிக்கலும்

19

## கைதிகளை பார்வையிட தற்காலிகமாக தடை

*கொழும்பு, ஓக. 15*

இலங்கையில் மிகத் தீவிரமடைந்துள்ள கொரோனா பரவல் காரணமாக மறு அறிவித்தல் வரை அனைத்து சிறைச்சாலைகளிலும் உள்ள கைதிகளைச் சந்திக்க பார்வையாளர்களுக்கு

19

# இப்படியும் நடக்கிறது...!

பேர்சியும் ஆபிரகாமும் நல்ல நண்பர்கள். இருவரும் தியேட்டர் ஒன்றில் சினிமா பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

உயரமான கட்டிடத்தின் உச்சிக்குச் சென்ற கதாநாயகன் அங்கிருந்து குதிக்கப் பார்ப்பதாக ஒரு காட்சி. பரபரப்பான இந்தக் கட்டத்தில் இடைவேளை விடப்பட, வெளியே வந்த இருவரும் இந்த காட்சி பற்றியே விவாதித்தார்கள்.

"அந்த ஆள் கீழே குதிக்கப்போகிறான் கால் எலும்பு முறியப் போகுது" என்று பந்தயமே கட்டினார் பேர்சி.

ஆபிரகாமும் விடவில்லை. "பந்தயத்துக்கு நானும் தயார். அவன் கண்டிப்பாக கீழே குதிக்கமாட்டான்" என்றார் நம்பிக்கையோடு.

பந்தயத்தில் தோற்பவர், வெல்பவருக்கு விருந்து தரவேண்டும் என்று முடிவு செய்துகொண்டு, இருவரும் தியேட்டருக்குள் போனார்கள்.

ஆபிரகாம்தான் பாவம். கதாநாயகன் உச்சியிலிருந்து கீழே குதித்துவிட்டான்.

பந்தயத்தின்படி, வெற்றிபெற்ற பேர்சிக்கு விருந்து வைத்தார் ஆபிரகாம்.

அப்போது பேர்சி,

"உங்களை நான் ஏமாத்திட்டதா என்னோட மனச்சாட்சி உறுத்துது. அந்த ஆள் கீழே குதிக்கப்போறது எனக்கு முன்னாடியே தெரியும். படத்தை நான் எற்கனவே பார்த்துவிட்டேன்" என்றார்.

அதற்கு ஆபிரகாம் வருத்தத்தோடு சொன்னார்,

"நானும்தான் படத்தைப் பார்த்திருந்தேன். ஆனால் அந்த முட்டாள் மறுபடியும் இப்படிக் கீழே குதிப்பான் எண்டு துளிகூட நான் எதிர்பார்க்கலை.".

நகைச்சுவை நடிகர் வடிவேலு நடித்த படக்காட்சி ஒன்று இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது.

ஒரு கிராமத்தில் பெரிய சண்டியனாக நடித்திருப்பார். இப்படி பல படங்களில் நடித்திருப்பார்தான். ஆனால், இந்தப் படத்தில் அவரை ஒரு வண்டிலில் வைத்து அவரது அடிபொடிகள் தள்ளிக்கொண்டு போவார்கள். அவர் கம்பீரமாக உட்காந்திருப்பார்.

போகின்ற அதேவேகத்தில் அவரை மற்றக் கிரமத்துக்காரர் புரட்டி எடுப்பார். அவரோடு வந்தவர்கள் எல்லோரும் ஓடிவிடுவார்கள்.

வாங்கிக்கட்டிய வடிவேலு, பின்னர் தனது கிராமத்திற்கு திரும்பி வரும்போது அதே கம்பீரத்துடன் வருவார். மற்றக் கிராமத்துக்காரனை தான் புரட்டி எடுத்தவிட்டதாக ரீல் விடுவார் வடிவேலு..

இந்தக் காட்சிதான் அந்தச் செய்தியை படித்தபோது ஞாபகத்திற்கு வந்தது.

அரசாங்கத்திற்கும் கூட்டமைப்பிற்குமிடையே பேச்சுவார்த்தை நடக்கவிருப்பதாக வெளிவந்த செய்தியைப் பார்த்துவிட்டு கூட்டமைப்பின் பங்காளிக்கட்சியான ரெலோ நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றது.

அதில் ஒரு வசனம்:

....இப்படியான பல அனுபவங்களை நாம் கடந்து வந்த பின்னரும் பேச்சுக்கு அழைத்தவுடன் கூட்டமைப்பு ஓடி வந்து விடும் என்று அரசோ அல்லது வேறுதரப்புக்களோ கருதுவது வேடிக்கையானது......

இந்த வசனத்தைப் படித்தபோது நீங்களும் வடிவேலு நடித்த அந்தப் படத்தைப் பார்த்திருந்தால், நிச்சயம் உங்களுக்கும் அந்தக் காட்சி மனக்கண்ணில் வந்துபோயிருக்கும்.

அந்தப் படத்தில் வடிவேலுவைப்பார்த்து அவரது நண்பர்கள் கேட்பார்கள். அண்ணே, உங்களுக்கு நோகவே மாட்டுதா? என்று.

அதைத்தான் ரெலோவைப் பாத்து கேட்கவேண்டும்போல இருக்கின்றது.

கூட்டமைப்பின் சார்பில் ஏற்கனவே பேச்சுக்கள் ஆரம்பமாகிவிட்டது. அமெரிக்கத் தூதுவரின் இல்லத்தில் நடைபெற்ற முதல்கட்ட பேச்சுவார்த்தையில் அரசாங்கத்தின் சார்பில் பேராசிரியர் ஜி. எல். பீரிசும், கூட்டமைப்பின் சார்பில் சுமந்திரனும் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தச் செய்தி வெளிவந்த சில நாட்களில், தற்போது கல்வி அமைச்சராக இருக்கும் பேராசிரியர் பீரிஸ், வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்படவிருப்பதாகவும் ஒரு செய்தி வெளிவந்திருந்தது.

இந்த விடயம் குறித்து இந்தப் பத்தியில் பலதடவை குறிப்பிட்டாகிவிட்டது.

பேச்சு நடப்பதில் எந்தத் தவறும் இல்லைத்தான். ஆனால், கூட்டமைப்பின் சார்பில் பேசுகின்றவர், குறைந்தபட்சம் தமிழ்மக்களின் நம்பிக்கைக்குரியவராகவாவது இருக்க வேண்டும் என்கிறார் ஒருவர். அவர் தங்கள் நலன்குறித்துத் தான் பேசுகிறார் என்றாவது தமிழ்மக்கள் நம்பவேண்டாமா?

**- ஊர்க்குருவி**

# காணாமல்போனோரில் பலர் வெளிநாடுகளில்!

## மீண்டும் கூறுகின்றார் அமைச்சர் தினேஷ்

கொழும்பு, ஓக. 15

"இலங்கையில் போரின் போது காணாமல்போனதாக கூறப்படுவோரில் பலர் வேறு பெயர்களில் வெளிநாடுகளில் வசிக்கின்றனர் எனது தகவல்கள் கிடைத்துள்ளன."

- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இறுதிக்கட்ட போரின்போது அவர்கள் முறையற்ற வழிகளின் ஊடாக நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார் என்று 'த ஐலண்ட்' ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"காணாமல்போனதாகக் கூறப்படும் நூற்றுக்கணக்கான நபர்கள் வெளிநாடுகளில் வாழ்ந்து வருவதை நிரூபிக்கத் எம்மிடம் அறிக்கைகள் உள்ளன.

அகதிகள் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு அடைக்கலம் கொடுக்கும் நாடுகளிடம் இருந்து நாம் தகவல்களைக் கோரியுள்ளோம். எனினும், சில நாடுகள் அந்தத் தகவல்களை வழங்க மறுத்துள்ளன.

இலங்கையுடன் போருடன் தொடர்புடைய பரஸ்பர ஒப்பந்தங்களில் கையெழுத்திட்ட நாடுகள் மட்டுமே அந்த விவரங்களை சட்டபூர்வமாக வழங்க முடியும்.

காணாமல்போனவர்கள் தொடர்பில் சர்வதேச அரங்கில் தொடர்ந்தும் கேள்வி எழுப்பப்பட்டு வருகின்றது. ஆனால், காணாமல் போனவர்கள் இப்போது அவ்வாறு கேள்வி எழுப்பும் அமைப்புகளுடன் தொடர்புடைய நாடுகளிலேயே வாழ்கின்றனர்.

எங்களுக்கு எதிரான இந்தக் குற்றச்சாட்டுகள் உண்மை இல்லை என்பதை சர்வதேச அமைப்புகளை நம்ப வைக்க முடியும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

எவ்வாறாயினும் காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீட்டுச் சான்றிதழ்களை வழங்க அரசு ஏற்கனவே முன்வந்துள்ளது. ஆனால், உறவினர்கள் அதனை மறுத்துள்ளனர்.

அத்தோடு தமது உறவுகள் எங்கே, அவர்கள் இறந்துவிட்டார்களா? அல்லது உயிருடன் இருக்கிறார்களா? என்று விசாரிக்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

காணாமல்போனவர்களைக் கண்டுபிடிப்பது சாத்தியமில்லை. அதேவேளை, அவர்கள் இறந்துவிட்டார்கள் என்று அரசு கருதவும் முடியாது. எனவே, அவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு இறப்புச் சான்றிதழ்களைக் கொடுக்க முடியாது.

1988ஆம் ஆண்டில் காணாமல்போன நபர்கள் சிலர், சமீப ஆண்டுகளில் வீடு திரும்பினர் எனக் கூறப்படுகின்றது.

நாங்கள் அவர்களின் இறப்புச் சான்றி தழ்களை வழங்கியிருந்தால் என்ன நடந்திருக்கும்?" என்றும் வெளிவிவகார அமைச்சர் கேள்வி எழுப்பியுள்ளார். (இ)

## வவுனியாவில் கொரோனாவால் இருவர் மரணம்

வவுனியா, ஓக. 15

வவுனியாவில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இருவர் நேற்றுமுன்தினம் இரவு மரணமடைந்துள்ளனர் என்று மாவட்ட சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, செட்டிகுளம், நேரியகுளம் பகுதியைச் சேர்ந்த 76 வயதுடைய பெண் ஒருவரும், 88 வயதுடைய ஆண் ஒருவருமே இவ்வாறு மரணமடைந்துள்ளனர்.

அவர்களது உடல்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நேற்று அடக்கம் செய்யப்பட்டன.

## கல்வி TV CHANNEL-1 — 15.08.2021 ஞாயிற்றுக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

## கல்வி TV CHANNEL - 2 — 15.08.2021 ஞாயிற்றுக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
15.08.2021 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆடி 30

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# தினேஷ் குணவர்த்தனவின் கண்டுபிடிப்பு?

இறுதி யுத்தத்தின்போதும், அதன் பின்னரும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் பிரச்னைக்கு இதுவரையில் தீர்வில்லை. இப்போதும் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வீதிக்கு வந்துதான் இந்த விடயத்தை வலியுறுத்த வேண்டியிருக்கின்றது. இதன் காரணமாகவே, பாதிக்கப்பட்ட மக்கள், தங்களுக்கான நீதியை சர்வதேசத்திடம் கோரி வருகின்றனர்.

இவ்வாறான ஒரு பின்னணியில்தான், இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, காணாமல்போனதாக கூறப்படும் பலர், வெளிநாடுகளில் வேறு பெயர்களில் வாழ்ந்துவருவதாகவும், அதுதொடர்பில் தங்களிடம் தகவல்கள் இருப்பதாகவும் தெரிவித்திருக்கின்றார். இலங்கையின் விவகாரம் மனித உரிமைகள் பேரவையில் மீண்டும் விவாதிக்கப்படவுள்ள நிலையிலேயே, தினேஷ் குணவர்த்தன இவ்வாறான ஒரு கருத்தை வெளியிட்டிருக்கின்றார். இப்படியான கருத்துக்கள் இதற்கு முன்னரும் வெளிவந்திருக்கின்றன.

குணவர்த்தன கூறுவதுபோல், வடக்கு கிழக்கில் காணாமல்போனவர்கள் வெளிநாடுகளில் வாழ்ந்துவருவது உண்மையெனின், ஏன் அதனை ஆதாரபூர்வமாக நிரூபிக்க முடியாது? ஒருவேளை அவ்வாறு அரசாங்கத்தினால் நிரூபிக்க முடிந்தால், தமிழர்கள் பொய் சொல்லுகின்றனர் என்னும் அடிப்படையில் இந்த விடயம் முற்றிலுமாக நீர்த்துப் போய்விடுமல்லவா! இலங்கைக்கும் மேற்குலக நாடுகளுக்கும் இடையில் காணப்படும் புலனாய்வு பரிவர்த்தனைகளை பயன்படுத்தி, மிகவும் இலகுவாக இந்த விடயங்களை நிரூபிக்க முடியுமல்லவா! காணாமல்போனவர்கள் வெளிநாடுகளில் வாழ்ந்துகொண்டிருந்தால் அதனை அரசாங்கம் உனடியாக நிரூபிக்கவேண்டும். வெறும் கதைகளை கூறிக்கொண்டிருக்கக்கூடாது.

அரசாங்கம், தொடர்ந்தும் பொறுப்பு கூறலிலிருந்து எவ்வாறு தப்பித்துக்கொள்ளலாம் என்பது பற்றியே சிந்திக்கின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்கான நியாயத்தை வழங்கவேண்டும் என்பதில் ஒரு துளியளவு கரிசனைகூட அரசாங்கத்திடம் இல்லை. குணவர்த்தனவின் கூற்று இதனைத்தான் உணர்த்துகின்றது. கடந்த ஆட்சிக் காலத்தில், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களில் கைதுசெய்யப்பட்டவர்கள் அனைவரும் ‘அரசியல் பழிவாங்கல்’ என்னும் அடிப்படையில் விடுவிக்கப்படுகின்றனர். அவ்வாறாயின், பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வாறு நம்பிக்கை ஏற்படும்?

இலங்கையின் மனித உரிமை விவகாரம் முற்றிலுமாக அரசியல் மயப்படுத்தப்பட்டிருக்கின்றது. அனைத்து பிரச்னைகளுக்குமான வேர் இங்குதான் இருக்கின்றது. மனித உரிமைகள் எங்கு அரசியல் மயப்படுத்தப்படுகின்றதோ, அங்கு மனித உரிமைகளுக்கான பாதுகாப்பு என்பது கானல்நீரே! ரணில் - மைத்திரி அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையுடன் இணைந்து பயணிக்கும் கொள்கை நிலைப்பாட்டை எடுத்திருந்தது. அங்கும் இதய சுத்தியுடன்கூடிய முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படவில்லை. ஒருசில விடயங்கள் இடம்பெற்றிருந்தாலும்கூட, அங்கும் தங்களின் தேர்தல் வெற்றிக் கணக்குள் போடப்பட்டன.

மைத்திரி - ரணில் முரண்பாடுகளால் அனைத்தும் கிடப்பிற்கு சென்றது. உண்மையில் மனித உரிமைகளை பாதுகாக்கவேண்டும் என்பதில் உறுதியான நிலைப்பாடு இருந்திருந்தால், தங்களின் உள் முரண்பாடுகளை கடந்தும் மனித உரிமைகளுக்காக, அனைவரும் இணைந்து செயற்பட்டிருக்க முடியும். ஆனால், உள்ளூர் அரசியல் நலன்களுக்கு முன்னால், மனித உரிமை விழுமியங்கள் எப்போதுமே இரண்டாம் பட்சமானவையாகவே இருக்கின்றன. இந்த விடயத்தில் சிங்கள ஆட்சியாளர்களுக்கு இடையில் பெரியளவில் கொள்கைசார்ந்த வேறுபாடுகள் இல்லை. அனைவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளாகவே இருக்கின்றனர். மனித உரிமைகளை பாதுகாக்கவேண்டும் என்பதில் கரிசனைகொள்ளும் சர்வதேச சமூகம், இந்த விடயத்தையே உற்றுநோக்க வேண்டும்.

# 142 ஆண்டுகளில் இல்லாத வரலாறு காணா வெப்பம்



*இந்த ஆண்டு (2021) ஜூலை மாதம்தான் இதுவரை உலகம் பதிவு செய்த மிக வெப்பமான மாதம் என அமெரிக்க மத்திய அறிவியல் மற்றும் ஒழுங்குமுறை முகமை கூறி யுள்ளது.*

*நிலம் மற்றும் கடல் பரப்பின் ஒருங்கி ணைந்த வெப்பநிலை கடந்த 20ஆம் நூற் றாண்டின் சராசரி வெப்ப நிலையான 15.8 டிகிரி செல்சியஸை விட 0.93 டிகிரி செல்சி யஸ் வெப்பம் அதிகமாக இருந்ததாக தரவுகள் கூறுகின்றன.*

*142 ஆண்டுகளாகத் தான் உலகில் வெப்ப நிலை விவரங்கள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. எனவே தட்ப வெப்பநிலைகளை பதிவு செய்யத் தொடங்கிய காலம் முதல் 2021 ஜூலை தான் வரலாறு காணாத அதிகபட்ச வெப்ப நிலை.*

*இதற்கு முன்பு 2016 ஜூலைதான் அதிக வெப்பமான மாதமாகப் பதிவானது. அது 2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் சமன் செய்யப்பட்டது நினைவுகூரத்தக்கது.*

*இது பருவநிலை மாற்றத்தின் நீண்ட கால தாக்கம் என நிபுணர்கள் கருதுகிறார்கள்.*

*தேசிய பெருங்கடல் மற்றும் வளிமண்டல நிர்வாக அமைப்பு (NOAA) வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில், இந்த விரும்பத்தகாத ஜூலை மாத வெப்பநிலை நாம் கவலைப்பட வேண்டிய ஒன்று எனக் கூறப்பட்டுள்ளது.*

*“ஏற்கனவே பருவநிலை மாற்றம் பூமிக்கு ஏற்படுத்தி இருக்கும் சிக்கலை, இன்னும் தீவிரமாக்குகிறது இந்த புதிய அதிகபட்ச வெப்பநிலை”*

*கடந்த 2016ஆம் ஆண்டு இருந்த வெப்ப நிலையை விட இந்த 2021 ஜூலை மாதத்தில் நிலம் மற்றும் கடல் பரப்பின் வெப்ப நிலை 0.01 டிகிரி செல்சியஸ் கூடுதலாக பதிவாகியுள்ளது.*

*புவியின் வட அரைகோளத்தின் நில பரப்பின் வெப்பநிலை சராசரியாக பதிவா வதை விட 1.54 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலை கூடுதலாக பதிவாகியுள்ளது. இது 2012ஆம் ஆண்டில் பதிவான அதிகபட்ச வெப்ப நிலையை விட அதிகம் என்பது குறிப்பிடத் தக்கது.*

*2021 ஜூலை தான் ஆசிய கண்டத்தின் மிக வெப்பமான மாதமாகவும், ஐரோப்பிய கண்டத்துக்கு இரண்டாவது அதிகபட்ச வெப்பம் பதிவான மாதமாகவும் இருக்கிறது. ஜூலை 2018 தான் ஐரோப்பிய கண்டத்தில் அதிக பட்ச வெப்பமாக பதிவாகியுள்ளது என்பது நினைகூரத்தக்கது.*

*தேசிய பெருங்கடல் மற்றும் வளிமண்டல நிர்வாக அமைப்பு வெளியிட்ட செய்தி அறிக்கையில், கடந்த 2021 ஜூலை மாதத்தில் ஏற்பட்ட வானிலை மாறுபாடுகளை குறிப்பிடும் வரைபடம் ஒன்றையும் வெளியிட்டிருக்கிறது.*

*அதில் இந்த ஆண்டு உலக அளவில் ஏற்பட்ட புயல்களின் எண்ணிக்கை வழக்கத்தை விட கூடுதலாக இருப்ப தாகக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.*

*பருவநிலை மாற்றம் பூமியின் மீது இதுவரை இல்லாத அளவுக்கு பல தாக்கங்களை ஏற்படுத்துவதாக சமீபத்தில் தான் ஐ.நா அமைப்பின் அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் சில மாற்றங்களை அடுத்த சில நூற்றாண்டுகளுக்கு மாற்ற முடியாது அல்லது மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு செல்ல முடியாது எனவும் குறிப்பி டப்பட்டு இருக்கிறது.*


> **142 ஆண்டுகளாகத்தான் உலகில் வெப்பநிலை விவரங்கள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. எனவே தட்பவெப்ப நிலைகளை பதிவுசெய்யத் தொடங்கிய காலம்முதல் 2021 ஜூலைதான் வரலாறு காணாத அதிகபட்ச வெப்ப நிலை.**

*“அறிக்கையில் கூறப்பட்டிருப்பது மனித இனத்துக்கான அபாய சங்கு” என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் ஆன் டோனியோ குட்டரஸ் கூறினார்*

*“நாம் இப்போது ஒருங்கிணைந்து செயல் பட்டால், பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் அழிவை தவிர்க்கலாம். நாம் தாமதப் படுத்தவோ, குறைகூறிக் கொண்டிருப்ப தற்கோ நேரமில்லை என்பதை இன்றைய அறிக்கை தெளிவாகக் குறிப்பிடுகிறது” என கூறினார்.*

*கடந்த 2,000 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடந்த 50 ஆண்டுகளில் (1970 - களிலிருந்து) பூமியின் நிலப் பரப்பு வெப்பநிலை அதிவேகமாக உயர்ந்திருக்கிறது என அவ்வறிக்கையை எழுதியவர்கள் கூறுகிறார்கள்.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஓகஸ்ட் - 15 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம் - ஆடி 30

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 7.30 - 9.00 |
| ராகுகாலம் | : | 4.30 - 6.00 |
| திதி | : | அஷ்டமி |



## இன்றைய ராசிபலன்

**15.08.2021**

**மேடம்**
மேலதிகாரியிடம் எதிர்பார்த்த சலுகை இன்று கிடைக்கும். பக்குவமாகப் பேசி நல்ல பெயர் சம்பாதித்துக் கொள்வீர்கள். உறவினர்களின் சந்திப்பு கிடைக்கும். பிள்ளைகளால் செலவு உண்டு.

**இடபம்**
லாபம் கிட்டும் நாள். அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர். குடும்பத்தின் தேவைகளை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். உங்களை குறை சொல்லியவர்கள் இன்று பாராட்டுவர்.

**மிதுனம்**
பிரிந்தவர்கள் உங்கள் முயற்சியால் வந்திணைவர். குழப்பங்கள் தீரும். வரவேண்டிய பணம் வசூலாகும். எடுத்த முயற்சியில் வெற்றி கிட்டும். தொழில் வளம் உண்டு.

**கடகம்**
காலையில் வரும் செய்தி மகிழ்ச்சி தரும். பரபரப்பான நாள். அமைதி கூடும் நாள். பணியிடத்தில் நன்மை உண்டு. சண்டை போட்டவர் உங்கள் முயற்சிக்கு ஒத்துழைப்பு செய்வார்.

**சிம்மம்**
வாழ்க்கைத்துணையின் உடல்நலம் சீராகி மகிழ்ச்சி தரும். கலைத்துறையினருக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். முதியோர் நலனில் ஆர்வம் காட்டுவீர்கள். மகிழ்ச்சி கூடும்.

**கன்னி**
சிக்கல்கள் விலகி சிறப்படையும் நாள். உற்சாகம் கூடும். சுணக்கம் காட்டிய செயல்கள் சுறுசுறுப்பாக நடைபெறும். விட்டுப்போன வாய்ப்பு ஒன்று மீண்டும் வந்துசேரும்.

**துலாம்**
நட்பு வட்டத்தில் நல்லவர், தீயவரை அடையாளம் காண்பீர்கள். வாழ்க்கைத்துணை வழியே பணவரவு இன்று உண்டு. பெண்கள் ஆடை, அணிகலன்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**விருட்சிகம்**
நெருக்கமானவருடன் மனம் விட்டுப் பேசும் வாய்ப்பு கிட்டும். வழிபாட்டில் கூடுதல் ஈடுபாடு வரும். குடும்பம் விரிவடையும். நினைத்த விஷயத்தை முடிக்க நெருக்கமானவர்கள் உதவுவர்.

**தனுசு**
சந்தோஷச் செய்தி வரும் நாள். இழுபறியான விஷயம் முடியும். நேற்றைய பிரச்னை இன்று நல்ல முடிவிற்கு வரும். வாக்குவாதத்தைத் தவிர்ப்பீர்கள். நிம்மதி நிலைக்கும்.


**மகரம்**
எந்த விஷயத்திலும் தாமதங்கள் இருக்கும். பொறுமை தேவை. பேச்சால் நன்மை வரும். படபடப்பின்றி செயல்படுங்கள். குடும்ப ஒற்றுமை உங்களால் மேம்படும். செல்வம் சேரும்.

**கும்பம்**
உங்களின் நிர்வாகத் திறமை பளிச்சிடும் நாள். உங்களின் எண்ணம் நிறைவேறும். தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். கனிவாகப் பேசுவது நல்லது.

**மீனம்**
கடமை தவறாமல் கவனமாக இருக்க வேண்டியது அவசியம். தடைப்பட்ட வருமானம் தானாகவே வந்துசேரும். பேச்சிலும், செயலிலும் கவனமாக இருந்தால் பிரச்னை இருக்காது.

# சாமிநாத ஐயருக்குப் பின் ஓர் 'ஐயர்'

**ஈழத்துத் தமிழ்ச் சூழலில், தொடர்ச்சியாக எழுத்தரசியலை முன்னெடுத்த பத்மநாப ஐயர், இன்று தமிழ் உலகெங்கும் அறியப்பட்டவர். இப்போது அமுத விழா காண்கிறார்.**



பத்மநாப ஐயர், 1941 ஆவணி 24ஆம் திகதி யாழ்ப்பாணத்தின் வண்ணார்பண்ணையில் இரத்தின ஐயர், யோகாம்பாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர். ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் நாவலர் பாடசாலை, வைத்தீஸ்வரா வித்தியாலயம், பண்டாரவளை புனித சூசையப்பர் கல்லூரி ஆகியவற்றில் பெற்றவர். பேராதனைப் பல்கலைக்கழக பௌதீக விஞ்ஞானப் பட்டதாரி. சிறிதுகாலம் மாத்தளை ஸாஹிராக் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராகப் பணிபுரிந்தபின் காணி ஆணையாளர் திணைக்களத்தில் பிரதேச அலுவலராக பணிபுரிந்தவர். இதற்கு அப்பால் இவரது இலக்கிய ஈடுபாடு, பாடசாலைக் காலத்தில் இவருக்குக் கிடைத்த இலக்கிய நண்பர்களாலும் தீவிர வாசிப்பினாலும் முளைகொண்டது என்பர். பாடசாலைக் காலத்தின் பின்னரும் இவரது விரிந்து பரந்த இலக்கிய நண்பர்கூட்டம், இலக்கியச் செயற்பாடுகள் முதலியனவும் இவரது இலக்கியப் பயணத்தை தமிழியல்சார் பணிநோக்கித் திசைதிருப்பின. எழுத்தாளர்களுடனான தொடர்பு, நூல்கள் மற்றும் சிற்றிதழ் வாசிப்பு முதலியவற்றில் ஆர்வத்துடன் செயற்பட்டுவந்த ஐயர், கணையாழி முதலிய இதழ்களுக்கு விமர்சனபூர்வமான வாசகர் கடிதங்கள் சிலவற்றை எழுதி அதற்காகப் பரிசில்களும் பாராட்டும் பெற்றுக்கொண்டவர். அறிவொளி எனும் விஞ்ஞானச் சஞ்சிகையில (1967) 'இராமன் விளைவு' எனும் கட்டுரை ஒன்றும், வீரகேசரியின் நவீன விஞ்ஞானி எனும் பெயரில் வெளிவந்த பத்திரிகையில் விஞ்ஞானி கள் தொடர்பான சில கட்டுரைகளும், யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த மேகம் இத ழில் (ஜனவரி - பெப்ரவரி 1983) 'இரந்து நிற்கும் இரவல் தாய்நாடு' எனும் தலைப்பில் தரம்மிக்க விமர்சனக் கட்டுரை ஒன்றும் எழுதியவர்.

1965ஆம் ஆண்டு தமிழகத்தில் லஷ்மி கிருஷ்ணமூர்த்தி நடாத்திய வாசகர் வட்டத்தில் தன்னை உறுப்பினராக இணைத்துக்கொண்டதுடன் ஈழத்து எழுத்தாளர் பலரையும் அதில் இணையச்செய்தார். இந்திய மொழிச் சிறுகதைகளின் தேர்ந்த தொகுப்பாக 'மறுகதைகள்' என்ற தொகுதியை வாசகர் வட்டம் வெளியிட்டபோது "ஈழத்துப் படைப்புக்கள் சிலவற்றைத் தொகுத்து அவ்வாறானதோர் தொகுப்பினைக் கொண்டுவந்தால் என்ன?" என்று லஷ்மி கிருஷ்ணமூர்த்திக்கு ஐயர் கடிதம் எழுதினார். 1968 மார்கழியில் 'அக்கரை இலக்கியம்' என்ற தொகுதியை வாசகர் வட்டம் வெளியிட்டது. 470 பக்கங்கள் கொண்ட இந்த நூலில் அரைவாசிக்கும் மேற்பட்ட பக்கங்களை இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்கள் பிடித்துக்கொண்டன. இதில் வெளிவந்த கதைகள் தொடர்பான தெரிவில் செ. யோகநாதனுடன் இணைந்து ஐயர் செயற்பட்டார். இதற்கு முக்கிய காரணராய் அமைந்தவர் ஐயர் என்பதை, "இலங்கை எழுத்தாளர்களின் படைப்புக்களைத் தொகுப்பதில் பேரார்வம்காட்டி பல கதைகள், கட்டுரைகளின் பிரதிகளை அனுப்பிவைத்த ஸ்ரீ ஆர். பத்மநாபனுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக" எனும் அக்கரை இலக்கியம் தொகுப்பின் நூல் பதிப்புரைப் பகுதி காட்டிநிற்கிறது. பின்னர் 'ஒடுக்கப்பட்ட தமிழினத்தின் குரலை உலகறியச் செய்யவேண்டும் எனும் நோக்கில்' வெளிவந்த 'திசை' வாரப் பத்திரிகையுடன் இணைந்து செயற்பட்டார். அதன் பின்னர், 'அலை' சிற்றிதழ்சார்ந்து இயங்கி அதன் பரவலாக்கத்துக்கும் சிறப்பான வெளிவருகைக்கும் பணியாற்றினார்.



இவ்வாறு இயங்கிய ஒருவர், மாபெரும் இலக்கியச் செயற்பாட்டுக்காரராக மேலெழுவதற்கான பின்புலம்பற்றிய தேடல் மிகவும் சுவாரசியமானது. அது, நூல் மற்றும் நூலகப் பண்பாட்டுடனும் வாசிப்பு மற்றும் வாசிப்புப் பண்பாட்டுடனும் இணைவுபெற்றது.

**(பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் செல்லத்துரை சுதர்சனின் கட்டுரை ஒன்றிலிருந்து)** ■

செஞ்சோலை படுகொலை நினைவு

# படுகொலை நடந்த இடத்தில் அஞ்சலி செலுத்துவதற்கு தடை

முல்லைத்தீவு, ஒக. 15

**செஞ்சோலை படுகொலை தினத்தின் 15 ஆம் ஆண்டு நினைவேந்தல் தினம் நேற்றாகும். எனினும் படுகொலை நடந்த இடத்தில் இறந்த பிள்ளைகளுக்கு அஞ்சலி செலுத்த, பெற்றோருக்கு இராணுவத்தினரும் பொலிஸாரும் தடை விதித்தனர்.**

மேலும் முல்லைத்தீவு - வள்ளிபுனம் பகுதியிலுள்ள செஞ்சோலை பகுதியில் பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் புலனாய்வுத்துறையினர் உள்ளிட்ட பலரும் பலத்த பாதுகாப்பில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை, உயிரிழந்த மாணவிகளின் பெற்றோர் சிலர், அங்கு வருகை தந்திருந்த போதிலும், பொலிஸாரும் இராணுவத்தினரும் அந்த வளாகத்துக்குள் செல்வதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கவில்லை.

குறித்த சம்பவம் தொடர்பாக உயிரிழந்த மாணவிகளின் பெற்றோர்கள் தெரிவித்துள்ளதாவது:

"எங்களது பிள்ளைகள் உயிரிழந்த இடத்தில் தனித்தனியாகச் சென்று கூட அஞ்சலி செலுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய நிலைமை எதிர்வரும் காலங்களில் இருக்க கூடாது. அடுத்த வருடமாவது, எங்களது பிள்ளைகளுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்" என அவர்கள் தங்களது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

கடந்த 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் 14ஆம் திகதி, முல்லைத்தீவு - வள்ளிபுனம் பகுதியிலுள்ள செஞ்சோலை சிறுவர் இல்ல வளாகம் மீது விமானப் படை நடத்திய தாக்குதலில் 54 மாணவிகள் உட்பட 61 பேர் கொல்லப்பட்டனர். 129இற்கும் அதிகமான மாணவிகள் அவயவங்களை இழந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் நேற்று மேலும் ஒரு கொரோனா மரணம்!

மன்னார், ஒக. 15

மன்னார் மாவட்டத்தில் நேற்று சனிக்கிழமை காலை மேலும் ஒரு கொரோனா மரணம் நிகழ்ந்துள்ள நிலையில் மாவட்டத்தில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 11 ஆக அதிகரித்துள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி. வினோதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடந்த 9ஆம் திகதி அனுமதிக்கப்பட்ட மன்னார் கீரி பகுதியைச் சேர்ந்த 77 வயதுடைய வயோதிபர் ஒருவர் கொரோனா தொற்று காரணமாக நேற்று சனிக்கிழமை காலை உயிரிழந்தார்.

அவருக்கு ஏற்பட்ட நிமோனியா காய்ச்சல் காரணமாக சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்துள்ளார்.இந்த நிலையில்



மாவட்டத்தில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 11 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் மன்னார் மாவட்டத்தில் கடந்த 1 ஆம் திகதி தொடக்கம் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை வரையிலான 13 நாட்களில் 220 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் இவ்வருடம் மாத்திரம் 1244 கொரோனா தொற்றாளர்களும், மாவட்டத்தில் மொத்தமாக 1261 கொரோனா தொற்றாளர் தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் - என்றார்.

# ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய உற்சவம் 2022 பெப்ரவரியில்

வடமராட்சி, ஒக. 15

நாட்டில் தற்போது கொரோனா அபாயம் அதி உச்சமாக காணப்படுவதால் வரலாற்று சிறப்பு மிக்க துன்னாலை ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த உற்சவம் 2022 ஆண்டு மாசி மாதத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நடத்துவது தொடர்பாக தர்ம கர்த்தா சபை, ஆலய நிர்வாகம், திருவிழா உபயகாரர்கள் ஆகியோருக்கிடையேயான கலந்துரையால் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது.

ஆலய தற்காலிக தர்ம கர்த்தா சு.குலசேகரம் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் இறை வணக்கத்துடன் ஆரம்பமாகியதை தொடர்ந்து ஆலய பிரதம குரு சுதர்சனக் குருக்கள் ஆசியுரை இடம்பெற்றுத் தொடர்ந்தே மாசிமகத்திற்கு தீர்த்த உற்சவம் நடைபெறுவ தற்கு ஏதுவாக இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (அ-2)

# மட்டக்களப்பை மிரட்டும் கொரோனா 5 நாட்களில் 1218 பேருக்கு தொற்றுறுதி!

மட்டக்களப்பு, ஒக. 15

மட்டக்களப்பு மாவட்டத்தில் நாளுக்கு நாள் கொரோனாத் தொற்று மற்றும் மரணங்கள் அதிகரித்து வரும் நிலையில் கடந்த 5 நாட்களில் மட்டும் 1218 பேருக்கு தொற்றுறுதி செய்யப்பட்டிருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

நேற்று மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24மணி நேரத்தில் 220 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் நான்கு பேர் மரணமடைந்துள்ளனர். கடந்த ஐந்து நாட்களில் 220, 235, 342, 189, 232 என 1218 தொற்று நோயாளர்கள் அடையாளம்காணப்பட்டுள்ளதாகவும் ஒரு வாரத்திற்கு முன்னர் நூறுக்குட்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் கடந்த வாரம் தொடக்கம் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

பொதுமக்கள் ஒன்றுகூடுவதை தவிர்த்து சுகாதார நடைமுறைகளை பேணுவதன் மூலமே இந்த பரவலை கட்டுப்படுத்த முடியும் - என்றார்.

# சினோபார்ம் தடுப்பூசியை 2,000 ரூபாவுக்கு விற்ற வைத்தியசாலை ஊழியர் கைதானார்!

கொழும்பு, ஒக. 15

சினோபார்ம் தடுப்பூசியை 2,000 ரூபாவுக்கு விற்பனை செய்த வைத்தியசாலை சிற்றூழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொறட்டுவை, லுனாவ மாவட்ட வைத்தியசாலையின் சிற்றூழியரே கைதாகியுள்ளார்.

தடுப்பூசிகளை அவர் விற்பதாக கிடைத்த தகவலையடுத்து, வைத்தியசாலை நிர்வாகத்தால் அவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அவர் வைத்தியசாலையில் சிலருக்கு 2,000 ரூபாவுக்கு தடுப்பூசி செலுத்தியது தெரிய வந்துள்ளது.

# சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட ஐந்து பேர் சிக்கினர்!

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கடந்த 24 மணி நேரத்தில் குற்றச் செயல்களை தடுக்கும் நோக்கில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்ட பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்லாறு, புளியம்பொக்கணை, கல்மடு பகுதிகளில் அனுமதிப்பத்திரத்துக்கு முரணான வகையில் மணல் ஏற்றிய உழவு இயந்திரம், டிப்பர்களுடன் அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் நடைபெற்று பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# இந்தியாவில் இருந்து 100 தொன் ஒட்சிசன்

கொழும்பு, ஒக. 15

கொரோனா சிகிச்சைகளுக்கு தேவையான 100 மெற்றிக் தொன் ஒட்சிசனை, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் வாரம் ஒட்சிசனை கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# செய்தியாளர் கைது

கொழும்பு, ஒக. 15

கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திர அலுவலகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக வெளியான செய்தி தொடர்பில் லங்கா ஈ நியூஸ் செய்தியாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி பகுதியைச் சேர்ந்த கீர்த்தி ரத்நாயக்க என்பவரே இவ்வாறு கைதானதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

முன்னாள் விமானப்படை அதிகாரி கீர்த்தி ரத்நாயக்க, பாதுகாப்பு மற்றும் சர்வதேச உறவுகள் குறித்து லங்கா ஈ நியூஸ் இணையதளத்தில் வழக்கமான எழுத்தாளராக இருந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மேலும் 2,717பேர் குணமடைவு

கொழும்பு, ஒக. 15

இலங்கையில் கடந்த 24 மணிநேரத்தில் கொரோனா தொற்றில் இருந்து மேலும் 2,717 பேர் பூரண குணமடைந்துள்ளனர்.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 7 ஆயிரத்து 345 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரை கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 48 ஆயிரத்து 270 ஆக பதிவாகியுள்ளது.

அதில் 35150 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்ற அதேநேரம், கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 5,775 ஆக உயர்ந்துள்ளது.

# பாராளுமன்ற பொலிஸார் பத்து பேருக்கு கொரோனா!

கொழும்பு, ஒக. 15

கடந்த 2ஆம் திகதி தொடக்கம் தற்போது வரை பாராளுமன்ற பொலிஸ் அதிகாரிகள் 10 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர்களில் பெரும்பாலானவர்கள் வீடுகளில் சுய தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பத்திலேயே தொற்று உறுதியாகியுள்ளதாக அறியமுடிகிறது.

இந்நிலையில், பாராளுமன்ற பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் 'உயிர் குமிழி' முறை மூலம் பாராளுமன்ற பொலிஸாரை பணிக்கு அமர்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தற்போது விடுமுறையில் உள்ள பொலிஸாருக்கு விரைவான அன்ரிஜென் பரிசோதனைகளை மேற்கொள்ளவும், குறித்த பரிசோதனை முடிவுகளுக்கு அமைவாக அவர்களை பணிக்கு அமர்த்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (அ)

ஈழநாடு



# மாவட்ட எல்லைகளில் சிறப்பு வீதித் தடைகள்

## பொலிஸார் உடனடி நடவடிக்கை

கொழும்பு, ஓக. 15

**அனைத்து மாவட்டங்களின் நுழைவு மற்றும் வெளியேறும் இடங்களை உள்ளடக்கிய சிறப்பு வீதித் தடைகளை நிறுவ பொலிஸ் முடிவுசெய்துள்ளது.**

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க கண்டிப்பாக விதிக்கப்பட்ட மாகாணங்களுக்கு இடையேயான பயணக் கட்டுப்பாடுகளை மீறும் தனி நபர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்க இலக்கு வைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இந்த சிறப்பு நடவடிக்கைக்கு முப்படையினரும் பொலிஸாருடன் இணைந்து கடமையாற்றுவர் என்று அவர் குறிப்பிட்டார்.

"பொலிஸ் வீதித் தடைகள் மற்றும் மொபைல் ரோந்து எல்லைகளுக்குள் பயணம் செய்யும் நபர்களை அடையாளம் காணும், அதே நேரத்தில் மேல் மாகாணத்தின் அனைத்து நுழைவு மற்றும் வெளியேறும் சோதனைச் சாவடிகளை உள்ளடக்கிய கடுமையான வீதித் தடைகள் செயல்படுத்தப்படும்.

எல்லைகளை தாண்டி பயணம் செய்தால் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் கைது செய்யப்படுவார்கள்.

முகக்கவசம் தொடர்பான தனிமைப்படுத்தல் விதிமுறைகள் நேற்று முதல் கண்டிப்பாக விதிக்கப்படும்" என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

# போதைப்பொருளுடன் கைதாகிய மூவரில் ஒருவருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், ஓக. 15

உயிர்க்கொல்லி போதைப் பொருளான ஐஸ் மற்றும் கஞ்சாவை கடத்த முற்பட்டனர் என்று கைது செய்யப்பட்டு வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக் கப்பட்டுள்ள மூவரிடம் முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்டிஜென் பரிசோதனையில் ஒருவருக்கு கொரோனா தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அதனால் அவரை நீதிமன்றின் உத்தரவில் சிறைச்சாலை ஊடாக இடைத்தங்கல் முகாமில் சேர்க்கவும் ஏனைய இருவரையும் தனிமைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் பொலிகண்டி கடற்கரையில் கடற்படையினர் முன்னெடுத்த ரோந்து நடவடிக்கையின்போது, வாகனம் ஒன்றில் ஏற்றி கடத்த முற்பட்ட ஐஸ், கஞ்சா என்பன கைப்பற்றப்பட்டன.

அவற்றைக் கடத்த முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் மாங்குளம், கிளிநொச்சி, இரணைமடுப் பகுதியைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றபோது முன்னெடுக்கப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

# உணவுப் பொருள்கள் மீதான சிறப்பு வரி அதிகரிப்பில்லை

கொழும்பு, ஓக. 15

கருவாடு உள்ளிட்ட சில உணவுப் பொருள்களுக்கு புதிய வரி விதிக்கப்பட்டுள்ளதாக ஊடகங்களில் வெளியான செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என்று நிதி அமைச்சு விளக்கமளித்துள்ளது.

தற்போதுள்ள வரிகளின் செல்லுபடியாகும் காலம் மட்டுமே நீட்டிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நெத்தலி, கருவாடு, வெந்தயம், குரக்கன் மா, கடுகு, உப்பு மற்றும் வெண்ணெய் மீதான சிறப்பு வரி நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கருவாடு மற்றும் நெத்தலி மீதான வரி ஒகஸ்ட் 11 ஆம் திகதியுடன் முடிவடைய இருந்தது.

செப்ரெம்பர் 30 ஆம் திகதியுடன் முடிவடையும் பிற உணவுகள் மீதான வரிகளைத் தவிர வேறு எந்த புதிய வரியும் விதிக்கப்படவில்லை என்றும் நிதி அமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது





# ஐந்து கோடி ரூபா பெறுமதியான ஐஸ், கஞ்சாவுடன் மூவர் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஓக. 15

யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டு கடத்த முற்பட்ட 2 கிலோ 200 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 120 கிலோ கிராம் கஞ்சாவுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உயிர்க்கொல்லி போதைப் பொருளான ஐஸின் (பளிங்கு மெதம்பேட்டமின்) பெறுமதி 2 கோடியே 50 லட்சம் ரூபா எனவும் கஞ்சா போதைப்பொருளின் பெறுமதி 2 கோடியே 50 லட்சம் ரூபா எனவும் மதிப்பிடப்பட்டுள்ளதாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிகண்டி கடற்கரை வீதியில் வைத்து நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இந்த கடத்தல் முறியடிக்கப்பட்டது என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேக நபர்கள் 38, 34, 28 வயதுடைய மாங்குளம், இரணைமடு மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் கூறினர்.

கடற்படையினரின் வழமையான ரோந்து நடவடிக்கையின் போது பொலிகண்டி கடற்கரை வீதியில் வைத்து வாகனம் ஒன்றில் ஏற்ற முற்பட்டபோது போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டன. அவற்றை கடத்த முற்பட்டனர் என்று மூவர் கைது செய்யப்பட்டனர்.

இந்த நடவடிக்கைக்கு வல்வெட்டித்துறை பொலிஸாரும் அழைக்கப்பட்டிருந்தனர்.

கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனமும் கைப்பற்றப்பட்டது.

சந்தேக நபர்கள் மூவரும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

(அ-02)

# முன்னாள் புலி உறுப்பினர் கைக்குண்டுடன் கைது!

மட்டக்களப்பு, ஓக. 15

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட கைக்குண்டுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலுக்கமைய, மட்டக்களப்பு - ஒந்தாச்சிமடம் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது 34 வயதுடைய குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட கைக்குண்டொன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக களுவாஞ்சிக்குடி காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# "ஐந்து வினாடிகள் முகக்கவசத்தை அகற்றினால் டெல்டா தொற்றும்"

கொழும்பு, ஓக. 15

இலங்கையில் டெல்டா தொற்றின் அச்சுறுத்தல் காரணமாக அடுத்த இரண்டு வாரங்கள் மிகவும் முக்கியமானதென ஸ்ரீஜயவர்த்தனபுர, நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவத்துறை இயக்குநர் மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

இலங்கையில் டெல்டா தொற்று தற்போதுதான் ஆரம்பமாகி உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

இதன் கொடூர தன்மை எதிர்வரும் நாட்களில் எதிர்பார்க்கலாம்.

விசேடமாக எதிர்வரும் இரண்டு வாரங்கள் தீர்மானமிக்கது. வுஹான் மாறுபாட்டை விடவும் இரண்டு மடங்கு இது பரவும். 5 வினாடிகளேனும் முகக்கவசத்தை அகற்றினால் அந்த காலப்பகுதியில் வைரஸ் தொற்றிக்கொள்ளும் ஆபத்து உள்ளது.

இந்த சந்தர்ப்பத்தில் இந்த பரவலை தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இந்த நேரத்தில் உணவை குறித்து சிந்திக்க முடியாது. உயிர்களை காப்பாற்றவே உடனடியாக செயற்பட வேண்டும் - என்றார்.

# தென்மராட்சியில் அதிகரிக்கும் கொரோனா தொற்றாளர்கள்

யாழ்ப்பாணம், ஓக. 15

தென்மராட்சி - சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்டவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் 18 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நேற்று 68 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அதிவிரைவு அன்ரிஜென் பரிசோதனையின்போது 18 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்களில், சாவகச்சேரி தனியார் நிறுவன ஊழியர், கொடிகாமம் மீன் சந்தை வியாபாரி, வெளிமாவட்டங்களில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்கள், இலங்கை போக்குவரத்துச் சாலை ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் என 18 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டிருப்பதாக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, தென்மராட்சி பிரதேசத்திற்குட்பட்ட கொடிகாமம், சாவகச்சேரி, வரணி, எழுதுமட்டுவாழ்,பகுதிகளில் கொரோனா அபாய நிலை அதிகரித்திருப்பதாக சுட்டிக்காட்டியுள்ள சுகாதாரத் தரப்பினர், பொதுமக்களை மிகுந்த அவதானத்துடன் நடந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

# பாராளுமன்ற வளாக வங்கிக் கிளைக்கு தற்காலிக பூட்டு

கொழும்பு, ஓக. 15

பாராளுமன்ற வளாகத்திலுள்ள இலங்கை வங்கியின் கிளை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

குறித்த வங்கிக் கிளையில் பணியாற்றிவந்த சிலருக்கு கொரோனா அச்சுறுத்தல் ஏற்பட்டதைத் தொடர்ந்து தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

குறித்த கிளையின் உதவி முகாமையாளருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து பாராளுமன்றத்தில் பணியாற்றுகின்ற மேலும் 06 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# இன்று இந்தியாவின் 75ஆவது சுதந்திர தினம்



**யுத்த வெற்றியைத் தொடர்ந்து, பிரிட்டனின் கிழக்கு இந்திய கம்பனி இந்தியாவில் அதன் ஆட்சியை 1757 தொடங்கியது. முதலாம் உலக மகா யுத்த காலத்தில், இந்திய விடுதலை இயக்கத்தை மகாத்மா காந்தி ஆரம்பித்தார். சுமார் 200 ஆண்டுகள் நீடித்த பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து, 1947 ஒகஸ்ட் 15ஆம் திகதி இந்தியா சுதந்திரம் பெற்றது.**

## சுகமான கற்பனை, சோகமான நிஜம்!

**எல்லா அரசியல்வாதிகளும் நியாயமாக, நேர்மையாக நடந்துகொண்டிருந்தால் இந்தியா இன்று எவ்வளவோ மேன்மையான நிலையில் இருந்திருக்கும்**



**சென்னையிலிருந்து ஆர். நடராஜன்**

பிறந்தது 1947இல். பட்ட மேற்படிப்பு 1968இல். அதே வருடம் வேலை. 2006இல் ஓய்வு. சரி, ஏதோ பென்ஷன் வாங்கிக்கொண்டு வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பார் என்று நினைக்கிறீர்கள் அல்லவா? அதுதான் இல்லை. வேலை செய்த காலத்தில் இவர் எக்கச் சக்கமாகக் கடன் வாங்கினார். சீட்டாட்டம், ரேஸ், அயல் அக உறவு, ஊர் சுற்றல் என்று பல கெட்ட பழக்கங்கள் இருந்தன. வாங்கிய கடனுக்கு இவரது தங்க இருப்பு அடகு வைக்கப்பட்டது. பிறகு பெரியவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகத் தங்கத்தை மீட்டார்கள். ஆனால், கடன் எக்கச் சக்கமாக இருக்கிறது. பிள்ளைகள், பேரர்கள் எவ்வளவுதான் சம்பாதிப்பது, எப்படிக் கடனை அடைப்பது என்று சஞ்சலத்திலேயே காலம் தள்ளுகிறார்கள். கடனோ கூடிக்கொண்டே போகிறது.

வருடம் 1947 என்றதும் புரிகிறதா? இது ஒரு தனி நபர் கதை அல்ல, ஒரு குடும்பத்தின் கதையுமல்ல. நம் நாட்டின் கதை. இதில் ஒரு வேதனை என்ன தெரியுமா? ஒரு தனி நபருக்குத் தன் குடும்பத்தை இந்த நிலைக்குக் கொண்டுவந்துவிட்ட குற்ற உணர்வு கொஞ்சமாவது இருக்கும். வெளியே வீறாப்பாகப் பேசினாலும் மனிதர் உள்ளுக்குள் அழக்கூடும். ஆனால், நம் நாட்டின் குடும்பத் தலைவர்களான ஆட்சியாளர்களுக்கு அப்படி எந்தக் குற்ற உணர்வும், மனச்சாட்சித் தொந்தரவும் இல்லை. நிம்மதியாக இருக்கிறார்கள்.

இதை இடித்துச் சொல்பவர்கள் யாரும் இல்லையா? எதிர்க் கட்சித் தலைவர்களில் சிலர் சொல்கிறார்கள். பொருளாதார அறிஞர்களும் நிதி நிர்வாக விவகாரங்களை அறிந்த சில பத்திரிகையாளர்களும் எழுதுகிறார்கள். ஆனால், ஆள்பவர்கள் எதையும் கேட்பதில்லை. சம்பளத்தில் வாண வேடிக்கைச் செலவு, ஊர் சுற்றும் செலவு் உற்சாக பானச் செலவு என்று காலி செய்துவிட்ட தகப்பன், சாப்பாட்டுக்கு அரிசி இல்லை, பருப்பு இல்லை என்று நண்பர்களிடமோ உறவினர்களிடமோ கடன் கேட்டால் அந்த ஊதாரித் தகப்பனைப் பார்த்துக் காறித் துப்பமாட்டீர்களா? நாக்கைப் பிடுங்கிக்கொள்கிற மாதிரி நான்கு கேள்விகளைக் கேட்கமாட்டீர்களா? மனிதன் தானா என்ற கேள்வியையாவது கேட்க மாட்டீர்களா? ஆனால், அதே வேலையைச் செய்துள்ள பிரதமர்களையும் முதல்வர்களையும் மற்ற மந்திரிகளையும் யார் இப்படிக் கேட்கிறார்கள்? பல எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு அந்த யோக்யதை இல்லை. முன்பு ஆட்சியில் இருந்தபோது இதே குற்றத்தைச் செய்தவர்கள் அவர்கள். மீண்டும் ஆட்சிக்கு வந்தாலும் இதே குற்றத்தைச் செய்யப்போகிறார் கள். அடுப்புக் கரியைப் பார்த்து நிலக்கரி 'நீ கறுப்பு' என்று சொல் வது போன்றது இது. வருமானத்தில் வெட்டிச் செலவுகள், இலவசங்கள், மானியங்கள் எவ்வளவு? அவசியச் செலவு என்ன? மத்திய அரசு அல்லது வேறு தேசிய, சர்வதேச நிதி அமைப்புகளிலிருந்து நேரடியாக, மறைமுகமாக வாங்கிய கடன் தொகை எவ்வளவு? தகவல்கள் முழுமையாகத் தரப்படுவதில்லை. கிடைக்கும் தகவல்களும் பாரபட்ச மின்றி விவாதிக்கப்படுவதில்லை. நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழித்து தம்மை வளப் படுத்திக்கொள்ளும் சுயநல அரசியல்வாதிகளிடையே இப்போது சிக்கிக் கொண் டுள்ள இந்திய பொருளாதாரம், படாதபாடுபடுகிறது. நாட் டின் பொருளாதாரம் இதையும் மீறி உண்மையான குடிமக் களின் உழைப்பினால் ஓரளவுக்குத் தாக்குப் பிடித்து வருகிறது. ஆனால், எல்லா அரசி யல்வாதிகளும் நியாயமாக, நேர்மையாக நடந்துகொண் டிருந்தால் இந்தியா இன்று எவ்வளவோ மேன்மையான நிலையில் இருந்திருக்கும். இது சுகமான கற்பனை. சோகமான நிஜம்.

இவ்வளவு கூத்துக்களிடையே அரசாங்கத்தின் ஆடம்பரச் செலவுகள், ஆட்சியாளர்களின் ஊதாரிச் செலவுகள், அவற்றைத் தடுத்து நிறுத்தும் நேர்மைத் திறம் இல்லாத பல கூட்டுக் களவாணி அதிகாரிகள், அலுவலர்கள் இருக்கிறார்கள். எங்கே போகிறது நாடு? என்ன தீர்வு தரப்போகின்றன தேர்தல்கள்? கொள்ளையடிக்க விரும்பு பவர்களே அதைத் தருகிறேன், இதைத் தருகிறேன் என்கிறார்கள். இந்தக் குற்றச்சாட்டை நாம் ஒரு கட்சிமீதோ ஒரு கூட்டணிமீதோ சுமத்திவிட முடியாது. ஊழலில் எல்லோரும் ஒரே ரகம்தான். ஓர் அணி சத்துணவுடன் கோழி முட்டை தருவேன் என்றால் இன்னொன்று குதிரை முட்டை போடுவேன் என்கிறது. அரசு பஸ்கள் நஷ்டத்தில் ஓடுகின்றன. இலவசங்களைத் தருபவர்களும் மக்களின் இந்த சபலத்தைச் சரியாக எடை போட்டவர்களே. தமிழ் நாட்டுப் பெண்களுக்கு மிக்ஸி, கிரைண்டர் இல்லாமலா போய்விட்டது? வருகிறதென்றால் விடுவானேன் என்ற நினைப்புதானே? பெரியவர்களுக்கு பஸ், பெண்களுக்கு மிக்ஸி, இளவட்டங்களுக்கு லப்ரொப். எதிர்க்கட்சிகள் இனி என்னதான் கத்தினால்தான் என்ன, இந்த இலவசங்களுக்கு என்று வாக்குகள் விழாமலா போகும்? அவர்கள் இனி இதேபோன்று வேறு சில வாக்குகளைத் தரவேண்டியதுதான். வேறு வழி...?

விவரமறிந்த வாக்காளர்களும் நாட்டை நினைத்தா வாக்களிக்கிறார்கள், தம் வீட்டை நினைத்துத்தானே? நாட்டின் நிர்வாகப் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளும் ஆட்சியாளர்களே தங்கள் வீட்டுக்காக நாட்டை அடகு வைக்கும்போது வாக்காளர்கள் மட்டும் வீட்டை மறந்து நாட்டை நினைத்து வாக்களிக்கவேண்டுமென்று எதிர் பார்ப்பது நியாயமா? சில வருடங்களுக்கு முன்பு சின்ன ஊழல்கள் பற்றிய செய்திகள் வெளிவந்தபோது முதியவர்கள் சொன்னார்கள், "இதற்கு வெள்ளைக்காரனே பரவாயில்லை." சம வயதுக்காரர் கேட்டார், "இப்போதும் வெள்ளைக்காரர் ஆளவில்லை என்று சொல்ல முடியுமா? பாலினம் மாறியிருக்கிறது. பன்மை ஒருமையாகியிருக் கிறது. அவ்வளவுதானே".

**(16 ஆம் பக்கம் பார்க்க....)**

## வேந்தனும் அல்லவை செய்யான்!

இந்திய சுதந்திர தினத்தில் எழுகின்ற சிந்தை

**மு. நித்தியானந்தன்**

**இரண்டாயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன் ஆதி சீனத் தத்துவஞானி ஷாங் யாங், தன்கால அரசியல் நிலையைப் பின்வருமாறு கூறுகிறார்:**

"அரசாங்கத்தின் சகல கௌரவங்களும் பதவிகளும் இராணுவ சேவையில் இருந்தவர்களுக்கும், யுத்தத்தில் சாதனை புரிந்தவர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகின்றன. அரச வம்சத்தைச் சேர்ந்தவர்களுக்குக்கூட இராணுவ சேவையின் அடிப்படையிலேயே தரம்பிரிக்கப்படுகிறது. இராணுவ அந்தஸ்து இல்லாத உயர் குடிப்பெருமக்கள் மிகச் சாமானியராகவே தரமிறக்கப்படுகின்றனர். இதன் நோக்கம் எல்லாம் ஒன்றுதான். பசிகொண்ட ஓர் ஓநாய் ஓர் இறைச்சித் துண்டைப் பார்ப்பதுபோல, மக்கள் ஒரு யுத்தத்தைப் பார்க்க வைப்பதுதான். கௌரவம் பெறுவதற்கும், செல்வந்தராவதற்கும் ஒரேவழி யுத்தம் என்றானதும், யுத்தம் ஒன்றைக்கேள்விப் பட்டதுமே மக்கள் ஒருவரை ஒருவர் பாராட்டிக்கொள்ள ஆரம்பித்துவிடுகிறார்கள். வீடுகளிலும் வீதிகளிலும், சாப் பிடும்போதும் குடிக்கும்போதும், அவர்கள் பாடும் பாடல்கள் அனைத்தும் யுத்தம் பற்றிய பாடல்களாகவே இருக்கின்றன. மக்களை யுத்தபோதையில் திளைக்கவைக்க முடியுமானால், ஓர் ஆட்சியாளன் மன்னர்களின் மன்னராகிவிடுகிறான்."

அவர்கள், ஆயிரம் ஆண்டுகாலம் நிலைபெறக்கூடிய அரச வம்சத்தை உருவாக்கும் கனவில் மிதக்கிறார்கள். ஆனால், அவர்கள் கண்முன்னாலேயே தமது ஆட்சிக்கெதிரான பெருங் கிளர்ச்சிகளைப் பார்க்கிறார்கள்.

பின்னாளில், மக்களின் வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் ஆளுகையைத் திணிக்கும் அதிகார அரசுக்கெதிராக கொள்கைப் பிரகடனங்களை வெளியிட்ட தத்துவதரிசிகளையும் நாம் காண முடிகிறது.

ஷாங் யாங்கிற்குப் பின் இருநூறு ஆண்டுகள் கழிந்த நிலையில், பெரும் புரட்சியின்பின் ஜெனரல் சாவோ என்பவர், சீனாவின் பெரும் மக்கள் தொகையைக் கொண்டதும், பொருளாதார வளர்ச்சிகண்டதுமான ஒரு பகுதியின் ஆளுநராக நியமிக்கப்பட்டபோது, அவர் தனக்கு ஆலோசகராக ஒரு முதிர்ந்த தத்துவ ஞானியை அணுகினார். அவரோ, லாவோ ட்சு என்ற சீனத்துப் பேரறிஞனின் சீடனாவார். எழுபது பெரு நகர்களைக்கொண்ட அந்த ராஜ்யத்தை ஆளுவதற்குச் சிறந்த வழி, ஒன்றுமே செய்யாமல், மக்களை அவர்கள்பாட்டில் நிம்மதியாக இருக்கவிடுவதுதான் என்று அந்த தத்துவஞானி கூறினார். அவரது வார்த்தையைப் பொன்னேபோல் போற்றி அந்த ஆளுநர் ஒன்பது ஆண்டுகள் அந்த ராஜ்யத்தை நிர்வகித்தார்.

மக்கள் அந்த நிர்வாகத்தில் செழிப்பாயிருந்தனர். அவரது நிர்வாகம் சீன சாம்ராஜ்யத்தில் பெரிதும் சிலாகிக்கப்பட்டது.

"நாட்டில் கட்டுப்பாடும் தடைகளும் அதிகரிக்கும்போது
மக்கள் மேலும் மேலும் ஏழைகள் ஆகிறார்கள்.
மக்களிடம் கூரிய ஆயுதங்கள் புழங்கும்போது
நாட்டில் குழப்பங்கள் தலைவிரித்தாடுகின்றன.
மக்களிடம் கலையும் கைவினையும் அதிகரித்தால்
அந்த அளவு விநோதப்பொருட்கள் உருவாகின்றன.
நாட்டில் சட்டதிட்டங்கள் அதிகரிக்கையில்
கொள்ளையர்களும் திருடர்களும் பெருகுகிறார்கள்"
- என்கிறார் லாவோ ட்சு.

"யாண்டு பலவாக நரையில..." என்று தொடங்கும் புறநானூற்றுப்பாடல் ஒன்று உண்டு. பிசிராந்தையார் பாடியது.


வயதாகியும் தலையில் நரையின்றி வாழ்வதன் காரணம் என்ன என்று கேட்டபோது அவர் கூறுகிறார்.

என் மனைவி சிறந்தவள். என் பிள்ளைகள் அறிவு நிறைந்தவர்கள். என்னிடம் பணிபுரிவோர் நான் எண்ணுவதுபோல் பணியாற்றுபவர்கள். என் மன்னன் தீமைகள் செய்யாதவன். எங்களைக் காப்பவன். பணிவும் அடக்கமும் கொண்ட உயர் கொள்கையைக்கொண்டு வாழும் சான்றோர்கள் பலர் என் ஊரில் இருக்கிறார்கள்.

**எத்தகைய நாடு அது!**

காந்தியும் நேருவும் அம்பேத்கரும் அரசியல் பயணம் செய்த தேசத்தில் - உலகிற்கு ஞானஒளி பரப்பிய மண்ணில், அறங்களும் மனித விழுமியங்களும் சரிந்துகொண்டிருப்பதைக் காண்கையில் மனதில் ஏக்கம் சூழ்கிறது. புத்த பகவானைக் கண்ட இடத்திலெல்லாம் சிலை வைத்து வணங்கும் ஒரு தேசம், ரத்தக் களரியில் உறைந்து கிடக்கிறது.

"வேந்தனும் அல்லவை செய்யான்" என்று பிசிராந்தையார் சொன்ன தேசம் எதுவோ?




# இந்திய இலக்கை தோற்கடிக்குமா இலங்கை, மாலைதீவு இராஜதந்திரம்?

பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம்

**"இந்தியாவும் தென்னாசிய நாடுகளும் பிராந்திய ரீதியில் அதிக முரண்பாடுகளை கொண்டதாக விளங்குகின்றன. சுதந்திர இந்தியாவின் பாகிஸ்தான் முரண்பட்டது போல் பனிப்போருக்கு பின்னான காலப்பகுதியில் ஏனைய தெற்காசிய நாடுகளும் இந்தியாவோடு முரண்பட்டு செயல்படுகிறன. அத்தகைய முரண்பாட்டை கையாளும் விதத்தில் 2014ஆம் ஆண்டு முதல் இந்தியா, இலங்கை மற்றும் மாலைதீவுடன் இணைந்து இந்து சமுத்திர பாதுகாப்பு ஒத்துழைப்பு அமைப்பு ஒன்றை பலப்படுத்தி வருகிறது. ஆனாலும், அத்தகைய ஒத்துழைப்பு பலவீனமானதாக அமைந்த போதும் 2020ஆம் ஆண்டுக்கு பின்னர் இரு நாடுகளினதும் ஒத்துழைப்பு இந்தியாவிற்கு கிடைத்திருப்பதோடு மொறீசியஸ் தீவிலும் தனது கடற்படை பலத்தை நிறுவுவதிலும் இந்தியா வெற்றி கண்டு வருகிறது. இந்தக் கட்டுரை 04.08.2021 இலங்கை மாலைதீவு என்பவற்றுடனான இந்தியாவின் இணைய வழி உரையாடல் ஏற்படுத்தியுள்ள முக்கியத்துவத்தை தேடுவதாக உள்ளது."**

இந்தியா, மாலைதீவு மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு இடையிலான உயர்மட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பங்குபற்றிய இணையவழி மாநாட்டுக்கு இலங்கையின் இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தலைமை தாங்கினார். இந்தியாவின் பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பங்கஜ் சரண் மற்றும் மாலைதீவு தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அலுவலகத்தின் செயலாளர் ஷசாத் நூசின் வாஹித் ஆகியோர் பங்கேற்றனர். இந்த மாநாட்டில் பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான நான்கு விடயங்களில் மூன்று நாடுகளும் ஒத்துழைக்க இணங்கியுள்ளன. குறிப்பாக கடல்சார் பாதுகாப்பு, ஆழ்கடல்சார் பாதுகாப்பு, பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் சைபர் பாதுகாப்பு என்பவற்றில் மூன்று நாடுகளும் தமக்குள் ஒத்துழைப்பை பலப்படுத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்து சமுத்திர பிராந்தியத்தின் கடல்சார் பாதுகாப்பை மேம்படுத்துவதை இலக்காக கொண்ட இந்த மாநாடு இந்தியாவினதும் அதன் கடல் பாதுகாப்பினதும் முக்கியத்துவத்தை அதிகம் பிரதிபலிப்பதாக விளங்குகிறது. அதேநேரம் இந்தப் பிராந்தியத்தில் சீனாவின் பிரசன்னம் மாலைதீவு மற்றும் இலங்கையோடு சீனா கடல்சார் பொருளாதாரத்தில் கொண்டுள்ள ஈடுபாடும் இதற்கு பின்னாலுள்ள முக்கிய காரணமென்றும் வாதிடப்படுகிறது.

2020 டிசம்பரில் இடம்பெற்ற மாநாட்டில் முன்னெடுக்கப்பட்ட தீர்மானங்கள் இந்து சமுத்திர பிராந்தியத்தின் பாதுகாப்பையும் குறிப்பாக புலனாய்வு பரிமாணத்தையும் முதன்மைப்படுத்தி இருந்தது. அத்தகைய மாநாட்டில் ஒவ்வொரு நாட்டினதும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் கலந்து கொண்டதோடு ஆறு வருடங்களுக்குப் பின்னரான சந்திப்பாகவும் காணப்பட்டது. அந்த மாநாட்டில் கடல்சார் அழிவுகளிலிருந்து பாதுகாப்பை ஏற்படுத்தல், ஆள் கடத்தலை தடுத்து நிறுத்துதல், குற்றச்செயல்களை தடுத்தல் பயங்கரவாதம் அல்லது தீவிரவாதத்தை ஒழித்தல், சைபர் தாக்குதலை தடுத்தல் என்ற தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டன. இதன் பிரகாரம் மூன்று நாடுகளுக்குமிடையே விசேட யோசனைகள் மற்றும் ஒத்துழைப்புக்கள், கூட்டுப்பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டதென இந்திய தரப்பு முன்மொழிந்திருந்தது.

இந்து சமுத்திர பிராந்திய பாதுகாப்பை அடிப்படை இலக்காக கொண்டு முன்னெடுக்கப்பட்ட இந்த சந்திப்பு குவாட் நாடுகளையும் இந்தப் பாதுகாப்பு ஒத்துழைப்பு விவகாரங்களில் ஈடுபடுத்துவதில் கரிசனை கொண்டிருந்தமையையும் அவதானிக்க முடிந்தது. இவ்வாறு இந்தியா தொடர்ச்சியான நெருக்கடிகளின் மத்தியிலும் மாலைதீவு மற்றும் இலங்கையுடனான நட்புறவை பலப்படுத்துவதில் அதிக கரிசனை கொண்டு இயங்குவதற்கான காரணங்களை விளங்கிக் கொள்ளுதல் அவசியமாகும்.

முதலாவது, இந்து சமுத்திர பாதுகாப்பு என்பது இந்தியாவின் பாதுகாப்பிற்கானது. ஏனைய சிறிய நாடுகளுடன் ஒப்பிடும் போது இந்தியாவின் தனித்துவமும் அதன் பாதுகாப்பு எல்லைகளும் பலமானதும் வலுமிக்கதாகவும் காணப்பட வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது. அத்தகைய ஒரு சூழல் என்பது இந்தியாவின் இருப்பையும் அதன் எதிர்காலத்தையும் பாதுகாப்பதாகவே அமையும். மாலைதீவும் இலங்கையும் இந்தியாவின் புவிசார் அரசியல் இருப்புக்கான கொல்லைப்புற நாடுகள் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

இரண்டாவது, சீனாவிற்கு எதிரான நகர்வு என்பது இந்து சமுத்திரத்தை நோக்கிய இந்தியாவின் நகர்வாகவே அமைந்திருத்தல் வேண்டும். இந்து சமுத்திரத்தினூடாக இந்தியாவை நெருக்கடிக்குள் உள்ளாக்க முடியுமென்று வல்லரசுகள் கணிப்பிட்டுள்ளன. அதாவது, இந்தியாவை பாதுகாப்பதும் இந்து சமுத்திரம். அதேவேளை இந்தியாவை நெருக்கடிக்குள்ளாக்குவதும் இந்து சமுத்திரம் என்ற வகையில் சீனாவும் பிற வல்லரசுகளும் இந்து சமுத்திரத்தை கையாள முற்படுகின்றன. அதனை தடுத்து நிறுத்தவதே இந்தியாவின் இன்னோர் உபாயமாகும்.

மூன்றாவது, குவாட் நாடுகளின் இந்தோ - பசுபிக் உபாயம் என்பது இந்து சமுத்திரத்தின் மையப்பகுதியான இலங்கையையும் மாலைதீவையும் உள்ளடக்கி உள்ளது. இந்தியாவின் தொடர்ச்சியான நகர்வுக்கு ஒத்துழைப்பு வழங்கும் விதத்தில் அவுஸ்திரேலியா, ஜப்பான், தென் கொரியா, அமெரிக்க போன்ற நாடுகள் மாலைதீவிலும், இலங்கையிலும் அதீத ஒத்துழைப்பை ஏற்படுத்தும் விதத்தில் செயல்பட்டு வருகின்றன. கடந்த 2020 ஆம் அண்டுக்கு பின்னர் குவாட் நாடுகளில் பொருளாதார ஒத்துழைப்பு, இராணுவ ரீதியிலான பரிமாற்றம், கடன் மற்றும் நன்கொடை ஒத்துழைப்பு, கோவிட் தொற்றுக்கு எதிரான தடுப்பூசி ஒத்துழைப்பு என பல்வேறுபட்ட பரிமாணங்களில் இத்தகைய உறவு பலப்படுத்தப்பட்டு வருகின்றது. இதனால் குவாட் நாடுகளிடையே மாலைதீவு மற்றும் இலங்கை தொடர்பில் தூரநோக்கிலான ஒத்துழைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கான ஒரு முகாந்திரமாகவே இந் தியா- இலங்கை- மாலைதீவு உறவை கருதுகிறது.

நான்காவது, இந்தியா 2018இல் திட்டமிட்டு 2021இல் மொறீசியஸ் தீவுக்கூட்டத்தில் அகேலக தீவில் கடற்படை தளமொன்றை இந்தியா கட்டமைத்து வருகிறது. இந்தக் கடற்படை




தளம் விமான ஓடுபாதைகளை கொண்டிருப்பதுடன் ஏறக்குறைய 3 கி.மீ பரப்பளவில் இந்தக் கடற்படை தளம் கட்டமைக்கப்பட்டுள்ளது. இரண்டு பிரதான இறங்கு துறைகளை கொண்ட புலனாய்வு தகவல்களை பரிமாற்றுவதற்கான வாய்ப்புக்களையும் மொசாம்பிக் கால்வாய் பகுதியிலிருந்து தென்மேற்கு இந்து சமுத்திரத்தை அண்டிய பிரதேசத்தை நோக்கி விமான மற்றும் கடற்படை விஸ்தரிப்புக்கான திட்டத்தை கொண்டு இந்தக் கடற்படை தளத்தை இந்தியா உருவாக்கி வருகிறது.

இது பெருமளவுக்கு இந்தியாவை இந்து சமுத்திரம் நோக்கிய விஸ்தரிப்பையும் சீனாக்கு எதிரான நிலைப்படுத்தலையும் இராணுவம் மற்றும் கடற்படை ரீதியிலான வாய்ப்புக்களையும் பலப்படுத்தக்கூடியதாக அமைய வாய்ப்புள்ளது. ஏற்கனவே, மொறீசியஸ் தீவு, சிசில்ஸ் தீவு போன்றவை இந்து சமுத்திர விளிம்பு நாடுகள் பார்வையாளர் அந்தஸ்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இந்தியா சிசில்ஸ் தீவிலும் தனது கடற்படை உருவாக்கத்தை மேற்கொள்வதற்கான நகர்வுகளை அவதானிக்க முடிகிறது.

எனவே, 21ஆம் நூற்றாண்டின் ஆளுகை என்பது இந்து சமுத்திரத்தை மையப்படுத்தியது என்ற எண்ணத்திற்கேற்ப சீனாவின் பட்டி மற்றும் சாலை முன்முயற்சியும், குவாட் நாடுகளின் இந்தோ - பசுபிக் உபாயமும், இந்தியாவின் இந்து சமுத்திர பாதுகாப்பும் ஏறத்தாழ ஒரே இலக்கை அடிப்படையாகக் கொண்டு நகர்த்தப்படுகிறது. சீனாவுடனான இலங்கையினதும் மாலைதீவினதும் நட்புறவை தகர்த்து இந்தியா இந்து சமுத்திர பாதுகாப்பை உருவாக்கும் முயற்சியில் கரிசனை கொள்ள ஆரம்பித்துள்ளது. ஏறக்குறைய 2005ஆம் அண்டு காலப்பகுதியில் சீனா, தென்மேற்கு இந்து சமுத்திர பிராந்தியத்தில் தனது கடற்படை விஸ்தரிப்பை உறுதிப்படுத்தியுள்ளது. அத்தகைய பலமான சூழலை சீனா கொண்டுள்ள போது இந்தியாவின் நகர்வு அதிக மாற்றத்தை ஏற்படுத்துமா என்பதும், மாலைதீவு மற்றும் இலங்கை போன்ற நாடுகளின் இராஜதந்திர நகர்வுக்குள் இந்தியாவின் இலக்கு தோற்கடிக்கப்படுமா என்பதுவும் கேள்விக்குரிய ஒன்றாகும்.

குறிப்பாக, இலங்கை ஆட்சியாளர்கள் புவிசார் அரசியல் ரீதியாக இந்தியாவுடன் ஒத்துழைத்தல் என்பது தவிர்க்க முடியாததென்பதை உணர்ந்து இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பை ஓர் உபாயமாக முன்னிறுத்தியுள்ளது. மாலைதீவு அமெரிக்காவுடன் பாதுகாப்பு உடன்பாடுகளை செய்து கொண்ட போதும் சமதளத்தில் இலங்கை போன்று சீனாவுடன் நெருக்கமான பொருளாதார மற்றும் கடல் சார் பாதுகாப்பு ஒத்துழைப்புக்களை கொண்டுள்ளது. எனவே, இந்தியாவின் இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பு நோக்கிய இலக்கு என்பது இரு நாடுகளின் உபாயங்களுக்குள் அகப்பட்டுள்ளது என்பது மட்டுமன்றி குவாட் நாடுகளின் நலனுக்குள்ளும் தங்கியிருப்பது என்பதுவே யதார்த்தமான வாதமாகும்.

-நன்றி: அருவி

ஈழநாடு



# 'இரும்பு மனிதர்' நாகநாதன்



**மறைவின் 50 வருட நிறைவில் ஓர் அஞ்சலிக் குறிப்பு**

> **“நாகநாதனின் தலையில் ஒரு பொலிஸ்காரர் தாக்கியபோது அவரின் குண்டாந்தடி இரண்டாக வெடித்து நிலத்தில் வீழ்ந்தது. அதில் ஒரு துண்டை எடுத்துச்சென்ற நாகநாதன் வீட்டில் நிலைவுச் சின்னமாக வைத்திருந்தார். இந்த சம்பவம் அவருக்கு தமிழர்கள் மத்தியில் செல்வாக்கை அதிகரித்தது. அதன் பின்னரே அவர் இரும்பு மனிதர் என்று புகழப்பட்டார்.”**

*வைத்திய கலாநிதி இ.மு.வி.நாகநாதன் நல்லூர் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றத்தின் மேல் சபையான செனட் சபையின் உறுப்பினருமாவார். தந்தை செல்வாவுடனும் சி.வன்னியசிங்கத்துடனும் சேர்ந்து 1949 டிசம்பரில் தமிழரசு கட்சியை ஆரம்பித்த தாபக உறுப்பினர்களில் ஒருவர். அந்த கட்சியின் இரும்பு மனிதர் என்று அவர் வர்ணிக்கப்பட்டார்.*

*சென்னையில் 1901 ஜனவரி 31 பிறந்த நாகநாதன் தனது 70 வது வயதில் 1971 ஆகஸ்ட் கொழும்பில் காலமானார். அவர் மறைந்து 50 வருங்கள் கடந்துவிட்ட நிலையில் அவரது வாழ்வையும் தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் அவரின் பங்களிப்பையும் சுருக்கமாக இந்த கட்டுரை திரும்பிப்பார்க்கிறது.*

*நாகநாதன் குடும்பம் யாழ்ப்பாணம் நல்லூரை சொந்த இடமாக கொண்டிருந்தபோதிலும் அவரின் தந்தை சென்னை பல்கலைக்கழகத்தில் நிர்வாக பொறுப்பில் பணிபுரிந்ததினால் அவர் சென்னையில் பிறந்து சென்னை மருத்துவ கல்லூரியிலும் இங்கிலாந்து கைஸ் வைத்தியசாலையில் தனது மருத்துவ பட்டம் மற்றும் மேல்பட்டங்களை பெற்று 1930 ஆம் ஆண்டு கொழும்பில் தனது மருத்துவப் பணியினை தொடங்கினார். இவர் அளவெட்டியை சேர்ந்த ஜோன் வேட் பொன்னையா சேநாதிராஜாவின் மகளான இரத்தினபூபதியை மணந்து இலட்சுமி, இலங்கை, ஜோன், நிர்மலா மற்றும் இந்திரா ஆகிய ஐந்து பிள்ளைகளின் தந்தையானார்.*

*தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்கான வன்முறையற்ற சத்தியாக்கிரக போராட்டத்தின் துணிச்சலும் அர்ப்பணிப்பு உணர்வும் மறக்கப்படமுடியாதவை. அந்த போராட்டத்தின் தலைவர்களில் நாகநாதன் ஒருவர். தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கான அரசியல் தீர்வாக சமஷ்டி கோட்பாட்டை அறிமுகப்படுத்துவதில் முன்னின்றவர்களில் அவரும் ஒருவர். அந்த கோட்பாட்டை தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பரப்புவதற்காக பெருவாரியான கட்டுரைகளையும் கைநூல்களையும் எழுதியவர் நாகநாதன்.*

### அரசியல் செயல்பாடு

*நாகநாதனின் அரசியல் ஆர்வம் இலட்சியவாதத்தினால் தூண்டப்பட்டதாகும். பின்தங்கிய மக்கள் பிரிவினரின் நலன்கள் மீது மிகுந்த அனுதாபமும் அக்கறையும் கொண்டவரான நாகநாதன் சோசலிஸ்டுகள், இடதுசாரிகளுக்கு ஆதரவானவர். சமசமாஜ கட்சியின் எட்மண்ட் சமரக்கொடி, கம்யூனிஸ்ட் கட்சியின் டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்க போன்ற பல இடதுசாரி தலைவர்கள் அவரின் நெருக்கமான நண்பர்களாக இருந்தபோதிலும் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தினால் 1944 ஆரம்பிக்கப்பட்ட அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியில் முதலில் இணைந்த நாகநாதன் குறுகிய காலம் அந்த கட்சியின் பொதுச் செயலாளராகவும் பணியாற்றினார்.தமிழ் காங்கிரஸை பிரதி நிதித்துவப்படுத்தி செனட் சபை உறுப்பினராகவும் அவர் நியமிக்கப்பட்டார்.*

*பிறகு தந்தை செல்வாவுடனும் வன்னியசிங்கத்துடனும் இணைந்து 1949 டிசம்பரில் இலங்கை தமிழரசு கட்சியை ஆரம்பித்து தாபக உறுப்பினர்களில் ஒருவராக நாகநாதன் விளங்கினார்.மத்திய மலைநாட்டின் தேயிலை தோட்டங்களில் வேலை செய்த இந்திய வம்சாவளி தமிழர்களின் குடியுரிமையையும் வாக்குரிமையையும் டி.எஸ்.சேனநாயக்க தலைமையிலான அரசாங்கம் கொண்டுவந்த பிரஜாவுரிமைகள் சட்டம் பறித்தெடுத்த பின்புலத்திலேயே தமிழரசு கட்சி உதயமானது.அந்த சட்டத்துக்கு ஆதரவாக ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்துடன் சேர்ந்து தமிழ் காங்கிரஸ் பாராளுமன்றத்தில் வாக்களித்தது. அதை எதிர்த்த தந்தை செல்வாவும் நாகநாதனும் வன்னியசிங்கமும் தமிழ் காங்கிரஸில் இருந்து விலகி தமிழரசு கட்சியை ஆரம்பித்தனர்.*

*குறிப்பிட்ட காலகட்டத்துக்கு தமிழரசு கட்சியின் பொதுச்செயலாளராக பணியாற்றிய நாகநாதன் 1966 ஆம் ஆண்டு அதன் தலைவரானார். 1960 மார்ச் பொதுத்தேர்தலில் நல்லூர் தொகுதியில் போட்டியிட்ட அவர் வெற்றிபெற்றார். 1960 ஜூலை, 1965 பொதுத்தேர்தல்களில் போட்டியிட்டு அவர் மீண்டும் மீண்டும் நல்லூர் தொகுதியில் இருந்து பாராளுமன்றத்துக்கு தெரிவானார்.*

### சமஷ்டி தீர்வு

*சமஷ்டி வகைமாதிரியுடன் 1848 நிறுவப்பட்ட சுவிஸ் சம்மேளனத்தின் முன்மாதிரியினால் நாகநாதன் பெரிதும் கவரப்பட்டார். தமிழ் தேசியவாதத்தினதும் சிங்கள தேசியவாதத்தினதும் அபிலாசைகளை திருப்திப்படுத்தக்கூடிய அரசியலமைப்புத் தீர்வொன்றில் அக்கறை கொண்டவராக இருந்த நாகநாதன் சிறந்த தீர்வாக (அமெரிக்க மற்றும் பிரெஞ்சு குடியரசுகளின் சிந்தனைகளினதும் அனுபவங்களினதும் வழியில் அமையப்பெற்ற சுவிஸ் சம்மேளன அரசியலமைப்பின் அம்சங்கள் இலங்கைக்கும் உகந்ததாக தெரிந்தன). ஆனால், துரதிர்ஷ்ட வசமாக, 1940 களில் தமிழ் அரசியல் தலைமைத்துவம் சோல்பரி அரசியலமைப்பு வரையப்பட்டுக் கொண்டிருந்த போது சுவிஸ் அனுபவங்களை அங்கீகரிக்கவோ அல்லது அவற்றில் இருந்து பாடங்களை கற்றுக் கொள்ளவோ தவறியது.*

### அகிம்சைப் போராட்டம்

*1950 களின் நடுப்பகுதியில் தனிச்சிங்கள சட்டத்துக்கு எதிரான போராட்டத்தின்போதே காந்திய கோட்பாட்டின் அடிப்படையிலான அரசியல் இயக்கத்தை தமிழ்த் தலைவர்கள் இலங்கையில் முதன்முதலில் அறிமுகப்படுத்தினர். 1956 ஜூன் 5 பாராளுமன்றத்துக்கு வெளியே காலிமுகத்திடலில் தனிச்சிங்கள சட்டத்தை எதிர்த்து தமிழரசு கட்சி சத்தியாக்கிரக போராட்டத்தை நடத்தியது. அதில் தந்தை செல்வா, வன்னியசிங்கம் மற்றும் தமிழரசு கட்சியின் எம்.பி.க்கள், தமிழ் முஸ்லிம் ஆதரவாளர்களுடன் சேர்ந்து நாகநாதனும் பங்கேற்றார்.*

*சத்தியாக்கிரகிகளை சிங்கள தீவிரவாத கும்பல்கள் தாக்கியபோது பொலிசார் அதை தடுக்காது வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். சத்தியாக்கிரகிகளில் சிலர் பேரை ஆற்றுக்குள் தூக்கிவீசப்பட்டனர். தமிழர்கள் நடத்திய போராட்டத்துக்கு எதிரான போட்டிப் போராட்டமொன்றை சிங்கள தேசியவாதக் குழுக்கள் ஏற்பாடு செய்தன. அவர்கள் தமிழ்ப் போராட்டக்காரர்களை தாக்கினர். அதையடுத்து மூண்ட கலவரங்களில் தமிழர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். சுமார் 150 பேர் கொல்லப்பட்டனர். அந்த கலவரம் தான் தென்னிலங்கையில் இருந்து தமிழர்கள் வடக்கு, கிழக்கிற்கு இடம் பெயர்ந்த முதல் சந்தர்ப்பமாக அமைந்தது.*

*பின்னர் பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க தமிழரசு கட்சியுடன் உடன்படிக்கையொன்றை செய்துகொண்டார். பண்டா - செல்வா உடன்படிக்கை என்று அழைக்கப்பட்ட அந்த ஏற்பாடு தமிழ் மொழியின் நியாயமான பயன்பாட்டையும் வடக்கு கிழக்கில் பிராந்திய சபைகளையும் விதந்துரைத்தது. அந்த உடன்படிக்கை ஐ.தே.க.வினாலும் சிங்கள தீவிரவாத சக்திகளினாலும் முறியடிக்கப்பட்டது.பிறகு 1959 செப்டெம்பரில் பண்டாரநாயக்கவும் கொல்லப்பட்டதையடுத்து தமிழரசு கட்சிக்கு வேறு வழியிருக்கவில்லை. அரசாங்கத்தின் கொள்கைகளை எதிர்த்து மீண்டும் அகிம்சைப் போராட்டத்தையே நாடவேண்டியதாயிற்று.*

*அந்த இயக்கத்தின் இரண்டாவது கட்டம்தான் வடக்கு கிழக்கில் நடைபெற்ற 1961 ஒத்துழையாமை இயக்கமும் சத்தியாக்கிரக போராட்டமும். அப்போது பிரதமராக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க இருந்தார். வடக்கு கிழக்கில் அரசாங்க அலுவலகங்களின் முன்பாக சத்தியாக்கிரகிகள் கூடி மறியல் செய்தனர். தமிழ்ப்பகுதிகளில் அரச நிருவாகம் முடங்கியது. பண்டாரநாயக்க செய்ய முயற்சித்த பேச்சுவார்த்தை மூலமான இணக்கத்தீர்வை காண்பதற்கு பதிலாக அவரின் மனைவியின் அரசாங்கம் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தி தமிழரின் அகிம்சைப் போராட்டத்தை ஒடுக்க இராணுவத்தை அனுப்பியது. தமிழரசு கட்சியின் தலைவர்களும் எம்.பி.க்களும் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்கள்.*

*நாகநாதன் பனாகொட இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டார். 1956 -- 1958 காலகட்டத்திலும் 1961 ஆண்டிலும் நடைபெற்ற சத்தியாக்கிரக போராட்டங்களில் ஒவ்வொரு கட்டத்திலும் நாகநாதன் முழுமையாக பங்கேற்றார். 1961 பெப்ரவர் 20 பழையபூங்காவில் அமைந்திருந்த யாழ்ப்பாணக் கச்சேரியில் இடம் பெற்ற சத்தியாக்கிரகத்தில் நாகநாதன் முன்னணிப் பாத்திரத்தை வகித்தார். அமிர்தலிங்கத்தையும் நாகநாதனையும் பொலிசார் தாக்கினர்.வேறு பல எம்.பி.க்களும் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்தனர். கண்ணீர்ப் புகைக் குண்டு பிரயோகம் செய்து சத்தியாக்கிரகிகளை கலைத்த பொலிசார் பல்வேறு அடக்குமுறைகளை கையாண்டனர்.*

*நாகநாதனின் தலையில் ஒரு பொலிஸ்காரர் தாக்கியபோது அவரின் குண்டாந்தடி இரண்டாக வெடித்து நிலத்தில் வீழ்ந்தது. அதில் ஒரு துண்டை எடுத்துச்சென்ற நாகநாதன் வீட்டில் நிவைவுச் சின்னமாக வைத்திருந்தார். இந்த சம்பவம் அவருக்கு தமிழர்கள் மத்தியில் செல்வாக்கை அதிகரித்தது. அதன் பின்னரே அவர் இரும்பு மனிதர் என்று புகழப்பட்டார்.*

*சிங்கள மக்களை எப்போதுமே நேசிப்பதாகவும் மதிப்பதாகவும் கூறிக்கொண்ட நாகநாதன் தனக்கு வேண்டியதெல்லாம் தமிழர்கள் சமத்துவமான பிரசைகளாக வாழவேண்டும் என்பதே என்று பிரகடனம் செய்தார். தமிழர்கள் சமவுரிமையைப் பெறுவதற்காக அகிம்சை மார்க்கத்திலான போராட்டங்களில் அவர் ஈடுபட்டார். தமிழர்கள் தங்கள் தாயகமண்ணில் முழு உரிமைகளையும் கொண்டவர்களாக வாழவேண்டும் என்ற இலட்சியத்தைக் கொண்டிருப்பவர்களின் மனதில் நாகநாதன் எனறென்றைக்கும் பசுமையாக நிலைத்திருப்பார்.*

இலங்கை நாகநாதன்

# இரட்டைக்கோபுர தாக்குதலின் பின் விளைவுகள் தலிபான்களை ஏன் பாதிக்கவில்லை?

**தலிபான் தீவிரவாதிகள் மீள் எழுச்சி என்பது எமக்குள் ஒரு கேள்வியை தோற்றுவித்துள்ளது. 2001 இரட்டைக் கோபுரத் தாக்குதல் தான் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் அதிக பாதிப்பை ஏற்படுத்தியதாகவும், அதனால் தான் எமது ஆயுதப் போர் முடிவுக்கு வரும் நிலை எட்டப்பட்டதாகவும், ஈழத் தமிழர்கள் ஒரு பெரும் இன அழிப்புக்கு உட்பட்டதாகவும் நாம் கருதுகிறோம். ஆனால் அந்த தாக்குதலால் நேரிடையாகப் பாதிக்கப்பட்ட தலிபான் தீவிரவாதிகள், அமெரிக்கப் படையினரின் நேரிடையான தலையீட்டையும் மீறி எவ்வாறு தாக்குப் பிடித்தார்கள்?**




ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படையினர் வெளியேறிவரும் நிலையில், அங்கு இடம்பெற்று வரும் தலிபான்களின் முன்நகர்வு கடந்த வெள்ளிக் கிழமை ஒரு முக்கிய திருப்பத்தை அடைந்துள்ளது. நிம்ரூஸ் மாநிலத்தின் தலைநகரான சராஜ்யை அவர்கள் கைப்பற்றியுள்ளதுடன், ஆப்கான் அரசின் ஊடகப் பிரிவின் அதிகாரியையும் சுட்டுக் கொன்றுள்ளனர். அவர் ஆப்கான் அரச தலைவரின் பேச்சாளராகவும் முன்னர் பணியாற்றியிருந்தார்.

அமெரிக்க துருப்புகள் ஆப்கானிஸ்தானில் இருந்து முற்றாக விலகல், அமெரிக்க மற்றும் நேட்டோப் படையினரின் வெளியேற்றத்தின் பின்னர் தலிபான் படையினர் ஆப்கானின் பெருமளவான பிரதேசங்களைக் கைப்பற்றிய போதும், தென்மேற்குப் பகுதியில் உள்ள சராஜ் நகரமே அவர்கள் கைப்பற்றிய முதலாவது நகரமாகும். ஈரானின் எல்லையில் அமைந்துள்ள இந்த நகரம், தாக்குதல்கள் இன்றி தலிபான் தீவிரவாதிகள் கைகளில் சென்றுள்ளது.

அது மட்டுமல்லாது, தென்பகுதியில் உள்ள கன்டகர், லஸ்ககார் ஹா மற்றும் மேற்கு பகுதியில் உள்ள ஹெராட் நகரங்களும் கடுமையான தாக்குதல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றன. அங்கு தீவிரமடையும் மோதல்களினால் கடந்த மாதம் மட்டும் 1000 இற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டதாக ஆப்கானுக்கான ஐ.நா சிறப்பு தூதுவர் டெபோரா லினோன்ஸ் தெரிவித்துள்ளார். அதேசமயம், 15 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட ஐ.நாவின் பாதுகாப்புச் சபையிலும் இந்த விவகாரம் கடந்த வெள்ளிக் கிழமை ஆராயப்பட்டிருந்தது.

மூன்று இலட்சத்திற்கும் அதிகமாகப் படையினரைக் கொண்டுள்ள ஆப்கான் படையில் 180,000 இற்கு மேற்பட்ட இராணுவத்தினர் சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள். ஆனால் தலிபான்களின் படை பலம் என்பது 55,000 தொடக்கம் 85,000 வரை இருக்கலாம் என ஐ.நா பாதுகாப்புச் சபையினால் கணிப்பிடப் படுகின்றது. ஆப்கானின் பாதுகாப்புச் செலவீனம் 5 தொடக்கம் 6 பில்லியன் டொலர்கள். அதில் 75 வீதமானதை அமெரிக்கா வழங்குகின்றது. ஆனால் தலிபான் தீவிரவாதிகள் நிதி வளம் 300 மில்லியன் தொடக்கம் 1.5 பில்லியன் டொலர்கள் வரையிலும் என கணிப்பிடப் படுகின்றது.

ஆப்கான் படையினரை விட தலிபான் ஆயுதபலமும், தலிபான் தீவிரவாதிகள் எண்ணிக்கையும் குறைவாகவே உள்ளது. ஆனால் அவர்கள் மரபுவழிச் சமர் மற்றும் கெரில்லாத் தாக்குதல் முறைகளை ஒருங்கிணைத்து, பயன்படுத்தி வருவதுடன், மேற்குலகப் படையினரின் வெளியேற்றம் என்பது ஆப்கான் படையினரின் மனோபலத்தையும் சிதறடித்துள்ளதே ஆப்கான் படையினரின் பின்னடைவுக்கான காரணங்களாகக் கருதப்படுகின்றது.

2001 ஆம் ஆண்டு ஆப்கானிற்குள் நுழைந்த அமெரிக்கா, 2021 ஆம் ஆண்டு வெளியேறும் போதும் தலிபான்களை முற்றாக முடக்க முடியவில்லை. 150,000 மேற்குலகப் படையினர், 300,000 இற்கு மேற்பட்ட ஆப்கான் படையினர் இணைந்து நடத்திய போரில் அமெரிக்கா வெளியேறுவது என்பது ஒரு படைத்துறை தோல்வியாகும்.

தமது வெளியேற்றத்தின் பின்னர் 2021 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதமளவில் தலிபான் தீவிரவாதிகள் ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றி விடுவார்கள் என கூறியிருக்கிறார் அமெரிக்கா இராணுவத்தின் ஆப்கான் நடவடிக்கைக்கான கட்டளை அதிகாரி.

நடக்கும் சம்பவங்களைப் பார்க்கும் போது, தலிபான்கள் ஆட்சி அமைக்கும் நிலை ஒன்று ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகவே உள்ளது. இந்த நிலை யில், தான் தலிபான் தீவிரவாதிகள் அமைப்பு தனக்கான உலக நாடுகளின் ஆதரவுகளைத் திரட்டும் முயற்சியில் இறங்கியுள்ளது.

இந்தியாவுடன் இரகசியமாகப் பேச்சுக்களை நடத்திய அவர்கள், தற்போது சீனாவுக்குச் சென்று சீனாவின் வெளிவிவகார அமைச்சரையும் சந்தித்துள்ளனர். சீனா தமது நட்பு நாடு என்று தலிபான் தீவிரவாதிகள் அறிக்கை வெளியிட்டுள்ளதுடன், ஆப்கானிஸ்தானின் உட்கட்டுமானப் பணிகளுக்குச் சீனா உதவும் என்றும் சீனா தெரிவித்துள்ளது.

அது மட்டுமல்லாது, அமெரிக்காவின் அதிகாரிகளும் தமது படையினரின் வெளி யேற்றத்திற்கு முன்னராகவே தலிபான்களுடன் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தனர்.

பாகிஸ்தானைப் பொறுத்த வரையில், அமெரிக்காவின் படை நடவடிக்கையைத் தொடர்ந்த சம்பவங்களால் அதிக விலையைச் செலுத்திய நாடாகும். ஏறத்தாள 70,000 மக்கள் கொல்லப் பட்டதுடன், 150 பில்லியன் டொலர்கள் பொருளாதார இழப்பையும் அது சந்தித்திருந்தது.

அருஸ்



எனினும் தலிபான் தீவிரவாதிகள் உள்ளடக்கிய அரசியல் தீர்வு ஒன்று முன்வைக்கப்பட வேண்டும் என, 150,000 மேற்குலகப் படையினர் ஆப்கானில் நிலை கொண்டிருந்த போது தாம் கோரியதாகவும், ஆனால் தற்போது 10,000 இற்கும் குறைவான படையினர் உள்ள போது அது சாத்தியம் அற்றது எனவும் பாகிஸ்தான் அதிபர் இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

தலிபான்களைப் பொறுத்த வரையில், 1996 ஆம் ஆண்டில் இருந்து 2001 வரையில் ஆட்சியில் இருந்தவர்கள், தற்போது மீண்டும் ஒரு அரசை நிறுவுவதற் கான முயற்சியில் ஈடுபட்டுள்ள னர். அவர்கள் அதற்கான புறச் சூழலை உருவாக்கும் முயற்சி களில் ஈடுபட்டுள்ளனர்.

அதேபோலவே, அதனைச் சுற்றியுள்ள நாடுகளும் எதிர்காலத்தில் ஆப்கானில் அமையும் அரசு தொடர்பில் தமது கொள்கைகளை மாற்றி அமைத்து, ஒரு உறுதியான பிராந்தியத்தை உருவாக்க முயற்சிகளை மேற்கொள்கின்றன. அதனைத் தான் தலிபான்களுக்கும் சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் காண்பிக்கின்றன.

ஒரு றில்லியன் டொலர்கள் பெறுமதியான 1400 கனிமவள வயல்களையும், தனது தேவைக்கு 300 வருடங்களுக்கு போதுமான எரிபொருள் வளத்தையும் கொண்டுள்ள ஆப்கானிஸ்தானில் மேற் கூறப்பட்ட நாடுகளின் முதலீடுகளும் உள்ளன. இந்தியா கூட தனது முதலீடுகளைக் காப்பாற்றிக் கொள்ளவே தலிபான்களுடன் பேச்சுக்களில் ஈடுபட முனைந்து நிற்கின்றது. சீனா ஆப்கானின் கனிம வளங்களைக் குறி வைத்துள்ளது.

1870 களில் பிரித்தானியாவினால் கைப்பற்றப்பட்ட ஆப்கான் 1919 ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்த பின்னர், பெண்களுக்கான கல்வி, இராஜதந்திரம், பெண்களும் ஆண்களும் இணைந்து கற்கும் பல்கலைக்கழகங்கள் என்று ஒரு முன்னேற்றமான பாதையில் தான் சென்று கொண்டிருந்தது. எனினும், சோவியத்தின் ஆக்கிரமிப்பு அதன் பின்னர் அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு என அந்தத் தேசம் உருக்குலைந்து போனது. தற்போது மீண்டும் அது ஒரு போரைச் சந்தித்து நிற்கின்றது.

நாடுகளை அரவணைப்பது மட்டுமல்லாது, அங்கு வாழும் மக்களின் அடிப்படை உரிமைகளையும், மனித உரிமைகளையும் புதிய அரசு மதிக்குமாக இருந்தால், ஆப்கான் ஒரு சுபீட்சமான எதிர் காலத்திற்குள் செல்லும். அதற்கான உறுதுணைகளைப் பிராந்திய நாடுகள் வழங்கலாம்.

இந்த நிலையில், தலிபான் தீவிரவாதிகள் மீள் எழுச்சி என்பது எமக்குள் ஒரு கேள்வியை தோற்றுவித்துள்ளது. அதாவது 2001 ஆம் ஆண்டு அமெரிக்காவில் இடம்பெற்ற இரட்டைக் கோபுரத் தாக்குதல் தான் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் அதிக பாதிப்பை ஏற்படுத்தியதாகவும், அதனால் தான் எமது ஆயுதப் போர் முடிவுக்கு வரும் நிலை எட்டப்பட்டதாகவும், ஈழத் தமிழர்கள் ஒரு பெரும் இன அழிப்புக்கு உட்பட்டதாகவும் நாம் கருதுகிறோம்.

ஆனால் அந்த தாக்குதலால் நேரிடையாகப் பாதிக்கப்பட்ட தலிபான் தீவிரவாதிகள், அமெரிக்கப் படையினரின் நேரிடையான தலையீட்டையும் மீறி எவ்வாறு தாக்குப் பிடித்தார்கள், இரட்டை கோபுரத் தாக்குதல்- தலிபான்களை ஏன் பாதிக்கவில்லை? எவ்வாறு மீண்டும் எழுந்தார்கள்?

**எங்கோ ஒரு மூலையில் இருந்த நாம் ஏன் பாதிக்கப்பட்டோம்?**

தலிபான்களுக்கு பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளின் ஆதரவுகள் இருந்தன. அந்த நாடுகளுடன் இராஜதந்திர உறவுகளை வளர்த்துக் கொண்டனர். அதாவது பின்தளம் இருந்தது. ஒரு தடவை பேசும் போது பாகிஸ்தான் அதிபர் இம்ரான் கான் தெரிவித்திருந்தார். தன்னை சிலர் தலிபான் கான் என்று தான் அழைப்பதாக. களத்தில் நாம் பல வெற்றிகளைக் குவித்தாலும், புலத்தில் தான் நாம் தோற்றோமா என்பது தான் தற்போது எம்முன் எழுந்துள்ள கேள்வி?

# கலை நினைவுகளுடன்.....

## கட்டியம் சொன்ன ஓர் அரங்கேற்றம்!



**மாலி**

அதற்குப் பின்னர் இசை, நடன விமர்சனம் எதையும் எழுதவில்லை.

வெள்ளவத்தை, இராமகிருஷ்ண மிஷன் மண்பத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 95ஆவது ஆண்டு நிறைவு வைபவமாக இருக்கலாம். ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன பிரதம விருந்தினராக கலந்துகொண்டார். விஜயாம்பிகை இந்திரகுமாரின் நடன நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

விஜயாம்பிகையின் கணவர் டாக்டர் இந்திரகுமார், யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர். வைபவ அமைப்பாளர்களில் ஒருவர்.

விஜயாம்பிகையின் அந்த நடனம்பற்றி ‘ஈழநாடு’இல் விமர்சனம் எழுதினேன். அப்போது எஸ். எம். கோபாலரத்தினம் (கோபு) செய்தி ஆசிரியராகவிருந்தார். டாக்டர் இந்திரகுமார் தொலைபேசியில் அழைத்து, ‘விமர்சனத்துக்கு விமர்சனமாக’ ஒன்றை எழுத விரும்புவதாக கேட்டதாக கோபு சொன்னார். ‘எழுதுங்கள். ஆனால், ‘மாலி’யும் அதற்கு பதிலாக ஏதாவது எழுதினால் அதனையும் பிரசுரிப்போம்’ என்று சொன்னதாகவும் சொன்னார்.

சில தினங்களில், தன்னைச் சந்திக்கும்படி டாக்டர் எஸ். ஆனந்தராஜனிடமிருந்து எனக்கு ஓர் அழைப்பு வந்தது.

பிரபல கண் வைத்திய நிபுணரான ஆனந்தராஜன், ‘ஈழநாடு’ இயக்குநர்களில் ஒருவர். கொழும்பு, வாட் பிளேசில் ஜே. ஆர். ஜயவர்த்தனவின் இல்லத்துக்கு எதிராக இவரின் இல்லமும் சிகிச்சை நிலையமும் இருந்தது.

ஆனந்தராஜன் கலைகளிலும் ஆர்வமுள்ளவர். பரஸ்பரம் எம்மிடையே நட்பும் மதிப்பும் இருந்தது. இடையிடையே சந்திப்பதுமுண்டு. எனினும், அந்த தொலைபேசி அழைப்பில் எனக்கொரு ‘யூகம்’ இருந்தது.

நேரில் பார்த்தபோது, யூகம் நிஜமாயிற்று. இந்திரகுமார் சமாச்சாரம்தான்! இந்திரகுமாரின் பதில் விமர்சனத்துடன் விவகாரத்தை முடிக்க ஆனந்தராஜனும் கோபுவைக் கேட்டிருக்கிறார். ஆனால், கோபு உடன்படவில்லை. அதனால் என்னை அழைத்திருந்தார் ஆனந்தராஜன்.

கோபுவின் நிலைப்பாட்டையே நானும் தெரிவித்தேன்.

‘சரி. மாலி, இனி நீர் எழுதுபவற்றை முதலில் எனக்கு அனுப்பும்’ என்றார்.

.....?

‘எனக்கு உங்கள்மீதுள்ள மதிப்பு வேறு. ஆனால், நான் எழுதுவதை உங்களிடம் காண்பிப்பதற்கு நீங்கள் பத்திரிகையின் ஆசிரியர் அல்லர். மேலும், நான் விமர்சிக்கும் நிகழ்வுகளை நீங்களும் என்னுடன் வந்து பார்க்கப் போகிறீர்களா? மன்னிக்கவும், வேண்டுமானால் விமர்சனம் எழுதுவதை நான் நிறுத்திக் கொள்கிறேன்’ என்று கூறிவிட்டு, கிளம்பினேன்.

அதன் பின்னர் ‘ஈழநாடு’இல் இசை, நடன விமர்சனம் எழுதவில்லை. லண்டனுக்கும் சென்று விட்டேன்.

இப்போது நாற்பது ஆண்டுகள்.

ஓராண்டுக்கு முன்னதாக மீண்டும் வெளிவரத் தொடங்கிய ‘ஈழநாடு’, இன்று அதன் வாரமலர் பதிப்பையும் தொடங்குகின்றபோது, மீண்டும் இடையிடையே தொடரலாமா என்று தோற்றுகிறது. யாழ்ப்பாணத்தில் அண்மையில் பார்த்த நடன அரங்கேற்றம் ஒன்று, இதற்கு ஒரு தொடக்க உந்துதலையும் தருகிறது.

யுத்த அனர்த்தத்தில் ஏற்பட்ட தாக்கமும் பாதிப்பும் நேரடியாக அவதானித்த ஒன்றல்ல. யுத்தம் முடிவடைந்த பின்னர் ஒருமுறை, நல்லூர் தேர் உற்சவ தினம், இந்திய தூதரகத்தின் அநு சரணையுடன் நடைபெற்ற நடன நிகழ்ச்சி ஒன்றைப் பார்க்கமுடிந்தது. ராதிகா சுரஜித்தின் மாணவியர் அளித்த நிகழ்ச்சி.

விஜய் தொலைக்காட்சியின் ‘சுப்பர் சிங்கரு’ம், ஜெயா தொலைக்காட்சியின் ‘தக திமி தா’வும் கர்நாடக இசையையும் பரதநாட்டியத்தையும் ஜனரஞ்சக வெள்ளமாய், வரப்பெல்லாம் உடைத்து, எங்குமே பரவச்செய்த கீர்த்திக்குரியவை. ராதிகா சுரஜித், ‘தக திமி தா’வின் மூல சூத்திரதாரி. சாந்தா - தனஞ்சயனின் சிரேஷ்ட மாணவி. நல்ல நடன நெறியாளுநர். சினிமாவில் ஏ. ஆர். ரஹ்மான், இளையராஜா முதலானோரின் இசை அமைப்புக்களில் விருதுகள்பெற்ற பல பாடல்களுக்கான நடன அமைப்பைச் செய்தவர். தன்னுடைய மாணவியர் சிலருடன் ராதிகா யாழ்ப்பாணம் வந்திருந்தார். இசைக் கலைஞர்கள் இல்லை ஒலிப்பதிவு இசைதான்.

ராதிகா சுரஜித்தின் மாணவியரைத் தொடர்ந்து, வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள ஏற்பாட்டில், வவுனியா நிருத்திய நிகேதன நடனப்பள்ளி மாணவியரின் நடனமும் இடம்பெற்றது.

இசையில் நடனத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையேயான உறவும் அபிமானமும் பரஸ்பரம் பேருன்னதமானது. இலங்கை வரும் இந்திய கலைஞர்களில் ஒரு வளமான கலை ரசனையையும், கலை நுணுக்கத்தையும் எதிர்பார்த்து, அநுபவித்துக் காண்பவர்கள் இலங்கை மக்கள். ஆனால், ராதிகா சுரஜித் இதில் சற்று வேறுபட்ட ஓர் உணர்வையே தோற்றுவித்தார்.

மனதில் இந்த விசனம் நிறைந்தபோது, தொடர்ந்து வந்த அந்த வவுனியா நிருத்திய நிகேதன மாணவியரின் நிகழ்ச்சி பெரு நிறைவைத் தந்தது.

சிவரஞ்சனியில் ஒரு வர்ணம். அபார வேகத்தில் சிறுமி ஒருத்தி சில கரணங்களை வெளிப்படுத்தினார். அவை, ‘சுவர்ணமுகியிலிருந்து பத்மா சுப்ரமண்யத்துக்கு மாறவேண்டும்’ என்பது ஆசை.

பண்பாட்டு திணைக்களத்தின் இந் நடன ஏற்பாட்டுக்கு அநுசரணையாகவிருந்த கலைஞர் வேல். ஆனந்தன் தெரிவித்த சேதி, இந்த மூன்று தசாப்த காலத்து இன்னல்களின் எழுச்சியையும் கூடவே இந் நடனம் தன்னில் வெளிப்படுத்தியதை உணர்த்தியபோது, ஒரு கணம் துணுக்குறவே வைத்தது. யுத்தத்தில் பெற்றோரை இழந்து, வவுனியா, கோவிற்குளம் ‘அகிலாண்டேஸ்வரி’ காப்பகத்தில் வதிந்த சிறுமியர் இவர்கள். சூரியயாழினி வீரசிங்கத்தின் மாணவிகளான இவர்கள், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களில் நடன கற்கையைத் தொடர்வதாக வேல். ஆனந்தன் தெரிவித்தார்.

இப்போது பார்த்த அரங்கேற்றம், பத்மினி செல்வேந்திரகுமாரின் மாணவிகளுடையது. யாழ்ப்பாணத்து நடன மேடையில் சவால் நிறைத்த ஒரு நர்த்தகியாக பார்த்த பத்மினியை தாளத்துடன் நட்டுவாங்க குருவாக அந்த மேடையில் பார்த்தது, கால ஓட்டத்தை விதப்புடன் உணர்த்தியது. அஞ்சனா, ஆராதனா பகீரதன் இரட்டைச் சகோதரிகளின் பரதநாட்டிய அரங்கேற்றம் இது. இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

‘உரை இடையிட்ட இசைச் சித்திரம்’ என்ற வானொலி நிகழ்ச்சி சிறப்பானதுதான். ஆனால், அரங்கேற்றத்தையும் அப்படி ஓர் உரையிடையிட்ட ஆடல் சித்திரமாக ஆக்கிவிடுவது ஏற்றதல்ல.

பதினைந்து வயதேயான சிறுமிகளின் கச்சிதமான ஓர் ஆடல். இருவருக்குமேற்றாற்போல் உருப்படிகளை நிர்வகித்த நடன அமைப்பு. இலேசாக தெறித்து மறைகின்ற முக பாவங்கள். ஓர் ஈர்ப்பு இழையோடியது. அந்தச் செல்விகளைப்பற்றி ஒரு கட்டியம்சொன்ன அரங்கேற்றம் என்று சொல்லலாம்.

முதன்முதலாக பார்க்கும் ஒரு ராகமாளிகை வர்ணம். அன்று அரங்கேற்றத்துக்கு பாடிய தவநான் றொபேட், தானே இயற்றியது. “அலங்கார கந்தனை என் மனம் நாடுதே...” என்று, நல்லூர்க் கந்தன்மீதானது.

பரிச்சயமானதல்லாமல் புதிதான ஒரு வர்ணம், நடன நிகழ்ச்சி ஒன்றில் நம்மை ஒன்றைவைத்துவிடுவது, மேலானதான ஒன்று. அழகா, முருகா என்று, அழகான சாகித்தியம். அமைவான நடன அமைப்பு. ‘தோடி முழங்கும் பத்மநாதன் நாதஸ்வர ஓசையின் இன்பத்தில் என்குரல் நினக்கு கேட்கலையோ’ என்றவாறான ஜீவாத்ம தாபம், சாகித்தியத்தில் சிறப்பானது.

1980 நல்லூர் திருவிழா காலத்தில் ‘கலாக்ஷேத்ரா’ நடன குழுவினரின் நிகழ்ச்சியொன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. மறுநாள், சாந்தா பொன்னுத்துரையின் இல்லத்தில் இரவு விருந்து. திருவிழா பார்த்துவிட்டு வருவதாக சென்றவர்கள் வெகுநேரம் திரும்பவில்லை. ‘என். கே. பத்மநாதன் என்றொருவர் நாதஸ்வரம் வாசித்தார். வெகு சுத்தமான - அற்புதமான வாசிப்பு. அவரைக் கண்டு பேசாமல் வரமுடியவில்லை. திருவிழா முடிந்த பின் அவருடன் சிறிதுநேரம் பேசிவிட்டு வந்தோம்’ என்றார் வெங்கடாசலபதி. ருக்மிணி அருண்டேலினதும் கலாக்ஷேத்ராவினதும் பெயரோடிணைந்த குச்சுப்புடி - பரதநாட்டிய கலைஞர் வெங்கடாசலபதி.

தவநாதன் றொபேட்டின் பாட்டு முதன்முதலாக கேட்டது. அவரின் அந்த பாட்டுக்கு அந்த சிறுமிகள் ஈடுகொடுப்பதென்பது எளிதானதல்ல.

பத்மினியின் கச்சிதமான நட்டுவாங்கம். அந்த நாள்களில் அவரின் ஆடல், ‘அவரா இவர்’ என்று எண்ண வைக்கும். இந்த நட்டுவாங்கமும் அப்படித்தான் கேட்க வைத்தது.

சி. சிவராசா மிருதங்கம். நானறிந்த மிருதங்க வித்வான் அம்பலவாணரின் புதல்வர் ஜெயராமன் வயலின். இவர்களைத் தெரியாவிட்டாலும், அவர்களின் அநுபவமும் பக்குவமுமான வாசிப்பும் நன்றாய்த் தெரிந்தது.

சாந்தினி சிவநேசனும் வந்திருந்தார். சாந்தினி, கிருஷாந்தி, பத்மினி ஆகிய மூவரும் யாழ்ப்பாணத்தின் ஒரு பரம்பரையின் மும்மணிகளாக, நடனத்துறையில் குறிப்பிடவல்லவர்கள்.



# தசாப்த பிரச்னைக்கு முற்றுப்புள்ளி

இந்தியா - இங்கிலாந்து மோதும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நீண்ட வருடங்களுக்கு பின்னர் சிறந்த ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் கிடைத்துள்ளனர். ரோஹித் - கே. எல். ராகுல் இணை மிகச் சிறப்பாக ஆடி 126 ஓட்டங்களை சேர்த்தது.

ரோஹித் - ராகுல் இணையர் இந்தத் தொடரிலேயே ஆரம்ப வீரர்களாக களமிறங்கினர். இது திட்டமிடப்படாத - இயற்கையாக அமைந்த கூட்டணி எனலாம். வழக்கமாக ரோஹித்துடன் ஷுப்மன் கில்லே களமிறங்கினார். அவர் காயமடைந்ததால் அவருக்கு பதிலாக மயங்க் அகர்வால் களமிறங்குவாரென இருந்தது. ஆனால், அவரும் காயமடையவே திட்டமிடப்படாத ரோஹித் - கே. எல். ராகுல் இணை களமிறங்கியது.

இருவரின் டெஸ்ட் வாழ்க்கையிலும் இந்தப் போட்டி மிக முக்கியமானது. ராகுலுக்கு கடந்த இரு வருடங்களாக டெஸ்ட் அணியில் வாய்ப்பு கிடைக்கவில்லை. அவுஸ்திரேலிய தொடரில் கூட பதினொருவர் அணியில் இல்லை. வெறுமனே பெயரே இடம்பெற்றிருந்தது. இதேபோல், வெளிநாட்டு மண்ணில் தடுமாறிய ரோஹித் சர்மாவுக்கும் இந்தத் தொடர் முக்கியமாக அமைந்தது. தாயகத்தில் 80 சராசரியை கொண்டுள்ள அவர் வெளிநாடுகளில் 30 இற்கும் குறைவான சராசரியையே வைத்திருந்தார். இதனால், இவர்களின் வாய்ப்புகள் பறிபோகும் நிலையிலேயே இருந்தது.

இந்த நெருக்கடியான தருணத்தில் களமிறங்கிய இவர்கள் முதல் டெஸ்ட் போட்டியில் 97 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தனர். 3 ஓட்டங்களால் தவறவிட்ட இணைப்பாட்ட சதத்தை இரண்டாவது போட்டியிலேயே எட்டினர்.

இரண்டாவது டெஸ்டில் இருவரும் பதற்றம் - அவசரமின்றி ஆடினர். எகிறி வரும் பந்தை நிதானம் காட்டி தெரிவு செய்து ஆடினார்கள். அதேநேரம் பந்துவீச்சாளரையும் ஆதிக்கம் பெற விடாமல் தமது துடுப்பு மட்டையை பயன்படுத்தினர். இவர்களின் ஆட்டத்தில் ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ளும்படியான ஆட்டம் அற்புதமாக வெளிப்பட்டது.

திட்டமிடலோடு ஆடிய இந்த இணை 100 ஓட்டங்களை கடந்தது. இதில், ரோஹித் 83 ஓட்டங்களை அடித்தார். ஆனால் தொடர்ந்து ஆடிய ராகுல் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இவர்கள் இருவரின் ஆட்டமும் கிரிக்கெட்டர்களும் ரசிகர்களும் மெச்சும்படி அமைந்தது. இவர்களின் இந்த இணைப்பாட்டம் இந்திய டெஸ்ட் அணியில் எதிர்கால இருப்பை நிலைநிறுத்தியதோடு, அந்த அணியின் ஒரு தசாப்த கால ஆரம்ப துடுப்பாட்ட பிரச்னைக்கும் தீர்வாகியுள்ளது.

# மீண்டும் வருமா புயல்?


இடைவிடாத ரென்னிஸ் போட்டிகள் ரசிகர்களுக்கு மகிழ்ச்சியளிக்கிறது. ரென்னிஸ் போட்டிகள் கவர்ச்சிகரமான போர்கள் மட்டுமில்லை என்பதை உலகம் முழுவதுமுள்ள அவர்கள் உணர்ந்துள்ளனர். இந்தநிலையில் கனடாவில் நடக்கும் ரோஜர்ஸ் கிண்ண தொடர் அவர்களை ஈர்த்து வருகின்றது.

இந்த நிலையில், தாயகத்தில் நடக்கும் இந்தத் தொடரில்கூட முன்னணி வீராங்கனைகளில் ஒருவரான ஈகியூனி பௌச்சர்ட் விளையாடவில்லை. முன்னர் தரவரிசையில் 5ஆம் இடத்தில் இடம்பிடித்த அவர் தனது நேர்மையான நடத்தை - அழகால் பல ரசிகர்களை ஈர்த்திருந்தார்.

ரோஜர்ஸ் கிண்ணத் தொடரில் அவர் பங்கேற்காதபோதும் பௌச்சர்ட் அண்மையில் வெளியிட்ட ரசிகர்களின் கேள்விகளுக்கு காணொலி மூலம் பதிலளித்தார். இதன்போது உலகின் பிரபல வீராங்கனைகளான செரீனா வில்லியம்ஸ், சிமோனா ஹாலேப், இவனோவிச் ஆகியோருக்கு எதிரான தனது முக்கிய போட்டிகளை நினைவு கூர்ந்திருந்தார்.

27 வயதான பௌச்சர்ட்டின் காணொலியை அவரின் ரசிகர்கள் வெகுவாகவே ரசித்தனர். பௌச்சர்ட் இறுதியாக மார்ச் மாதம் மெக்ஸிக்கோவில் நடந்த போட்டியில் விளையாடினார். தற்போது அவர் ரென்னிஸ் தொலைக்காட்சி ஒன்றில் வர்ணணையாளராக உள்ளார். இது தற்காலிக தொழில் மாற்றம் என்கிறார். அவர் மீண்டும் மைதானம் திரும்புவதைக் காண காத்திருக்கிறார்கள் அவரின் ரசிகர்கள்.







# துருவங்கள் இணையுமா?

பாரிஸ் சென். ஜெர்மைன் அணி இந்த ஆண்டில் மிகச் சிறந்த வணிகத்தை செய்திருக் கிறது என லாம். 21 ஆண்டுகள் பார்ஸிலோனா அணிக்காக ஆடிய மெஸ்ஸியை அந்த அணி ஒப்பந்தம் செய்துள்ளது.

இத்துடன், இது முடிந்ததா...?

2022ஆம் ஆண்டில் போர்த்துக்கலின் தலைவரும் உலகின் மிகச்சிறந்த வீரர்களில் ஒருவரும் 5 முறை பலோன் டி ஓர் விருதை வென்ற நட்சத்திரமான கிறிஸ்ரியானோ ரொனால்டோவை அவர்கள் ஒப்பந்தம் செய்யவுள்ளனர் என்று தகவல்கள் பரவியுள்ளன.

பாரிஸ் அணிக்காக பிரான்ஸின் பிரபல வீரரான கைலியன் எம்பாப் விளையாடி வருகிறார். இவரின் ஒப்பந்தம் 2022இல் முடிவுக்கு வருகின்றது. இவர் ரியல் மட்ரிட் அணிக்காக விளையாட ஆர்வமாக உள்ளார். இதேநேரம் கிறிஸ்ரியானோ ரொனால்டோவும் ஜூவென்ட்ஸ் அணியிலிருந்து வெளியேற ஆர்வமாக உள்ளார்.

இந்த நிலையில், பாரிஸ் சென். ஜெர்மைன் அணி அவரை வாங்குவதற்கு ஆர்வமாக உள்ளது என்று தெரிகிறது. தற்போது கொரோனா பேரிடரில் ஐரோப்பாவில் பல முன்னணி கழகங்கள் நிதி நிலை நெருக்கடியில் உள்ளன. ஆனால், பாரிஸ் அணிக்கு அவ்வாறான நெருக்கடி இல்லை. இதனால்தான், அந்த அணியால் மெஸ்ஸியை வாங்க முடிந்ததுடன், நெய்மர் போன்ற உலகின் இன்னொரு பிரபல வீரரரையும் தக்க வைத்துக்கொள்ள முடிகிறது.

தற்போது அந்த அணியில் மிகப்பெரும் நட்சத்திரங்கள் உள்ள னர்.

இந்த வரிசையில் ரொனால்டோவும் கைகோக்க நேரலாம். இது நடந்தால், உதைபந்தாட்ட உலகில் இன்று ஜாம்பவான்களாக - போட்டியாளர்களாக பார்க்கப்படும் மெஸ்ஸியும், ரொனால்டோவும் ஒரே அணிக்காக விளையாட முடியும். இரு துருவங்களும் இணையுமா என் பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

# திரை விமர்சனம்



**திரைப்படம் - நெற்றிக்கண்**
**இயக்கம் - மிலிந்த் ராவ்**
**இசை - கிரிஷ் கோபாலகிருஷ்ணன்**
**நடிப்பு - நயன்தாரா, அஜ்மல், மணிகண்டன்**

2011 இல் வெளியான கொரிய மொழி படமான பிளைண்ட் என்ற திரைப்படத்தின் மீளுருவாக்கமே நெற்றிக்கண்.

விபத்து ஒன்றில் தன் கண்பார்வையை இழக்கும் சி.பி.ஐ. அதிகாரி துர்க்கா (நயன்தாரா), ஒரு மழை இரவில், பாலியல் "சைக்கோ"விடம் சிக்குகிறார். பல பெண்களைக் கடத்தி சித்திரவதை செய்யும் அந்த சைக்கோ, துர்க்காவை என்ன செய்தான், சைக்கோவிடம் இருந்து துர்க்கா தப்பித்தாரா? மற்ற பெண்களையும் மீட்டாரா? என்பதே கதை.

தடுமாறும் உடல்மொழி, பதற்றமான முகம், தயக்கம் என அண்மையில் பார்வை இழந்த ஒருவரின் அவஸ்தைகளை அப்படியே பிரதிபலிக்கிறார் நயன்தாரா. படத்தின் பலமே அவர்தான்.

புதிதாக பணிக்கு சேர்ந்த உதவி ஆய்வாளர் பாத்திரத்தில் மணிகண்டன். ஆனால், சாதாரண விஷயத்தைக்கூட தான் சிந்திக்காமல் நயன்தாராவிடம் மட்டுமே யோசனை கேட்டு நடக்கும் பாத்திரமாக படைக்கப்பட்டுள்ளார்.

வில்லனாக அஜ்மல் பரபரப்பை ஏற்படுத்தினாலும் அதீத நடிப்பால் சலிப்பை ஏற்படுத்துகிறார். அவரின் கதாபாத்திரத்தை பார்ப்பவர்களுக்கு உணர்த்தியபிறகும் பெண்கள் மீதான சித்திரவதைகளை காண்பிப்பது தேவையற்றது. அதுவும் பெண்கள் மீதான வன்முறைகளை அப்பட்டமாகக் காட்டுவது அநாவசியமாகிறது.

வில்லன் சைக்கோவான கதை ஏனோ பரிதாபத்தை ஏற்படுத்தவில்லை.

கதை இழுபடுவது சுவாரசியத்தை குறைக்கிறது. படத்தைப் பார்ப்பவர்களுக்கு ஒரு திருப்பத்தை ஏற்படுத்துவதாக கதை இல்லை. அடுத்தது இப்படித் தான் காட்சி அமையும் என்பதை பார்ப்பவர்கள் இலகுவாகவே ஊகித்து விடலாம்.

படத்தின் உச்சக்கட்ட முடிந்த பிறகும் காட்சிகள் நீள்வது அலுப்படிக்க செய்கிறது. ஆர். டி. ராஜசேகரின் ஒளிப்பதிவும் வழக்கம்போன்று அதை பிறேம், காட்சி அமைப்புகளாகவே உள்ளது.

கொரியன் படத்தின் மீளுருவாக்கமாக இல்லாமல் தமிழ் சினிமாவில் இன்னொரு சைக்கோ படமாகவே உள்ளது நெற்றிக்கண்...!



தெலுங்கு நடிகர் ராம்சரண் - கியாரா அத்வானியை வைத்து தனது புதிய படத்தை எடுக்கவுள்ளார் பிரபல இயக்குநர் ஷங்கர்.

இந்த நிலையில் அந்தப் படத்தில் நடிகை அஞ்சலியும் முக்கிய வேடத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

அண்மைக்காலமாக தமிழில் சரியான படவாய்ப்புகள் இல்லாமல் இருந்த வந்த அஞ்சலி சமீபத்தில் தான் தன்னை கற்றது தமிழ் படத்தில் அறிமுகம் செய்த ராம் இயக்கும் புதிய படத்தில் நிவின்பாலியுடன் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டார். தமிழ், மலையாளத்தில் தயாராகும் அந்த இரு மொழிப் படத்தை அடுத்து, இப்போது ஷங்கர் இயக்கும் மூன்று மொழிப்படத்தில் நடிக்கவும் ஒப்பந்தமாகியிருக்கிறார்.

அஜித்தின் விஸ்வாசம் படத்தின் "அடிச்சி தூக்கு..." பாடலும் யூ ரியூப்பில் 10 கோடி பார்வைகளை கடந்துள்ளது. முன்னதாக அந்தப் படத்தின் "கண்ணான கண்ணே", பாடல் ஏற்கனவே 10 கோடி பார்வைகளை கடந்தது. தற்போது அந்தப் பாடலுக்கு 14.8 கோடி பார்வைகள் கிடைத்துள்ளன. இதே போன்று சூர்யா நடிப்பில் வெளியான தானா சேர்ந்த கூட்டம் படத்தின் 'சொடக்கு மேல சொடக்கு' பாடலும் 10 கோடி ஷ பார்வைகளை கடந்துள்ளது. இதுவரை யூ ரியூப்பில் 10 கோடிகளை 26 தமிழ் பாடல்களே கடந்துள்ளன. இந்த வரிசையில் இந்த இரு பாடல்களும் இடம்பிடித்துள்ளன.



பிக்பாஸ் நிகழ்ச்சி மூலம் பெரும்புகழ் பெற்றவர் ஓவியா. பல நாட்களாக வாய்ப்பின்றி இருந்த அவர் தற்போது தனது புதிய படங்களை வெளியிட்டுள்ளார்.

இதனைப் பார்த்த ரசிகர்கள் ஓவியாவா இது என்று அதிர்ச்சியாகினர். ஒல்லியான உடல்தோற்றத்தில் தனது ஒளிப்படங்களை சமூகவலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார் அவர். இந்தப் படங்களே சமூகவலைத்தளத்தில் பிரபலமாகி வருகின்றன.



ஹிந்தி திரையுலகில் முன்னணி நடிகை கங்கனா ரணாவத். சர்ச்சை பதிவுகளை இடுவதிலும் பிரபல மானவர். கவர்ச்சி ஒளிப்படங்களை தனது சமூகவலைத் தளத் தில் அடிக்கடி பகிரும் அவர், தற்போது இதுவரை இல்லாத இரு கவர்ச்சி ஒளிப்படங்களை பதிவிட் டுள்ளார்.


மெல்லிய மேலாடையுடன் அவர் பதிவிட்ட அந்த ஒளிப்படங்கள் ஒருநாளில் 10 இலட்சம் விருப்புகளை கடந்தது.



கவர்ச்சி - குறும்பு நிறைந்த கதாபாத்திரங்களில் நடிக்கவே விரும்புகிறேன் என்று கூறியுள்ளார் நிவேதா பெத்துராஜ்.

ஒருநாள்கூத்து படம் மூலம் அறிமுகமான இவர், நடித்துள்ள பொன் மாணிக்கவேல் திரைப்படம் விரைவில் வெளியாகிறது.

தமிழ், தெலுங்கில் பல படங்களில் நடித்து வரும் அறிவிப்பு இவரின் ரசிகர்களுக்கு தித்திப்பாக அமைந்திருக்கிறது. விரைவில் கவர்ச்சி படங்களில் இவரைக் காணலாம்.



கௌதம் மேனனின் "வெந்து தணிந்தது காடு" படத்தில் இருந்து ரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சி அளிக்கும் விதமாக புதிய ஒளிப்படம் வெளியாகியுள்ளது.

நடிகர் சிம்பு தனது கதாப்பாத்திரத்திற்காக மிகவும் ஒல்லியாக மாறியிருக்கிறார். அந்த ஒளிப்படமே தற்போது வெளியானது. அவரின் உழைப்பை பார்த்த ரசிகர்கள் பாராட்டுக்களை தெரிவித்து வருகின்றனர்.

இந்தப் படத்தின் முதல் பார்வையும் பெரும் வரவேற்பை பெற்றிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# அரும்பு

க. சட்டநாதன்



காரில் இருந்து இறங்கி, விசும்பலோடு வந்தாள். மனசைக் கரைய வைக்கும் விசும்பல். என்னைக் கண்டதும் ஓர் இளந்துள்ளலுடன், கால்கள் நிலத்தில் பாவாமல் ‘அப்போய்’ எனப் பாய்ந்து வருபவள் இன்று ‘ஸ்கூல்பாக்’ தரையில் இழுபட, மிகவும் தளர்ந்து போனவளாய், பார்வை சூனியத்தில் நிலைகொள்ள வந்தாள். விசும்பல் ஓயவில்லை. இடையிடை இருந்தது. என்னை நெருங்கியவள் தனது உயரத்துக்கு என்னோடு நின்று, எனது கால்களைக் கட்டிப் பிடித்தபடி நிமிர்ந்து பார்த்தாள்.

“என்னம்மா...?” என்றதும் விசும்பல் உடைந்து அழுகையாய் மாறியது.

உள்ளே ஏதோ வேலையாக இருந்த தேவி

“என்ன ராஜி... என்ன?” என்று பதட்டத்துடன் வந்தாள்.

“ராஜி பேர் வேண்டாம் அம்மா... எனக்கு வேண்டாம்!”

குழந்தை, கெஞ்சுவது போலத் தாயைப் பார்த்தாள்.

“என்ன செல்வம்?”, குழந்தையை அணைத்துக் கொண்ட தேவியின் குரல் தழைந்து மறுகியது.

குழந்தை இடது கை மணிக்கட்டுக்கு மேலாகப் புறங் கையைக் காட்டினாள்.

அந்தப் பட்டுச் சருமத்தில், செவ்வரி படர்ந்த தழும்பு. உள்ளங் கையைப் புரட்டிப் பார்த்தேன். அதிலும் அடித்ததற்கான அடையாளம்.

‘இந்தச் சிசுவை... பாலனை... பிரம்பால் அடிக்க மனம் வருமே...? பிரம்பா...? சிறு தடியாகக்கூட இருந்திருக்கலாம். சுள்ளித் தடியாக... பட்டதும் சுரீரென்று... காயம் வந்திருக்கிற மாதிரி... என்ன கொடுமையிது!’

என் கண்கள் பனித்து விடுகின்றன.

“ஆர் இந்த ரீச்சர்... ராட்சசி. குழந்தை குட்டி இல்லா தவளா? பிள்ளையை இப்படி, நார்நாரா வார்ந்திருக்கிறாளே!”

‘இப்பவும் இப்படி ஒரு ஆசிரியையா...? அளுக்குக் குழந்தையை அடிக்க வேண்டுமென்று இருந்திருக்காது. ஏதோ ‘குழந்தையின் மனதில் வேர்விட்டு ஆழமாகவே பதிந்துவிட்ட இந்த உணர்வை எப்படி நீக்குவது’.

“குஞ்சு சாப்பிட்டாச்சா?”

“சாப்பிட்டாச்சு”, என்றவள் ஓடிவந்து, எனது மடியிலேறி உட்கார்ந்து கொண்டாள்.

“என்ன படிக்கிறீங்க அப்பா? லிற்றில் ரெட் றைடிங் ஹூட்டா, ஸ்நோ வைட்டா, என்ன புத்தகமப்பா?”

நான் படிப்பதெல்லாம் அவளது புத்தகங்கள் என்பது அவளது நினைப்பு.

“பிள்ளைக்கு நித்திரை வருகுது... படுப்பமா!”

மத்தியானம் சாப்பிட்டதும் ஒரு சிறு தூக்கம் போடுவாள் ராஜி.

“வேண்டாமப்பா... ரி. வி. போடுங்க”.

“ரி. வி. யிலை ஒண்டுமில்லையம்மா”.

“இல்லை போடுங்க”, அடம் பிடித்தாள்.

ரி. வி. யில் நிகழ்ச்சி எதுவும் இருக்கவில்லை.

“செல்வா... றீகல் போடுங்க”.

“இல்லையம்மா”.

அமைதியாக வந்து எனது கதிரையில் ஏறி, மேசையில் தொற்றி உட்கார்ந்து கொண்டாள்.

“என்ன புத்தகம் அப்பா இது? மட்டை பளபளெண்டு வடிவா இருக்கு”.

“நீயே படிச்சுச் சொல்லம்மா”.

“ப... ள்... ள... ம்... பள்ளம். பள்ளமெண்டா என்னப்பா?”

“பள்ளமெண்டா பள்ளம் தான்”.

அவளுக்கு அந்தப் பதில் திருப்தி தரவில்லை.

எழுந்து கைகளைத் தூக்கிச் சோம்பல் முறித்துக் கொண்டாள்.

“வாம்மா வந்து படு”.

கட்டிலில் ஏறித் தானாகப் படுத்துக் கொண்டாள். படுத்த சில நிமிடங்களில் அவள் அமைதியாகத் துயில் கொண்டாள்.

▼ ▼ ▼

ராஜி ஆறு மணிக்கெல்லாம் விழித்துக் கொண்டாள். கையில் இருந்த புத்தகத்தை மூடி வைத்துவிட்டு அவளைப் பார்த்தேன்.

“சிச்சா அப்பா”, வெட்கம் கலந்த இளஞ் சிரிப்புடன் நெளிந்தாள்.

“ஆறு வயதாப் போச்சு இன்னுமா...?”

“எனக்கு ஆறு வயதா? இல்லையப்பா! ஐஞ்சு வயதுதான் முடிஞ்சிருக்கு”, திருத்தம் சொன்னாள்.

“அப்பாவுக்கு எத்தனை வயது?”

“நாப்பத்தைஞ்சு”.

“அம்மாவுக்கு?”

“முப்பத்தி ஏழு”.

“ரகுச் சித்தப்பாவுக்கு?”

“நாப்பத்திரண்டு”.

“சித்திக்கு?”

“முப்பத்தைஞ்சு”.

“விஜியக்காவுக்கு?”

“தெரியாதம்மா”.

“குட்டியக்காவுக்கு?”

“தெரியாது, போதும் போதுமம்மா”.

அவளை நன்றாகத் துடைத்து விட்டு, தேவிக்குக் குரல் கொடுத்தேன். தேவி மாடி ஏறிவந்து குழந்தையை அழைத்துப் போனாள்.

சற்றைக்கெல்லாம், ராஜியின் குரல் பக்கத்து வீட்டில் நீட்டி முழங்கியது.

விஜியக்கா, குட்டியக்கா, இரத்தினக்கா, மணியக்கா, மகேஸ் அக்கா, இரத்தினண்ணா, ஆனந்தனண்ணா, ஜெயாண்ணா என்று வயது வித்தியாசம் பாராது - ஒவ்வொருவரும் எழுபது முதல் இருபது வயதுக்கு இடைப்பட்டவர்கள் - அண்ணா முறை, அக்கா முறை வைத்தழைத்துச் சமா வைத்துக் கொண்டிருந்தாள்.

அந்த சமாவில் அவர்கள் - அந்தப் பெரியவர்கள், தேன் குடித்த நரியாட்டம் கிறுங்கி இருப்பது எனக்குத் தெரிகிறது.

‘குழந்தைகள் தெய்வ அம்சம் என்பது எவ்வளவு உண்மை! இதைக் கூடப் புரிந்து கொள்ளாத அந்த ரீச்சர், சோக் பீஸ்/ம் கையுமா படிப்பிக்க வந்தா மட்டும் போதுமா? பாலர் வகுப்புப் பயிற்சி அது இதெண்ட ‘பவுசு’ வேறை’.

நெஞ்சு படபடத்துக் கொண்டது.

▼ ▼ ▼

கீழே தேவி சாப்பிடுவதற்கு அழைத்தாள்.

‘மணி எட்டிருக்குமா’ என நினைத்தபடி கீழே படியிறங்கினேன்.

ராஜி தாயின் மடியிலிருந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தாள்.

“என்ன சாப்பாடம்மா?” ராஜியைக் கேட்டேன்.

“இடியப்பம், சொதி, சிக்கின்”.

நான் சாப்பிட்டுக் கொண்டிருந்தபொழுது, டைனிங் ரேபிளில் ஏறியிருந்து என்னிடம் நாலு வாய் சாப்பிட்ட பின்தான் அவளுக்குத் திருப்திப்பட்டது.

சாப்பாடு ஆனதும் எட்டு இருபத்தைந்துக்கு ரி. வி. யில் தர்மசேன பதிராஜாவின் மாயமந்திர ரெலி டிராமா பார்ப்பதற்கு மாடிக்குச் சென்றேன். மொழி தொந்தரவு தந்த பொழுதும், பார்ப்பதில் ஆர்வமிருந்தது. முறையான படப்பிடிப்பு. சில ஃபிறேம்ஸ், நல்ல சினிமாவைப் பார்க்கிற பிரமையைத் தந்தது. பதிராஜ் நல்ல கலைஞர்.

நாடகம் ஆரம்பித்த சில நிமிடங்களில் ராஜி மாடிக்கு வந்தாள். ஓரிரு நிமிடங்கள் என்னுடன் ரி. வி. பார்த்த ராஜி, பொறுமை இழந்தவளாய் எனது கழுத்தில் தொங்கிய மஃப்ளரைப் பிடித்து இழுத்து, தனது முகத்துக்கு நேராக எனது முகத்தை வைத்துக் கன்னத்தில செல்லமாக முத்தமிட்டாள்.

“என்னம்மா?”

“ரி. வி. வேண்டாம் வாங்கப்பா.....”

அவளது அழைப்பை ஒதுக்க முடியவில்லை. நான் அவளுக்குப் பாடம் சொல்லித் தரவேண்டும். எவ்வளவு முக்கியமான வேலை இருந்தாலும் அதை ஒதுக்கி வைத்துவிட்டு அவளுடன் இருக்க வேண்டும். அந்த மணித் துளிகள் அவளுக்கு மட்டுமே சொந்தம்.

படிப்பு கட்டிலில்தான் நடைபெற்றது. கட்டிலில் ஏறி உட்கார்ந்து, தலை அணைகளை, தான் சாய்ந்துகொள்ள வாகாகச் சரிசெய்து, குட்டி இளவரசி மாதிரி கம்பீரமாக அவள் உட்கார்ந்து கொண்டாள்.

அவளது ஆங்கிலப் புத்தகங்கள் சிலவும், தமிழ்ப் புத்தகமும் கட்டிலில் திறந்த நிலையில் பரப்பப்பட்டன. அதற்கு என் உதவி அவளுக்கு வேண்டும். இன்று அவளே புத்தகங்களை எடுத்துப் பரப்பினாள். உடனே படிக்கவும் ஆரம்பித்தாள்.

படிக்கும்போது ஒரு ஒழுங்கு முறை அவளிடம் உண்டு. வலது பக்கமிருந்து ஆரம்பித்தால் - கீழாக வந்து, மேலே செல்வாள். பக்கங்களைப் புரட்டும்போதும் ஒரு நடைமுறையைப் பின்பற்றுவாள். மாற்றம் எதுவும் செய்யக் கூடாது. குழந்தையின் போக்கிற்கே விட்டு விடுவது அவளுக்குப் பிடித்தமாய் இருக்கும். ஏதாவது மாற்றம் செய்தால், ‘அது பிழையப்பா, இப்பிடி இப்பிடித்தான்’ என்பாள்.

ஆங்கில வாசிப்பை முடித்து நிமிர்ந்தவள், ஆங்கில, தமிழ் எழுத்துக்களை, மூச்சு விடாமல் ஒப்பித்தாள். பின்பு எண்கள், கணிதம், வாய்ப்பாடு மட்டும் அவள் வயதுக்கு அதிகம் என்று சொல்லித் தரவில்லை. நிறங்களையும், ருசிகளையும் அவள் தெரிந்து வைத்திருந்தாள்.

பாட நடுவில் தேவி பால் கொண்டு வந்தாள். பாலை வாங்கிப் பருகியபடி, “கதை சொல்லுங்க” என்றாள்.

முயலும் ஆமையும் கதை சொன்னேன். அவளுக்கு திடீரென்று முயல் எப்படி இருக்குமென்ற சந்தேகம் வந்து விட்டது. படம் போட்டுக் காட்டும்படி கேட்டாள்.

படம் போட்டுக் காட்டினேன்.

“முயலுக்குக் காது இத்தினி சின்னனா? பெரிசாக் கீறுங்க...” என்றாள்.

காதைப் பெரிதாக்கினேன்.

“ஒட்டகம் கீறுங்க...”

“சரி...”

“முதுகு நல்லா இல்லை...”, விமர்சனம் செய்தாள்.

“யானை, பூனை, கோழி, கார், வண்டில்” தொடர்ச்சியாகச் சொன்னாள்.

எல்லாவற்றையும் போட்டுக் காட்டினேன்.

“போதும், போதுமப்பா...” எழுந்து சோம்பல் முறித்தபடி நின்றாள்.

“பிள்ளைக்குத் தூக்கம் வருகுது”, குரல் கொடுத்ததும் தேவி வந்து அவளைத் தூக்கிச் சென்றாள். அன்றைய பொழுது அத்துடன், அவளுக்கு ஆகிவிட்டது.

▼ ▼ ▼

ராஜி பெயர் குழந்தையை அதிகமாகவே பாதித்துவிட்டது என்று தெரிந்தும் - காலையில் எழுந்ததும், மனைவி ‘ராஜி, ராஜி என்று கரைந்தது எனக்கு மிகுந்த எரிச்சலூட்டியது.

“தேவி! குழந்தை பாடசாலை நிகழ்ச்சியை மறக்க வேணும், அதுவரை அந்தப் பெயரைச் சொல்லி அவளைத் தொந்தரவு செய்யவேண்டாம்” என்றேன்.

மனைவி முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டாள்.

‘இரண்டு குழந்தைகள் எனக்கு’ என நினைப்பதைத் தவிர என்னால் எதுவும் செய்ய முடியவில்லை.

கண்ணாடி முன் தன்னை அலங்கரித்துக்கொண்டு நின்ற ராஜிக்கு, மனைவி தலை வாரிக்கொண்டிருந்தாள்.

அப்பொழுது, ஹெலியோ விமானமோ பறக்கும் ஓசை கேட்டது.

மனைவி பதட்டமடைந்தவளாய், “பொம்பர் போகுது போலை”, என்றாள்.

ராஜி முகத்தைக் கோணலாக நெழித்து, “பொம்பர் இல்லையம்மா, பொம்மர், பொம்மர்”, என்று திருத்தம் சொன்னாள். பின் என்னை நோக்கியவள்:

“பொம்மர்தானே சரியப்பா... அம்மாவுக்கு ஒண்டுமே தெரியாது...”, என்று கேலியாக சொல்லி விட்டு, பக்கத்து வீட்டுக்குப் போகப் படி இறங்கினாள்.

வாயடைத்துப்போய் நின்ற தேவி கேட்டாள்:

“பிள்ளைக்கு இண்டைக்கு ஸ்கூல் இல்லையோ. பள்ளிக்குக் கள்ளமோ?”, திரும்பிய ராஜியின் கண்களில் நீர் முட்டி வழிந்தது.

“அந்த ஸ்கூல் வேண்டாம், அந்த ரீச்சர் வேண்டாம் அம்மா”.

“சரி சரி... நீ போய் விளையாடு, நாளைக்கு வேறை ஸ்கூல் பாப்பம்” என்று கூறிய நான், அவள் படியிறங்கிப் போவதைப் பார்த்தபடி நின்றேன்.

▼ ▼ ▼

கந்தோரில் இருந்தபொழுது ராஜி முன்னாலும் பின்னாலும் இருப்பதுபோல ஒரு நிழலாட்டம். இவ்வளவு பிரியம் ஏன் என்று மனம் அடித்துக் கொண்டது.

அப்பா அந்தப் பேர் வேண்டாம் என்ற விசும்பல். விசும்பல் உடைந்து கனதியான அழுகையாக உருக் கொண்டது. மனசில் ஏதோ பாரம் அழுத்த, குழந்தையைப் பார்க்கவேண்டும் போலிருந்தது. அரை நாள் லீவு போட்டுவிட்டு வீட்டுக்குப் போனேன். ராஜி தூங்கிக் கொண்டிருந்தாள்.

குழந்தையை வைத்தகண் வாங்காது பார்த்து நின்ற என்னை நெருங்கிய மனைவி

“ராஜிக்கு வேற பாடசாலை பாருங்க” என்றாள்.

தேவி எனது ண்ணத்தையே பிரதிபலித்தது மனசுக்கு இதமாயிருந்தது. (15 ஆம் பக்கம் பார்க்க....)

▼ ▼ ▼

## நூல் வெளியீடு: தோட்டத் தொழிலாளர் வீரப் போராட்டம்
## ஆசிரியர்: பி. ஆர். பெரியசாமி

# மலையகத்தின் புதிய தலைமுறைக்கு ஒரு விழிப்புணர்வு



**- கேகாலை மரதன் கிருஷ்ணன்**

மறைந்த மலையக போராட்ட வீரரும் கவிஞருமான பட்ட ணம் பி. ஆர். பெரியசாமியின் 'தோட்டத் தொழிலாளர் வீரப்போராட்டம்' என்ற நூலின் இரண்டாவது பதிப்பு அண்மையில் கொழும்பில் சிறப்பாக வெளியிடப்பட்டது. இந்த நூல் 1957இல் நூலாசிரியரால் பல சிர மங்களுக்கு மத்தியில் முதலாவது பதிப்பாக ஐம்பது சதம் விலையில் வெளியிடப்பட்டு, இன்று கிடைக் கப்பெறாத அரிய நூலாகிப்போனது. இந்நூலின் வரலாற்று முக்கியத் துவத்தைக் கண்டறிந்த சிரேஷ்ட பத்திரிகையாளர் எச். எச். விக்கிரமசிங்க இந்நூலின் மறுபதிப்பு முயற்சியில் மும்முரமாக இறங்கினார்.

இரண்டாம் பதிப்பு வெளியீட்டுப் பணிக்கு கவிஞர் பெரியசாமியின் மகள் ரத்தினேஸ்வரி பெரியசாமி, லண்டனில் வாழும் மகன் சிவஞானம்பெரியசாமி ஆகியோருடைய பங்களிப்போடு விக்கிரமசிங்க 112 பக்கங்களில் இந்நூலை 64 வருடங் களுக்குப் பின் னர் பதிப்பித்துள்ளார். புகழ்பெற்ற நூல் வெளியீட்டாளர் கணேசலிங்கம் குமரனின் கைவண் ணத்தில் இந்நூல் சிறப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

நூலாசிரியர் கவிஞர் பெரிய சாமி மலையக மக்களின் போராட்டத்தை வெறும் ஆய்வாள ராக மட்டுமன்றி, அப்போராட்டங் களில் ஈடுபட்டு மலையக மக்களின் உரிமைக் குரலுக்காக போராடியவர் என்ற முறையில் தனது பங்கேற்பு,, அவதானம் என்பவற்றை ஆதாரமாகக்கொண்டு 1930களில் பெருந்தோட்ட உரிமையாளர்களின் அட்டூழியங்களுக்கு எதிராக தொழிலாளர்கள் கிளர்ந்து எழுந்ததை இந்நூலில் ஆவணப்படுத்தியுள்ளார்.

மலையக மக்களின் அரசியலில், தொழிற்சங்க மற்றும் சமூக நிலைமைகள் பற்றிய வரலாறுகளை பல மலையக ஆய்வா ளர்கள் பிற்காலத்தில் ஆவணப்படுத்தியுள் ளனர். ஆனால், இந்நூலில் மலையக மக்கள் செய்த போராட்டங்கள், அவர்கள் முன்வைத்த அடுக்கடுக்கான கோரிக்கைகள், வீராவேசம் கொண்ட தொழிலாளர்கள் தம்மைச் சுரண்டி ஆதிக்கம் செலுத்திய சக்திகளுக்கு கற்பித்த மறக்க முடியாத சம்மட்டி அடிகள் என ஏராளமான தமது நினைவுகளை கவி ஞர் பெரியசாமி தமக்கேயுரிய ஆவேச மொழியில் பதிவு செய்துள்ளார்.

முதலில் எ. இ. குணசிங்கவின் தேசிய தொழிற்சங்கத்தில் இணைந்து பணியாற்றிய கோ. நடேசஐயர், பின்னர் குணசிங்க இலங்கையில் வாழும் இந்தியர்களுக்கு எதி ரான ஒரு கோட்பாட்டை முன்வைத்தமை யினால் அவரிடமிருந்து பிரிந்து பெருந்தோட்ட மலையக மக்களுக்காகக் குரல் எழுப்பினார். அக்காலத்தில் தோட்டத்தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக கவிஞர் பெரியசாமியும் ஐயருடன் இணைந்து செயற்பட்டார்.

பின்னர் சமசமாஜ கட்சியின் தலைவர்களான டாக்டர். என். எம். பெரேரா, டாக்டர். கொல்வின் ஆர். டி சில்வா ஆகி யோருடன் இணைந்து போராடியவர் நூலாசிரியர். சமதர்ம ஆட்சியே பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு விடிவு தரும் என்று நம்பினார் என்பதை அவரது இந்த நூலில் காணமுடிகின்றது.

அவர் இன்று எம்மத்தியில் இல்லை என்றாலும் அவருடைய எழுத்துக்களிலும் கவிதைகளிலும் அவரது உயிரோட்டத்தை காணமுடிகின்றது.

பேராசிரியர் சோ. சந்திரசேகரன், ஆய்வாளர் மு. நித்தியானந்தன், முன்னாள் அமைச்சர் பி. பி. தேவராஜ், மலைநாட்டு எழுத்தாளர் மன்ற தலைவர் தெளிவத்தை ஜோசப் ஆகியோரின் கருத்துக்கள் நூலை மேலும் அலங்கரிக்கின்றன.

தன்னலன் கருதாது, வீரப் போராட்டக்களம் பலவற்றை கண்ட கவிஞர் பெரியசாமியின் இந்த நூலை வெளிக்கொணர முணைப்புடன் செயற்பட்ட எச். எச். விக்கிரமசிங்க ஏற்கனவே முன்னாள் அமைச்சர் பெ. சந்திரசேகரன், மூத்த பத்திரிகையாளர் எஸ். எம். கார்மேகம் பற்றிய நூல்களை வெளியிட்டவர்.

புதிய மலையகத் தலைமுறை தமது முன்னோரின் போராட்ட வரலாற்றைப் பற்றிய விழிப்புணர்வு பெறும் நோக்கில் தோட்டத் தொழிலாளர் வீரப்போராட்டம் மீள்பதிப்பு வெளிவந்துள்ளது.

# சுகமான ...

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

இதுபற்றி முன்பே சொன்னார் ஒருவர். அவர் யார் என்பது ஒரு புறம் இருக்கட்டும். அவர் சொன்னது இது: "சுயராஜ்யம் வந்த உடனே இப்போது உள்ளதைவிட நல்ல அரசோ அல்லது மக்களுக்கு அதிக மகிழ்ச்சியோ ஏற்பட்டுவிடாது என்பதை நாம் எல்லோரும் அறிந்து கொள்ள வேண்டும். சுதந்திரம் கிடைத்து நீண்ட காலத்திற்குப் பிறகும் இவை ஏற்பட்டுவிடாது. தேர்தல்களும் அவற்றில் லஞ்ச ஊழல்களும் அநீதிகளும் பணத்தின் பலமும் கொடுமையும் எல்லாவற்றிலும் திறமை இன்மையும் எல்லாம் சேர்ந்து சுதந்திரத்தை நாம் அடைந்த உடனேயே வாழ்க்கையை நரகமாக்கிவிடும். மக்கள் வருத்தத்தோடு பின்நோக்கிப் பார்ப்பார்கள். ஒப்பு நோக்குகையில் பழைய ஆட்சியில் நீதியும் திறமையும் அமைதியும் ஏறத்தாழ நேர்மையான நிர்வாகமும் நிலவியதை எண்ணிப் பார்ப்பார்களா... நமக்குக் கிடைக்கக்கூடிய ஒரே நன்மை, ஓர் இனத்தவர் என்ற முறையில் நாம் அவமானத்திலிருந் தும் அடிமைத்தனத்திலிருந்தும் விடுபடுவதே." இதைச் சொன்னவர் ராஜாஜி. சுதந்திரம் வந்தபோதா சொன்னார்? இல்லையே. பிறகு சொன்னாரோ? அதுவும் இல்லையே. நம்புவதற்குக் கஷ்டமாக இருக்கும். ஆனால், இதை ராஜாஜி சொன்னது 1921இல், சுதந்திரமடைவதற்கு 25 வருடங்களுக்கு முன்பு. நம்மவர்களின் நிர்வாக லட்ச ணம் அவருக்கு அப்போதே புரிந்துவிட்டது. நமக்கு? ●

# அரும்பு

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

கந்தோருக்கு போதற்கு முன்னதாக, ராஜியை அவளது புதிய பாடசாலைவரை கொண்டுசென்று விடுவது என்ற எண்ணத்துடன் ஸ்கூட்டரில் அழைத்துச் சென்றேன்.

கோயில் வீதியில் சென்றபொழுது, "அப்பா வேகமாக ஓடுங்க", என்றாள்.

ஸ்கூட்டரின் வேகத்தைச் சற்று அதிகப்படுத்தினேன்.

"பூ இதுதானா உங்க ஸ்பீட்" என்றாள்.

இன்னும் சற்று வேகப்படுத்தினேன்.

"வேண்டாமப்பா... வேண்டாம். ஸ்பீட் கூடிப்போச்சு, பயமாயிருக்கு" என்றவள், என்னைத் திரும்பிப் பார்த்து, "எனக்குச் சயிக்கிள் ஓட, ஸ்கூட்டர் ஓட, கார் ஓடச் சொல்லித் தருவியளா?" என்றாள்.

"சொல்லித் தாறனம்மா! என் பிள்ளைக்கு இல்லாததா".

"ஹேலிக்கொப்டர், பொம்மர், அவ்ரோ எல்லாம் ஓடவேணும்".

"எல்லாம் ஓடலாம். என் பிள்ளை ஜான்ஸி ராணியாக்கும்", என்றேன்.

அவள் என்னைப் பார்த்து, திருப்தியுடன் முறுவலித்தாள்.

பாடசாலை வந்ததும் இறங்கிக் கொண்டாள். அதிபரது அறைக்குள் அவளை அழைத்துச் சென்றேன். அதிபர் இவளைப் பார்த்ததும் கன்னத்தில் செல்லமாகக் கிள்ளினார். அவருக்கு இதமாகச் சிரித்து வைத்தாள்.

பாலர் பிரிவு ஆசிரியையுடன் கதைக்கவேண்டும் என்றேன். அவரது அனுமதியுடன் உள்ளே சென்றேன்.

ஆண்டு ஒன்று ஆசிரியையைப் பார்த்ததும் செல்லம்மா ரீச்சரின் நினைவு வந்தது. இரட்டை நாடி உடம்பு. தங்க பிரேம் அல்ல. வெள்ளி பிரேம் கண்ணாடி. சிரித்தபொழுது வரிசையான வெள்ளைப் பற்கள் ஒளிர்ந்தன.

ராஜியை அவர் அன்புடன் வரவேற்றார்.

ராஜி, எங்களிடமிருந்து பிய்த்துக்கொண்டு, குழந்தைகளுடன் ஒட்டிக் கொண்டாள்.

நான் நடந்த விபரம் அனைத்தையும் கூறி, அவளைப் பார்த்துக்கொள்வது உங்கள் கையில்தான் உண்டு என்று அவரிடம் விடைபெற்றபொழுது:

"உன்ரை பேர் என்ன?"

"........................."

"இவவுக்கு பேர் இல்லைப் போலை!"

"லலிதாவா, ராணியா, சந்திரா, விஜி...?"

"அவ பேர் ராஜி", என்று ஆசிரியை விடை தந்தார்.

ரீச்சரையும், என்னையும் மாறிமாறிப் பார்த்த என் பெண் 'அப்பா' என்று விசும்பியபடி என்னை நோக்கி ஓடி வந்தாள். ஆசிரியை இடையே வந்து அன்புடன் அவளது கண்களில் அரும்பியிருந்த கண்ணீரைத் துடைத்தபடி:

" கெட்டிக் காரியெல்லா இந்தச் சின்னக் குட்டி", என்று அவளைக் கைகளில் ஏந்திக் கொண்டார்.

"நீங்கள் பயப்படாமல் போய் வாருங்கள். 11.30க்கு வகுப்பு முடியும், வந்து மகளைக் கூட்டிப் போகலாம்", என்றார்.

'இன்றும் அரை நாள் லீவு போடவேணும்' என்னும் நினைப்புடன் ஸ்கூட்டரை ஸ்ராட் செய்தேன்.

தூரத்தில் ராஜி நீர் மல்கிய கண்களுடன் என்னையே பார்த்தபடி நின்றாள்.

11.30க்கு முன்னதாகவே நான் பாடசாலைக்குப் போனேன். ராஜி பிள்ளைகளுடன் கலந்திருப்பதை என்னால் காண முடிந்தது.

பாலர் பிரிவு விடும்வரை ஒதுங்கி நின்றேன். குழந்தை என்னைக் கவனியாது தனது படிப்பில் ஆழ்ந்திருப்பதை என்னால் கவனிக்கக முடிந்தது.

மணியடித்ததும் பிள்ளைகள் குதூகலமாக வெளியே வந்தனர். ராஜி ரீச்சரிடம் ஏதோ கேட்டுவிட்டு வெளியே வந்தபொழுது, ஆசிரியையும் உடன் வந்து:

"உங்கள் பிள்ளை கெட்டிக்காரி. எதையும் அவளால் சுலபமாகக் கிரகித்துக்கொள்ள முடிகிறது".

"அப்படியா... சந்தோஷம்", அவரிடம் விடை பெற்றுக் கொண்டேன்.

ஸ்கூட்டரில் ஏறியது முதல் ராஜி எதுவும் பேசாமல் ஆழ்ந்த யோசனையிலிருந்தாள்.

"என்னம்மா பேசாமல் பெலத்த யோசனை. எந்தக் கோட்டையைப் பிடிக்கப் போறை?"

"குழப்பாமை இருங்கப்பா".

'என்ன, இந்தப் பிஞ்சு யோசிக்கிறது', என்று நினைத்துக் கொண்டேன்.

ராஜி, ஸ்கூட்டர் நிற்பதற்கு முன்னதாகவே பாய்ந்து இறங்கி 'அம்மோய்' என்று அழைத்தபடி வீட்டிற் குள்ளே ஓடினாள்.

தேவி, ராஜி குரலைக் கேட்டதும் உடனே வெளியே வந்தாள்.

"அப்பா நீங்களும் வாருங்க", என்றாள் குழந்தை. இருவரையும் கதிரையில் உட்கார வைத்து, தனது ஸ்கூல் 'பாக்கை' திறந்து, கொப்பியை எடுத்து, பென்சிலால் நிதானமாக ராஜி என்று எழுதினாள்.


"என்னம்மா இது!"

"ரீச்சர் சொல்லித் தந்தவ அப்பா".

கண்களை இடுக்கி, சிறிதாக முறுவலித்தாள்.

தேவியைப் பார்த்தேன் அவள் கண்கள் பனித்திருந்தன.

எனக்கு ஏனோ அப்பொழுது எனது அருமை ஆசிரியை மிஸ் செல்லம்மாவின் ஞாபகம் வந்தது. ●




# ஸ்டாலின் அரசின் முதல் பட்ஜெட்

## கசப்பு மாத்திரையாகும் குடும்ப அட்டைகள்



- பகவான் சிங் -
தமிழகத்தின்
சிரேஷ்ட பத்திரிகையாளர்

*“இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்லது அரசு”*

*(குறள் 385)*

முறையாக நிதி ஆதாரங்களை வகுத்து, அரசாங்கக் கருவூலத்திற்கான வருவாயைப் பெருக்கி, அதைப் பாதுகாத்துத் திட்டமிட்டுச் செலவிடுவதுதான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாகும்.

நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தனது முதல் பட்ஜெட்டை வெள்ளிக்கிழமை அறிமுகம் செய்துவைக்கும் சூழலுக்கு, இதைவிடப் பொருத்தமான திருக்குறள் இருக்கமுடியாது. ஒகஸ்ட் 9ஆம் தேதி சொன்னபடி அவர் வெளியிட்ட வெள்ளை அறிக்கை, கடந்த பத்து ஆண்டுகளில் ஆட்சியில் இருந்த அ.இ. அ.தி.மு.க. அரசு, மோசமாக நிதியை மேலாண்மை செய்ததால் எந்த அளவுக்குக் கருவூல நிலைமை பலவீனமாக இருக்கிறது என்பதை சரியாக எடுத்துக் காட்டியது.

5.7 லட்சம் கோடி கடன் (இலங்கைப் பணத்தில் 15 லட்சம் கோடி) அழுத்திக் கொண்டிருக்கும் இந்த நிலையில், பொருளாதாரத்தை அதலபாதாளத்திலிருந்து தூக்கி நிறுத்துவதற்கு மட்டுமல்லாமல், ஏப்ரல் தேர்தலின்போது மு. க. ஸ்டாலின் சொன்ன தேர்தல் வாக்குறுதிகளையெல்லாம் நிறைவேற்றுவதற்குப் போதுமான பணபலத்தைப் பெறுவதற்காகவும் நிதியமைச்சருக்கு ஒரு புரட்சிகரமான அணுகுமுறை தேவைப்படும். அடுத்த சில வருடங்களில் அரசுத் திட்டங்களை செயல்படுத்துவதற்காகவும் வெளிநாட்டு முதலீடுகளைத் தமிழ் நாட்டை நோக்கி ஈர்ப்பதற்காகவும் அவர் உள்கட்டமைப்புகளையும் பிரம்மாண்ட அளவில் மேம்படுத்த வேண்டும்.

இப்போது இருக்கிற சவால்களை எதிர்கொள்ளவும், எதிர்கால முன்னேற்றத்துக்கான தேவைகளை நிறைவேற்றவும் நிதி அமைச்சரின் பட்ஜெட்டில் எல்லா அம்சங்களும் இருக்கின்றன. சென்ற அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் நடந்த குளறுபடிகளால் காலியாகியிருக்கும் கஜானாவை மீட்டெடுக்க வேண்டுமானால் ஒரு கசப்பான மாத்திரையை விழுங்கித்தான் ஆகவேண்டும் என்பதையும் அவர் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார். அரசுப் பணியாளர்களுக்கான ஊதியத்தை வழங்குவதற்குக்கூட எடப்பாடி பழனிச்சாமி கடன் வாங்கியிருக்கிறார், இதுவரை எந்த மாநில அரசும் அதைச் செய்யவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரிசி, சீனி, எண்ணெய், பருப்பு, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசிய பொருட்களை மானிய விலையில் வாங்குவதற்காக மக்களிடம் தரப்பட்டுள்ள 2.10 கோடி குடும்ப அட்டைகள் குறைக்கப்படும் என்பது ஒரு முக்கியமான கசப்பு மாத்திரை. உண்மையாகவே மிக ஏழ்மையானவர்களுக்கு மட்டுமே இந்த அட்டைகள் கிடைக்கும் நிலை ஏற்படலாம். முக்கிய வாக்கு வங்கிகளான ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், வரி கட்டுபவர்கள் போன்றவர்களும் இதில் சேர்க்கப்படமாட்டார்கள்.

வீடுகளுக்கும் தொழில்களுக்கும் தரப்படும் நீரின் அளவுக்கு ஏற்ப கட்டணம் வசூலித்தால் அரசுக்கு வருமானம் அதிகரிக்கும் என்பதால், அந்த நடவடிக்கையும் எடுக்கப்படும். அடுத்தடுத்த அரசுகளின்மூலம் வாக்கு வங்கிகளை ஈர்ப்பதற்காகக் கிடைத்துள்ள நல்வாழ்வுத் திட்டங்கள் குறைக்கப்பட்டு, உண்மையிலேயே தகுதியானவர்களுக்கு மட்டுமே உதவி கிடைக்க வழி செய்யப்படும். மற்றவர்கள் தங்களைத் தாங்களே பார்த்துக்கொள்ளவேண்டியிருக்கும்.

நிதிக்கான கடுமையான தேவை இருந்தாலும்கூட இந்த பட்ஜெட்டில் அவர் எந்த ஒரு புதிய வரியையும் விதிக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால், பெட்ரோலின்மீதான மாநில வரியைக் குறைத்ததன்மூலம் விலையை லீட்டருக்கு மூன்று ரூபாய் குறைத்திருக்கிறார். இதை அறிவிக்கும்போதே பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு உள்ளிட்ட எரிபொருள்கள் மீது ஒன்றிய அரசு விதித்துள்ள கடுமையான வரிகளையும் மாநில அரசுகளுக்கு வருமானத்தில் பங்கு தரப்படவில்லை என்பதையும் சாடினார். இந்தியாவின் வரவு செலவுக் கணக்குகளை சரிபார்க்கும் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர், ஒன்றிய அரசு பணத்தை வீணடிப்பதாகக் குறைகூறியுள்ளதையும் சுட்டிக் காட்டினார்.

“நிலைமையை மேலும் மோசமாக்கும் வகையில், குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒன்றிய அரசால் விதிக்கப்பட்ட மேல்வரிகள், முழுமையாக அக்குறிப்பிட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படவில்லை எனவும், குறிப்பிட்ட காலத்திற்கு விதிக்கப்படும் கூடுதல் வரிகள் காலவரையின்றி தொடர்கின்றன எனவும் இந்திய கணக்குத் தணிக்கைத் துறைத் தலைவர் குறிப்பிட்டுள்ளார்” என்று, சட்டமன்றத்தில் பட்ஜெட் உரையின் போது தெரிவித்தார்.



அரசு செலவுகளைக் குறைப்பதற்கும், வருமானத்தை அதிகரிக்கவும், பொருளாதாரத்தைக் கூர்மையாக கவனிக்கவும் பல கடும் வழிமுறைகள் எடுக்கப்படும் என்று அமைச்சர் எச்சரித்திருக்கிறார். இந்த பொருளாதார நெருக்கடி சரிசெய்ய முடியாத பிரச்னை இல்லை என்றாலும், அதற்குக் கொஞ்சம் காலம் தேவைப்படும் என்றும், அதைத் தான் செய்து முடிக்கப்போவதாகவும் அறிவித்திருக்கிறார். ஏனென்றால், தேர்தல் நேரத்தின் போது தலைவர் ஸ்டாலின் இந்த உறுதிமொழியை அளித்துள்ளார்.

முன்பு இருந்த எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அரசின் காலகட்டத்தில் நடந்த ஊழலை விசாரிப்பதும் ஒரு தேர்தல் உறுதிமொழி. அதுவும் இப்போது நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஒரு மாதத்துக்கு முன்பு அப்போதைய போக்குவரத்துத் துறை அமைச்சர் எம். ஆர். விஜயபாஸ்கருக்குச் சொந்தமான பல இடங்களில் லஞ்ச ஒழிப்புத் துறை முற்றுகை நடத்தியது. செவ்வாய்க்கிழமையன்று முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர் எஸ். பி. வேலுமணியுடன் சம்பந்தப்பட்ட 60 இடங்களில் வருமான வரித் துறை சோதனை நடத்தப்பட்டது. 2014-2018இல் அரசு ஒப்பந்தம் வழங்கிய முறையில் 811 கோடி ரூபாய் ஊழல் நடந்திருக்கிறது என்ற குற்றசாட்டின் அடிப்படையில் முற்றுகைச் சோதனை நடந்தது. ஸ்டாலின் அரசாங்கம் பழிவாங்குகிறது என்று கட்சித் தொண்டர்களும் ஆதரவாளர்களும் குரல் எழுப்பிப் போராட்டம் நடத்தினார்கள். அதிமுக தன் எதிர்ப்பைத் தெரிவித்தது. அஇஅதிமுக தலைவர்களிடையே, குறிப்பாக எடப்பாடி தரப்பில் கடும் மன உளைச்சல் நிலவுகிறது என்று கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. லஞ்ச ஒழிப்புத்துறை பொலீசார் எந்நேரமும் வரலாம் என்ற அச்சத்தால், அவர்கள் உறங்காமல் இருக்கிறார்கள் என்கின்றன உள் வட்டாரங்கள்.

ஆனால், தவறான வழியில் கிடைத்துள்ள பணத்தில் பெரும்பகுதி இந்த ஊழல்வாதிகளிடம் பத்திரமாக இருக்கும்போது, அதில் ஒரு சிறு பகுதியை மட்டும் கைப்பற்றி கருவூலத்தில் சேர்த்து, பொதுப்பணத்தில் சேர்க்க முடிகிறது என்பதால் இந்த கைதுகள், முற்றுகைகள், பொலீஸ் விசாரணைகள், வழக்குகள் ஆகியவற்றால் என்ன பயன்? என் இனிய ஈழ நண்பர்களே, உங்கள் அழகிய நாட்டிலும் இது தான் நிலைமையா?

ஒரு குற்றவாளியைக் கைப்பற்றுவதில் உள்ள முதல் விதி என்பது, அவர் எதிர்பாராத நேரத்தில் சுற்றி வளைப்பது தான். குற்றத்தையும் பணத்தையும் மறைக்கவோ, சிறந்த வழக்கறிஞர்களைக் கண்டுபிடித்து சட்டரீதியாக இதை மூடி மறைக்க அவர்களுக்கு எந்த அவகாசமும் இருக்கக்கூடாது. பல சமயங்களில், பணத்தின் நாற்றத்தில் மூழ்கியிருக்கும் இதுபோன்றவர்களுக்கும் வளைக்கக் கூடிய நீதிமன்றங்களுக்கும் நடுவில் வழக்கறிஞர்களே பாலமாக அமைகின்றனர். தனிப்பட்ட விருப்பங்களுக்காக அரசு நீதித்துறையை அப்படியே விட்டு வைத்திருக்கிறது. பழமையான, ஊழல் மலிந்த சூழலால் நிலுவையில் இருக்கும் வழக்குகள் குவிந்து கிடக்கின்றன. இதனால் நீதி கொல்லப்படுகிறது. தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதி என்பது நாம் அனைவரும் அறிந்ததுதான்.

இந்த அழுகிய சூழலுக்கு நான் ஓர் உதாரணம் தருகிறேன் - இதற்குப் பல உதாரணங்கள் உண்டுதான் என்றாலும், மிகப் பிரபலமான உதாரணம் இது. ஜெயலலிதா, அவரது உடன்பிறவா சகோதரி சசிகலா, அவர்களது இரண்டு உறவினர்கள் ஆகியோரை சொத்துக் குவிப்பு வழக்கில் குற்றவாளியாக அடையாளம் கண்டு தீர்ப்பு வருவதற்கு 21 ஆண்டுகள் தேவைப்பட்டன. முதல் குற்றவாளியான அம்மாவின் மரணம் நடந்து இரண்டு மாதங்களுக்குப் பிறகு, பெப்ரவரி 2017இல்தான் உச்சநீதிமன்றத் தீர்ப்பு வந்தது. இந்த வழக்கு பெங்களூருவிலும் டெல்லியிலும் சென்னையிலும் ஆமை வேகத்தில் ஊர்ந்துகொண்டிருக்கும்போதே, அம்மா ஜெயலலிதா முதல்வராக ஆட்சி செய்து, தன் இரும்புக்கரங்களால் பணத்தையும் தங்கத்தையும் அள்ளிக் குவித்துக்கொண்டிருந்தார்.

இதில் மிக மோசமான அம்சத்தை நான் இன்னும் உங்களிடம் சொல்லவில்லை. ஜெயலலிதா மற்றும் சசிகலாவின் ஊழல்பற்றி தீர்ப்பு கூறிய உச்சநீதிமன்றம், அவருடைய பேராசையையும் பகட்டையும் பற்றிய வெளிப்படையான கருத்துக்களைத் தெரிவித்த பிறகும், “எங்களது ஆட்சி அம்மாவின் ஆட்சி” என்றே முதல்வர் எடப்பாடியும் அமைச்சர்களும் கட்சிப் பிரமுகங்களும் பெருமிதத்தோடு மார்தட்டிக்கொண்டனர். அதற்கு எடுத்துக்காட்டாக, அம்மாவின் படத்தை தங்கள் சட்டை பையில் வெளியில் தெரிகிறமாதிரி விளம்பரப்படுத்திக் கொண்டனர். அதைச் சொல்லியே 2021 ஏப்ரல் தேர்தல்களின்போது வாக்கும் கேட்கப்பட்டது. பொதுமக்களின் அலட்சியமும் அறியாமையும் உச்சநீதிமன்றத் தீர்ப்பை மூடி மறைத்துவிடும் என்று அவர்கள் நம்பினார்களா என்ன?

இதில் மிக மோசமான அம்சத்தை நான் இன்னும் உங்களிடம் சொல்லவில்லை. மக்களும் தீர்ப்பை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.. 234 உறுப்பினர்கள்கொண்ட அவையில் 66 வெற்றியாளர்களைப் பெற்று, 34.24வீத வாக்குகளைப் பெற்றது அ.இ.அ.தி.மு.க. எதிர்க் கட்சியான திமுக 37.7வீத வாக்குகள் பெற்றது (133 இடங்கள்). ஊழல் பற்றி மக்கள் கண்டுகொள்ளமாட்டார்கள் என்று அதற்குப் பொருள் கொள்ளலாமா? செல்வச்செழிப்பான ஒப்பந்தகாரர்கள், தொழிலதிபர்களிடமிருந்து மட்டும்தான் அரசியல்வாதிகள் பணம் சம்பாதிக்கிறார்கள் என்று நம்பும் பொது மக்கள், போட்டிபோடும் கட்சிகள் கொடுக்கும் பிரம்மாண்ட வாக்குறுதிகளை நம்பி வாக்குப் போடுகிறார்கள். ஆயிரம் ரூபாய் லஞ்சம், பிரியாணி பொட்டலம், குவார்ட்டர் பிரண்டி என தேர்தல் நேரங்களில் கிடைக்கும் இலவசங்களோடு இவர்கள் திருப்திப்பட்டுவிடுகிறார்களா?

உச்ச நீதிமன்றம் விதித்த நான்கு ஆண்டு சிறைவாசத்துக்குப் பிறகு வெளிவந்த சசிகலா இன்னும் ஏன் அரசியல் தளத்தில் இயங்குகிறார்? அவரிடம் இன்னும் இருக்கும் தவறான பணத்தின் நிலை என்ன?

இதுபோன்ற மோசமான நிலை ஈழத்தில் வரக்கூடாது என்றும், மோசமான அரசியலை ஈழ மக்கள் இந்த அளவுக்கு சகித்துக்கொள்ளும் நிலை வரக்கூடாது என்றும் நான் கடவுளிடம் வேண்டிக் கொள்கிறேன். வாக்காளர்களுக்கு லஞ்சம் கொடுத்து, ஆட்சிக்காலத்தில் பணத்தைக் குவித்து, அந்தப் பணத்தில் ஒரு பங்கை செலவு செய்து வாக்குகளை விலைக்கு வாங்கும் ஊழல் அரசியல்வாதிகளிடமிருந்து சமூகம் காப்பாற்றப்பட்டால் மட்டுமே ஜனநாயகம் பிழைக்கும்.

தட்டுத்தடுமாறும் வழக்குகளுக்குப் பிறகும்கூட சட்டவிரோதமாக சேர்க்கப்பட்ட பணம் சம்பந்தபட்டவரிடமே இருக்கிறது. இதைச் சொல்லும்போது எனக்கு ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. சில ஆண்டுகளுக்கு முன்னால் ராயப்பேட்டையில் உள்ள ஒரு திரையரங்கத்தில் இரவுக் காட்சி படம் பார்த்துவிட்டு சைக்கிளில் வந்த ஓர் ஆசிரியரை ரோந்துப் போலீசார் கைதுசெய்தனர். தான் ஒரு சாதாரண் ஆசிரியர் எனவும், தன் குடும்பம் சொந்த ஊருக்கு சென்றிருப்பதால் படம் பார்க்கச் சென்றதாகவும் அவர் கெஞ்சினார். ஆனால், அவர் கையில் டிக்கெட் இல்லாததால் சந்தேக அடிப்படையில் கைதுசெய்வதாக இரவுப்பணியில் இருக்கும் சப் இன்ஸ்பெக்டர் அன்போடு தெரிவித்தார். இன்ஸ்பெக்டர் காலையில் வரும்போது அவர் விடுவிக்கப்படுவார் என்றும் சொல்லப்பட்டது. காலை வந்தது, இன்ஸ்பெக்டர் வந்தார்,

(18ஆம் பக்கம் பார்க்க)

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II

நேரம் - 1 மணித்தியாலம் 15 நிமிடம்

கல்வி tv CHANNEL

(ii) பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.
ஒருவர் செய்யும் நன்மை தீமை அவரையே வந்து சேரும்.

……………………………………………………………………………………………

**07) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக் கூட்டல் உள்ள சொற்களை அடைப்புக்குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) ஆசிரியர் மாணவர்களுக்கு ……………………………… (ஆலோசனை, ஆலோசணை) கூறினார்.

(ii) கலை விழாவினைக் …………………… (கண்டுகழிக்க, கண்டுகளிக்க) எல்லோரும் வாருங்கள்.

08) (i) பின்வரும் வாக்கியத்தை எதிர்காலத்தில் எழுதுக.

மீன்கள் குளத்தில் நீந்தின……………………………………..

(ii) பின்வரும் கருத்தை குறித்து விளக்கும் மரபுத்தொடரை எழுதுக.

அறிவுண்டாதல்…………………………………………………..

**09) பின்வரும் தொனிகளுக்குரிய பிராணியின் பெயரை எழுதுக.**


i) பிளிறும் ……………..……….. ii) ரீங்காரம் செய்யும் …………………………..


**10) பின்வரும் சுருக்கக் குறியீடுகளின் விரிவினை எழுதுக.**

i) இ. போ. ச. - ………………………………………………………………………….

ii) ம. ப. பா - ………………………………………………………………………….

**11) தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**





i) …………………………………….. ii) ……………………………………..

**12) கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.**

i) a / am / reading / I / book

………………………………………………………………………………………

ii) are / These / ears / my

………………………………………………………………………………………

**13) தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்சொற்களை எழுதுக.**

(i) Dustbin : ………………………… (ii) National Anthem : …………………………

14) **(i)** சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

சீயா - ………………………………………………………………………………..

(ii) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.

மெஹே என்ன : ………………………………………………………………………..

15) "இருபத்தெட்டாயிரத்து தொள்ளாயிரத்து ஒன்பது" என்னும் எண்ணுடன் ஒன்றைக் கூட்டும் போது கிடைக்கும் எண்ணை இலக்கங்களில் எழுதுக.

………………………………………………………………………………………………

16) 30425 என்ற எண்ணில் இலக்கம் 4 இன் இடப்பெறுமானம் யாது?


………………………………………………………………………………………………

17) 4 தீக்குச்சிகளைப் பயன்படுத்தி உரோம எண்குறியில் 7 என்பதை வகை குறித்துக் காட்டலாம். எனின், 17 என்பதை உரோமன் எண்குறியில் காட்டுவதற்கு எத்தனை தீக்குச்சிகள் தேவைப்படும்.

………………………………………………………………………………………………

18) பின்வரும் உருவில் $\frac{1}{2}$ பங்கினை

பென்சிலால் அல்லது பேனவால் நிழற்றிக் காட்டுக.



19) பாத்திரம் ஒன்றின் கொள்ளளவு 3 லீற்றர் ஆகும். அப்பாத்திரத்தில் 1 லீற்றர் 400 மில்லி லீற்றர் அளவு நீர் உள்ளது. அப்பாத்திரம் முழுமையாக நிரப்புவதற்கு மேலும் தேவைப்படும் நீரின் அளவு யாது?

…………….. லீற்றர் ……………….. மில்லிலீற்றர்

20) 636 புத்தகங்களை 6 பாடசாலைகளுக்கு சமமாக பகிர்ந்தளிக்கும் போது ஒரு பாடசாலைக்கும் கிடைக்கும் புத்தகங்கள் எத்தனை?

………………………………………………………………………………………………

21) கடையொன்றில் உள்ள 68 முட்டைகளில் $\frac{3}{4}$ விற்பனை செய்தால் எஞ்சிய முட்டைகளின் எண்ணிக்கை யாது?

………………………………………………………………………………………………

22) குமாரின் வயது 12 வருடங்கள் 6 மாதங்களும், நாதனின் வயது 7 வருடங்கள் 8 மாதங்களும் ஆகும். இருவரின் வயதுகளின் கூட்டுத்தொகை யாது,

…………… வருடங்கள் ………………… மாதங்கள்

# 21ஆம் திகதி கறுப்புக் கொடி ஏற்றுமாறு பேராயர் அழைப்பு விடுப்பு

கொழும்பு, ஓக. 15

“21.04.2019 தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் நடைபெறும் விசாரணைகளில் திருப்தி இல்லை. இதன் உண்மை கண்டறியப்பட வேண்டும். இதனை வலியுறுத்தும் வகையிலும், அரசு தமது பயணத்தை மாற்ற வேண்டும் என அழுத்தம் கொடுக்கும் வகையிலும் எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை வீடுகளுக்கு முன்னால் கறுப்புக் கொடி ஏற்றுமாறு மக்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.”

- இவ்வாறு பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“21.04.2019தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்கு ஜனாதிபதி ஆணைக் குழுவொன்று அமைக்கப்பட்டது. அந்த ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் ஆராய்ந்து பரிந்துரைகளை முன்வைப்பதற்காக அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டது. இக்குழு நியமிக்கப்பட்டமை சர்ச்சைக்குரிய காரணியாகும். தனிக்கட்சியொன்றின் உறுப்பினர்களே உப குழுவில் அங்கம் வகிக்கின்றனர். அவர்கள் அரசியல் பின்னணி கொண்டவர்கள். எனவே, ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு மேலாக இக்குழு நியமிக்கப்பட்டதை அனுமதிக்க முடியாது.

அதேபோல் ஜனாதிபதிக்கு நாம் அறிக்கையொன்றை அனுப்பியிருந்தோம். அதற்கு வழங்கப்பட்ட பதிலும் திருப்திகரமாக இல்லை. அதனை நிராகரிக்கின்றோம். தற்போது முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளின் பிரகாரம் நீதி கிடைக்குமா என்ற சந்தேகமும் மேலோங்கியுள்ளது.

அதேவேளை, இராணுவப் புலனாய்வுப்பிரிவுக்கும், சஹ்ரான் குழுவினருக்கும் இடையில் அன்று சிற்சில கொடுக்கல் - வாங்கல்கள் இடம்பெற்றுள்ளன. இவை என்ன என்ற வினா எழுகின்றது. ஆமி மொய்தீன் ஊடாக இடம்பெற்ற அந்த கொடுக்கல் - வாங்கல்கள் என்ன? இது தொடர்பில் விசாரணை இடம்பெற்றதா?

வவுணதீவில் பொலிஸ் அதிகாரிகள் இருவர் கொல்லப்பட்டனர். இதன் பின்னணி குறித்து சரிவர விசாரணை நடத்தப்பட்டதா?

அத்துடன் ‘சொனிக்’ என்ற அரச புலனாய்வுப் பிரிவு அதிகாரி மாத்தளை சஹ்ரான் என்பவரைப் பயன்படுத்தி, இந்தோனேசியாவுக்கு அழைப்பை ஏற்படுத்தி தாக்குதலுக்கான பொறுப்பை ஏற்குமாறு ஐ.எஸ். அமைப்பிடம் கோரியது ஏன்? தாக்குதலின் பின்னணியில் செயற்பட்ட உண்மையான நபர்களை பாதுகாப்பதற்காகவா இவ்வாறு ஐ.எஸ். அமைப்பினரை தொடர்பு கொண்டனர்?



தாஜ் சமுத்திரா ஹோட்டலுக்கு தாக்குதல் நடத்தச்சென்ற தற்கொலை குண்டுதாரியுடன் தொடர்பைப் பேணிய இராணுவ புலனாய்வுப்பிரிவு அதிகாரி யார்? இவை தொடர்பில் ஆராயப்பட்டாத?

இவ்வாறு அடி முதல் முடிவரை எல்லாம் ஆராயப்பட்டு அனைவரும் கண்டுபிடிக்கப்பட வேண்டும். நெத்திலிமீன்களை பிடித்துவிட்டு சூறாக்களைத் தப்பிக்க இடமளிக்கமுடியாது. அவ்வாறானதொரு முயற்சியா இடம்பெறுகின்றது என்ற சந்தேகம் எழுகின்றது. எது எப்படி இருந்தாலும் நீதி கிடைக்கும்வரை நாம் ஓயமாட்டோம்.

21.04.2019 தாக்குதல் தொடர்பான விசாரணைகள் மூடிமறைக்கப்படக்கூடாது. எனவே, உண்மைகண்டறியப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்கும், மக்களின் மனநிலையைப் புரிந்துகொண்டு அரசு நேர்வழியில் பயணிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் முகமாகவும், மக்களுக்கான ஆட்சியை நடத்துமாறு அழுத்தம் கொடுத்தும் எதிர்வரும் 21ஆம் திகதி வீடுகள், வியாபார நிலையங்கள், அலுவலகங்கள் மற்றும் ஆன்மீக நிலையங்களில் கறுப்புக்கொடி ஏற்றுவோம்.

அதேவேளை, 21.04.2019 தாக்குதல் சம்பவம் தொடர்பில் நீதி கிடைக்காவிட்டால் சர்வதேசத்தை நாடுவது உறுதி. பாப்பரசருக்கு இது தொடர்பில் கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது” - என்றார். (இ)

# மரண அறிவித்தல்



| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 14 . 04 . 1953 | | 14 . 08 . 2021 |

## அமரர் நடேசன் ராசலிங்கம்

### (ராஜா அண்ணன்)

### (லக்சுமி கோல்ட் ஹவுஸ்)

கொட்டாஞ்சேனை கொழும்பை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நடேசன் ராசலிங்கம் (ராஜா அண்ணன்) நேற்று (14.08.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் நடேசன் தம்பதிகளின் அன்பு மகனும், சண்முகம் – சரஸ்வதி தம்பதிகளின் மூத்த மருகனும், வசந்தகுமாரி (துங்கம் – நெடுந்தீவு) அவர்களின் அன்புக் கணவரும், கோகிலவாணி (வெளிநாட்டு அமைச்சு, கொழும்பு) புஸ்பகாந் (Dan Tv), தர்சி (கனடா) அவர்களின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**(மனைவி, பிள்ளைகள்.)**

தொடர்புகளுக்கு: 077 212 5528

முகவரி: 22/01 கின்னர் லேன்,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# முகக்கவசம் அணியாமல் வெளியே வந்தால் கைது

## நேற்றிலிருந்து சட்டம் கடுமையாக அமுல்



**கொழும்பு, ஓக.15**

**முகக்கவசம் அணியும் சட்டவிதியைப் பொலிஸார் நேற்றிலிருந்து கடுமையாக அமுல்படுத்தியுள்ளனர்.**

அதற்கமைய எக்காரணம் கொண்டும் முகக்கவசம் அணியாமல் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண பொதுமக்களைக் கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பில் நேற்று ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

”2020ஆம் ஆண்டு ஒக்டோபர் 17ஆம் திகதி தனிமைப்படுத்தல் மற்றும் நோய் தடுப்புச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பின்படி, பொது இடத்தில் முகக்கவசம் அணியாத நபர் தனிமைப்படுத்தப்பட்ட சட்டம் மற்றும் குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படலாம்.

அத்தகைய குற்றத்தைச் செய்யும் ஒருவரைப் பிடியாணை உத்தரவு இல்லாமல் கைதுசெய்ய சட்ட ஏற்பாடுகள் உள்ளன.

இந்தச் சட்டத்தின் கீழ் முகக்கவசம் அணியாததாலும், சரியானமுறையில் முகக்கவசங்களை அணியாததாலும் கடந்த ஒக்டோபரில் இருந்து 53 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக கடுமையான நடவடிக்கை எடுக்கத் தேவையான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

இதனால், முகக்கவசம் இல்லாதவர்களுக்கும், சரியாக முகக்கவசம் அணியாதவர்களுக்கும் இன்று (நேற்று) முதல் சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும்” - என்றார். (இ)

## ஸ்டாலின் அரசின்...

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரிமாண்ட் வண்டியும் வந்தது.அவர் தரப்பு நியாங்களைக் காதில் வாங்காமல், பதினைந்து நாட்கள் நீதிமன்றக் காவலில் அவரை வைக்குமாறு மேஜிஸ்ட்ரேட் உத்தரவிட்டார், அவர் சிறையில் அடைக் கப்பட்டார். ரிமாண்ட் நீடிக்கப்பட்டுக் கொண்டே போனது. அவர் கிட்டத்தட்ட ஒரு வருடம் சிறையில் இருந்தார்.

ஓர் ஏழை ஆசிரியராக இருந்ததைத் தவிர அவர் எந்தக் குற்றமும் செய்யவில்லை. சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் நடந்த ரிமாண்ட் அமர்வுகளில் அவரை சந்தித்தேன். சிறையில் அடைக் கப்பட்டு வாழ்நாளையே தொலைக்கும் அப்பாவி மக்களைப் பற்றிய கட்டு ரையை எழுதுவதற்காக அங்கு சென்றிருந்தேன். பேசி முடித்ததும் ஒரு சோக மான புன்னகையோடு கைதிகளையும் அவர்களது உறவினர்களையும் பார்த்தார். அவர்களில் ஒருவரைக் கூப்பிட்டார். அந்தக் கைதி ஒரு பிக்பாக்கெட். பேருந்தில் பயணித்த ஒரு பெண்ணிடமிருந்து பணம் திருடப்போய் அனுபவமில்லாததால் சிக்கிக்கொண்டவர் அவர். பல மாதங்களாக ரிமாண்ட் அமர்வுகளில் அலைந்துகொண்டிருக்கிறார். “பசித்த குழந்தைகளுக்கு சாப்பாடு வாங்க 40 ரூபாய் திருடினேன். பொலீஸார் என்னை காவல்நிலையத்தில் அடித்துத் துவைத்தார்கள், அந்தப் பணத்தை எடுத்துக்கொண்டு சிறையில் அடைத்தார்கள். எத்தனை மாதங்கள் கடந்திருக்கிறது என்றே தெரியவில்லை” என்றார்.

இந்த வாரக் கட்டுரையை முடிப்பதற்கு முன்னால் ஓர் அலைக்கழிப்பான எண்ணத்தை உங்கள் முன் வைக்க அனுமதி கோருகிறேன். அரசுக்கு சொந்தமான டான்ஸி நிறுவனத்தின் சொத்துக்களைக் கையகப்படுத்திக்கொண்டதாகத் தொடரப்பட்ட ஊழல் வழக்கிலிருந்து ஜெயலலிதாவை விடுவித்த உச்சநீதிமன்றம், மனசாட்சியோடு நடந்துகொள்ளுங்கள், சொத்துக்களை அரசிடம் திருப்பிக் கொடுங்கள் என்று அறிவுறுத்தியது. இதுபோன்ற ஓர் அற்புதமான யோசனை ஏன் பொலீசாருக்கு வரவில்லை? அழுக்கடைந்த காற்சட்டை பாக்கெட்டிலிருந்து அந்த நாற்பது ரூபாயை எடுத்தபின்பு ஏன் அந்த பிக்பாக்கெட்டை பட்டினியில் வாடிக்கொண்டிருக்கும் குடும்பத்தாருடன் போகவிடவில்லை என்றும் யோசிக்கிறேன்.

## ஈக்கள் போல...

மக்கள் ஈக்களைப் போல இறக்கிறார்கள்."

-இவ்வாறு அவிசாவளை பொது வைத்தியசாலையின் கோவிட் விடுதியில் கடமையாற்றும் நஜித் இந்திக என்ற மருத்துவர் தனது முகப்புத்தகத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

அவர் தனது பதிவில்-

வேலை தொடர்பான மன அழுத்தம் பற்றி கேட்ட மற்றும் படித்த பிறகு, அது உண்மையில் எப்படி இருக்கிறது என்பதை இப்போது உணர்கிறேன். 'ஒட்சிசன் தீர்ந்துவிட்டது' என்ற உணர்வு.

இதுவரை வந்த கொவிட்-19 நோயாளிகளின் எண்ணிக்கை, அவர்கள் சிரமப்படும் விதம், ஒட்சிசன் கொடுக்கப்படவேண்டிய நோயாளிகளின் எண்ணிக்கை, சிரமம் உள்ள நோயாளிகளின் வயது நிலைகள், இவை அனைத்தும் ஒரே வாரத்தில் மாறின.

அது ஒரு பெரிய வித்தியாசம். விடுதியில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை மூன்று மடங்குக்கும் அதிகமாக உள்ளது.

முன்பை விட தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில் நோயாளிகள் அனுமதிக்கப்படும் சூழ்நிலையில், 70 மற்றும் 80 வயதுடைய பெற்றோர்கள் முன்பு கொஞ்சம் கடினமாக இருந்தனர். இப்போது அது 30 மற்றும் 40 வயதுடையவர்களுக்கு கடினமாக உள்ளது.

இன்னும், இன்னும் , ஒட்சிசன் வழங்கல் இயந்திரங்கள் அதிகபட்ச வரம்பில் இயங்கும்போது கூட, மக்கள் இறப்பதற்காகக் காத்திருக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

நாற்பது வயதில் ஒரு தாய் தன் மகளுக்கு முன்னால் மூச்சுத் திணறலால் இறந்தார்,

சி.பி.ஏ.பி. ஒரு இயந்திரத்தில் இணைக்கப்பட்டிருப்பதால், பேசுவதில் சிரமம் உள்ள ஒரு மனைவி தன் கணவருடன் கைகோர்த்து கண்களினால் விடைபெற்றார்.

அவரது மனைவி இரட்டைக் குழந்தைகள் பிறப்புக்குத் தயாராகி கொண்டிருந்த போது, 27 வயதான கணவர் ஒன்றும் செய்ய இயலாது தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு அனுப்பப்பட்டார்.

இந்த விகிதத்தில் இன்னும் இரண்டு வாரங்களுக்கு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்தால், ஒட்சிசன் இல்லாததால் மக்கள் நாற்காலிகளிலும், தரையிலும் முற்றத்திலும் இறந்துவிடுவார்கள்.

எனவே, இதையெல்லாம் பார்த்துவிட்டு நேற்று மாலை (கடந்த வியாழன்) நான் வீட்டுக்கு வந்தபோது, ஹெகலியரம்புக்வெலவின் கதையை பார்த்தேன்.

"எதுவாக இருந்தாலும், நாடு மூடப்படாது, தடுப்பூசி போடப்பட்டு வாழ்க்கை கடவுளிடம் ஒப்படைக்கப்படும்"என்று தெரிவித்திருந்தார்.

இந்த கடிதம் இங்கே நிறுத்தப்படுகிறது. ஏனென்றால் எனக்குத் தடையற்ற மொழியில் எழுதத் தெரியாது.

முடிந்தவரை கவனமாக இருங்கள்!

முடிந்தால், எல்லா வேலைகளையும் இடைநிறுத்தி வீடுகளுக்குச் செல்லுங்கள்!

மக்கள் ஈக்களைப் போல இறக்கிறார்கள்! -என்று குறிப்பிட்டுள்ளார்.

## கோவிட் நோயாள...

இல்லாமல் வீட்டிலேயே பராமரிக்கும் திட்டம் நேற்று இரத்தினபுரி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களை மருத்துவ மேற்பார்வையின் கீழ் வீட்டுப் பராமரிப்புத் திட்டம் முதலில் மேல் மாகாணத்தில் தொடங்கப்பட்டது.

எதிர்காலத்தில் இந்தத் திட்டம் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வீட்டு பராமரிப்பு கண்காணிப்பு திட்டத்துக்கு ஏறக்குறைய ஆயிரம் மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். வேலை வாய்ப்புக்கு முந்தைய நியமனத்துக்காக காத்திருக்கும் 426 மருத்துவர்களுக்கும் இந்தத் திட்டத்தை முன்னெடுக்க பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

கோவிட்-19 நோயாளிகள், பகுதி சுகாதார மருத்துவ அலுவலருக்கு வழங்கப்பட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் அளவுகோல்களின்படி வீட்டிலேயே சிகிச்சைக்காக பதிவு செய்யப்படுகின்றனர்.

இந்த பதிவு செய்யப்பட்ட நோயாளிகளுக்காக 1390 என்ற அவசர தொலைபேசி இலக்கம் 24 மணி நேரமும் சேவையில் இருக்கும்.

நோயாளி வீட்டில் சிகிச்சை பெற வேண்டுமானால், அவர் சம்மதம் தெரிவிக்கவேண்டும்.

எவ்வாறாயினும், அடிப்படை பிரச்னைகள் மற்றும் கடுமையான சிக்கல்கள் உள்ள அனைத்து நோயாளிகளும் வழக்கம் போல் சிகிச்சை மையங்களுக்கு தொடர்ந்து பரிந்துரைக்கப்படுவார்கள் என்று சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

## கடுமையான...

கொரோனா தொற்றுநோய் இருந்த போதிலும் சிலர் தங்களது சுகாதார வழிமுறைகளைப் புறக்கணித்து வருவதாகவும்,பொதுமக்களின் இந்த செயற்பாடு பயனற்றது என்றும் பிரதமர் இதன்போது கூறினார்.

இதன்படி, இன்றும்(நேற்று) நாளையும்(இன்று)கடுமையான முடிவுகள் எடுக்கப்படும் என்றும், நாட்டு மக்களின் உயிர்களைக் காப்பாற்ற அரசாங்கம் பல வழிகளிலும் முயற்சிகளை மேற்கொள்ளும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், பொதுமக்களின் ஆதரவு இன்றி கொரோனா தொற்றை கட்டுப்படுத்த முடியாது எனவும் பிரதமர் மஹிந்த சுட்டிக்காட்டினார்.

தற்போது கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டு வருவதாகவும் முதலாவது மற்றும் இரண்டாவது தடுப்பூசி செலுத்தும் பணிகள் நிறைவடைந்தவுடன் தேவைப்பட்டால் உலக சுகாதார அமைப்பின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக மூன்றாவது தடுப்பூசிகளைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார். (அ)

## செஞ்சோலைப் படு...

இதன்போது, செஞ்சோலை படுகொலையின் 15 ஆண்டு நினைவேந்தலை குறிக்கும் பதாகை முன்பாக சுடரேற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வு தொடர்பாக தகவல் அறிந்து அவ்விடத்துக்கு விரைந்த இராணுவத்தினர் மற்றும் வல்வெட்டித்துறை பொலிஸார், நினைவேந்தலை தடுக்க முயற்சிகளை மேற்கொண்டபோதிலும் அவைகளை மீறி சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

கடந்த 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் 14ஆம் திகதி, முல்லைத்தீவு- வள்ளிபுனம் பகுதியிலுள்ள செஞ்சோலை சிறுவர் இல்ல வளாகம் மீது விமானப் படை நடத்திய தாக்குதலில் 54 மாணவிகள் உட்பட 61 பேர் கொல்லப்பட்டனர். 129இற்கும் அதிகமான மாணவிகள் அவயவங்களை இழந்தமை குறிப்பிடத்தக்கது.

## வீதியில் வீழ்ந்து...

ரிழந்த 75 வயதுடைய அழகம்மா என்ற பெண் மற்றும் 47 வயதுடைய விஜயகுமார் ஆகிய இருவரின் மாதிரிகள் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்துக்கு பரிசோதனைக்காக அனுப்பப்பட்டிருந்தன.

அவற்றின் முடிவுகள் நேற்று வெளியாகின.

அவற்றின் அடிப்படையில்,

நேற்று முன் தினம் வீதியில் வீழ்ந்து உயிரிழந்த கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை ஊழியரான விஜயகுமார் கொரோனா தொற்றின் பாதிப்பினாலேயே உயிரிழந்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் மிகத் தீவிரம் பெற்றுள்ள கொரோனா அபாயம் குறித்து மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளுமாறு சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### கொரோனா நெருக்கடியைத் தணிக்க

# நாளை முதல் 7 நாள்கள் சுய பயண கட்டுப்பாடு

### ஒத்துழைக்குமாறு மக்களிடம் சுகாதார பரிசோதகர்கள் வேண்டுகோள்

கொழும்பு, ஓக. 15

நாடளாவிய ரீதியில் நாளை திங்கட்கிழமை முதல் 7 நாள்கள் பயணக் கட்டுப்பாடுகளை சுயமாகப் பின்பற்றி பொது மக்கள் ஒத்துழைக்குமாறு இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பயணக் கட்டுப்பாடுகளை விதிக்க அரசையோ அல்லது அதிகாரிகளையோ கட்டாயப்படுத்தியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது என்று சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கையில் கொரோனா பரவுவதைக் கட்டுப்படுத்த உலக சுகாதார நிறுவனம் பரிந்துரைத்த நடவடிக்கைகள் எதுவும் புதிய வழிகாட்டுதல்களில் சேர்க்கப்படவில்லை.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஏழு நாள் பயணக் கட்டுப்பாடு மூலம் கொரோனா நெருக்கடியைத் தணிக்கப் பொதுமக்கள் ஒத்துழைக்கவேண்டும்.

பயணக் கட்டுப்பாடுகளை விதிக்க அரசிடமோ அல்லது அதிகாரிகளிடமோ வலியுறுத்தினாலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது.

தினசரி உயிரிழக்கும் 150 கொரோனா நோயாளிகளில் பெற்றோர், உடன்பிறப்புகள் மற்றும் சக இலங்கையர்களின் குழந்தைகள் அடங்குவர்.

தற்போதைய நிலைமையைக் கட்டுப்படுத்த ஒரே வழி கடுமையான பயணக் கட்டுப்பாடுகள்.

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த உலக சுகாதார நிறுவனம் பரிந்துரைத்த புதிய வழிகாட்டுதல்கள் எதுவும் தற்போது வெளியிடப்பட்ட புதிய வழிகாட்டுதல்களில் சேர்க்கப்படவில்லை.

மருத்துவமனைகளின் வரம்புகள் மற்றும் இடைநிலை சிகிச்சை நிலையங்களின் வசதிகள் நிரப்பப்பட்டதால் ஏற்கனவே நாட்டில் நடைமுறையில் இருந்த கட்டுப்பாடுகள் கடுமையக்கப்பட்டு பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்று பலர் எதிர்பார்த்தனர்.

தற்போதைய நிலமையை மாற்றியமைக்க இந்த வழிகாட்டுதல்கள் போதுமானதாக இல்லை என்று உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது" - என்றார்.

# வவுனியா மாவட்டத்தில் நாள்தோறும் எகிறும் கொரோனாத் தொற்றாளர்கள்

### மேலும் 76 பேர் அடையாளம்

வவுனியா, ஓக. 15

வவுனியா மாவட்டத்தில் மேலும் 76 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய சமயபுரம் பகுதியில் இருவருக்கும், மூன்றுமுறிப்பு இராணுவ முகாமில் ஒருவருக்கும், ஈரப்பெரியகுளம் பகுதியில் ஒருவருக்கும், தேக்கவத்தைப் பகுதியில் இருவருக்கும், வீரபுரம் பகுதியில் ஒருவருக்கும், சின்னசிப்பிக்குளம் பகுதியில் நான்கு பேருக்கும், ஓமந்தைப் பகுதியில் 14 பேருக்கும், நெடுங்கேணி பகுதியில் இருவருக்கும், அரசடிக்குளம் பகுதியில் இருவருக்கும், நெடுங்குளம் பகுதியில் ஒருவருக்கும், பூந்தோட்டம் பகுதியில் மூன்று பேருக்கும், மகாறம்பைக்குளம் பகுதியில் மூன்று பேருக்கும், பாரதிபுரம் பகுதியில் ஒருவருக்கும் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, சிறிராமபுரம் பகுதியில் ஒருவருக்கும், ரயில் திணைக்கள விடுதியில் ஒருவருக்கும், நேரியகுளம் பகுதியில் 12 பேருக்கும், தோணிக்கல் பகுதியில் நான்கு பேருக்கும், கூமாங்குளம் பகுதியில் இருவருக்கும், சண்முகபுரம் பகுதியில் ஒருவருக்கும், செக்கட்டிப்புலவு பகுதியில் ஒருவருக்கும், சூசைப்பிள்ளையார்குளம் பகுதியில் ஒருவருக்கும், போகஸ்வேவ பகுதியில் ஒருவருக்கும், இராசேந்திரங்குளம் பகுதியில் ஒருவருக்கும், சோயாலேன் பகுதியில் ஒருவருக்கும் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அத்துடன் வெளிக்குளம் பகுதியில் மூன்று பேருக்கும், கோவில்புதுக்குளம் பகுதியில் மூன்று பேருக்கும், பண்டாரிக்குளம் பகுதியில் ஒருவருக்கும், தந்திரிமலை பகுதியில் ஒருவருக்கும், அம்பலாங்கொட பகுதியில் ஒருவருக்கும், தரணிக்குளம் பகுதியில் ஒருவருக்கும், முதலியார்குளம் பகுதியில் ஒருவருக்கும், தம்பனைக்குளம் பகுதியில் ஒருவருக்கும், மகாசிலாம்பலாங்கொட பகுதியில் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## கைதிகளை...

அனுமதி வழங்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சிறைச்சாலைகள் பேச்சாளர் சிறைச்சாலை ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அதற்கமைய, வழக்கு நடவடிக்கை தொடர்பில் கைதிகளை சந்திக்க சட்டத்தரணிகளுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்றும், சுகாதார வழிமுறைகளின் கீழ் வழக்கு தொடர்பான ஆவணங்கள் மாத்திரம் அவர்களுக்கு வழங்கப்படும் என்றும் சிறைச்சாலை பேச்சாளர் மேலும் கூறினார்.

## 3,245 பேருக்கு...

யுள்ளனர்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 7 ஆயிரத்து 345 ஆக உயர்வடைந்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (இ)

## நாட்டில் கொரோனா...

தினம் அதிக மரணங்கள் பதிவாகின.

இவற்றுடன் நாட்டில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5,935 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று முன் தினம் உயிரிழந்தவர்களில் 87 ஆண்களும் 73 பெண்களும் அடங்குகின்றனர். இறந்த 160 பேரில் 124 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் என அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று வரையான கடந்த 13 நாட்களில் மட்டும் இலங்கையில் 1350 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஈழநாடு
Eelanadu

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 151 பேர் கைது!

கொழும்பு, ஓக. 15

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 151 பேர் கைதுசெய்யப்படடுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சளார் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகளை மீறி மேல் மாகாணத்துக்குள் பிரவேசிக்க முயன்ற 234 பேரும் 165 வாகனங்களும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

குறுக்குப் பாதைகள் ஊடாக மேல் மாகாணத்துக்குள் பிரவேசிக்க மற்றும் மேல் மாகாணத்திலிருந்து வெளியேற முயன்ற 3 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (இ)

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 21 . 07 . 1948



ஆண்டவன் அடியில் 12 . 08 . 2021

### கந்தையா சுந்தர்லிங்கம் (கேதீஸ்)

புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு 9ம் வட்டாரத்தை வாழ்விடமாகவும், சுவிஸ் Romanel-sur-Lausanne ஐ வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சுந்தர்லிங்கம் கடந்த (12.08.2021) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா – பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சண்முகம் – தையலம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் பாசமிகு கணவரும், ஜெயந்தன் (சுவிஸ்), சுகந்தி (சுவிஸ்), வசந்தன்(சுவிஸ்), சுகந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும்,காலஞ்சென்ற சிவசோதி, கயல்விழி, தீபா, றஜிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், பேரின்பநாதன் (கனடா), வரதம்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், முத்துலிங்கம் (கனடா), லெட்சுமணன் (கனடா), இராமச்சந்திரன் (இலங்கை), காலஞ்சென்ற விக்கினேஸ்வரி (சுவிஸ்), வசந்தராணி (சுவிஸ்), நகுலேஸ்வரன் (கனடா), லிங்கேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் பாமா (கனடா), தேவி (கனடா), கமலா (இலங்கை), செல்வராசா (சுவிஸ்), காலஞ்சென்ற தவராசா (சுவிஸ்), சந்திரிக்கா (கனடா), யமுணன் (கனடா) ஆகியோரின் சகலனும், முத்தம்மா (கனடா), வீரம்(சுவிஸ்), மல்லிகா (கனடா), கேதீஸ்வரன் (ஜேர்மனி), சோமர் (பிரான்ஸ்), கணபதிப்பிள்ளை (கனடா), ராசலிங்கம் (சுவிஸ்), காலஞ்சென்ற மகேந்திரண் (இலங்கை), யோகலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் மச்சானும், சஜீந், நிஷேந், மதுமிதா, சிவானி, யரிஷன், ஜெனிக்கா, ஜெனுஷன், ஜர்ஷிதா, ஜர்ஷனா, அபிஷாந், அக்ஷே ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

**பார்வைக்காக**
Saturday, 14 Aug 2021 10:00 AM - 3:00 PM
Sunday, 15 Aug 2021 10:00 AM - 3:00 PM
Monday, 16 Aug 2021 11:00 AM - 1:00 PM
Monday, 16 Aug 2021 4:00 PM - 6:30 PM
Tuesday, 17 Aug 2021 11:00 AM - 1:00 PM
Tuesday, 17 Aug 2021 4:00 PM - 6:30 PM
Wednesday, 18 Aug 2021 11:00 AM - 1:00 PM
Wednesday, 18 Aug 2021 4:00 PM - 6:30 PM
Centre Funéraire de Montoie Chemin du Capelard 5, 1007 Lausanne, Switzerland

**கிரியை**
Thursday, 19 Aug 2021 9:30 AM - 12:30 PM
Centre Funéraire de Montoie Chemin du Capelard 5, 1007 Lausanne, Switzerland

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**வசந்தன் - மகன்**
**Mobile : +41789016421**

தகவல்
**குடும்பத்தினர்.**

# அனைவருக்கும் இரண்டாவது தடுப்பூசி செலுத்தப்படும்வரை நாட்டை முடக்குக!

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து



**கண்டி, ஓக. 15**

**“இலங்கையில் தடுப்பூசி பெறுவதற்குத் தகுதியான அனைவருக்கும் இரண்டாவது தடுப்பூசி செலுத்தப்படும்வரை நாடு முடக்கப்பட வேண் டும்.”**

**- இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல வலியுறுத்தினார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“நாட்டில் கொரோனா வைரஸ் மிக வேகமாகப் பரவி வருகின்றது. எனது மாவட்டமான கண்டி மாவட்டத்திலுள்ள வைத்தியர்களுடன் நிலைமை தொடர்பில் கலந்துரையாடினேன். கண்டி மாவட்டத்துக்குள் இன்னும் ‘டெல்டா’ வரவில்லை எனவும், எனவே, இரண்டாவது தடுப்பூசியையும் ஏற்றினால் கண்டி உட்பட மலைநாட்டு பகுதியை பாதுகாக்க முடியும் எனவும் வைத்தியர்கள் சுட்டிக்காட்டினர். எனவே, இரண்டாவது தடுப்பூசியையும் விரைந்து வழங்குமாறு அரசிடம் கோருகின்றேன்.

கண்டி மாவட்டத்தில் முதலாவது தடுப்பூசியை வழங்கும்போது இரண்டாவது தடுப்பூசி அவசியமில்லை என்ற ஒப்பம் வாங்கப்பட்டது. இதனால் இரண்டாவது தடுப்பூசி கிடைக்குமா என்ற சந்தேகமும் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

நாட்டை முழுமையாக முடக்குமாறு வைத்தியர்கள் பரிந்துரைத்துள்ளனர். ஆனால், மாறுபட்ட செயலில் ஜனாதிபதி செயலணி ஈடுபட்டுள்ளது. தற்போதைய சூழ் நிலையில் வைத்தியர்களின் கருத்துக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

இரண்டாவது தடுப்பூசி ஏற்றப்படும் வரை நாடு முடக்கப்பட வேண்டும். அனைவருக்கும் இரண்டாவது தடுப்பூசியை வழங்கிய பின்னரே முறையாக நாடு திறக்கப்பட வேண்டும்” - என்றார். (இ)

## மதுரை ஆதீனக் குருமுதல்வர் மறைவுக்கு நல்லை ஆதீன முதல்வரின் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஓக. 15

சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டு செய்த மதுரை ஆதீனத்தின் 292 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பரிபூரணம் பெற்றமையையிட்டு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் இலங்கை வாழ் சைவ மக்கள் சார்பில் தனது பிரார்த்தனைகளைத் தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பி வைத்துள்ள பிரார்த்தனைச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“யாழ்ப்பாணம் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் தாய்வீடாகத் திகழ்வது மதுரை ஆதீனம் ஆகும். இந்த ஆதீனம் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாண்டிநாட்டில் தங்கி இருந்த பெருமைக்குரிய இடம் ஆகும்.

இத்தகைய பக்திச் சிறப்பு மிக்க மதுரை ஆதீனத்தின் 291 ஆவது முதல்வரின் ஆசியுடன் 1966 இல் யாழ்ப்பாணத்தில் எமது குருநாதரால் சைவ ஆதீனம் நிறுவப்பட்டது.

அதன்போது ஆதீன முதல்வராக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தனது குருநாதராகிய ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளது பெயரையே எமது குருநாதருக்குச் சூட்டி நல்லை ஆதீனத்தை நிறுவ உத்தர வளித்தார்.

மதுரை ஆதீன முதல்வர் சைவத்துக்காகவும் தமிழுக்காகவும் தொண்டு செய்த பெருந்தகை. சமய நல்லிணக்கம் குறித்து மிகவும் ஆர்வம் கொண்டிருந்ததோடு இலங்கை வாழ் சைவ மக்கள் குறித்தும் அதிக கரிசனை கொண்டு செயற்பட்டார். எம்முடன் பேரன்பு கொண்டிருந்தார். எமது நல்லை ஆதீனச் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக விளங்கினார்.

எமது அன்னை ஆதீனத்தின் முதல்வராக 40 ஆண்டுகள் விளங்கி இன்று தனது சிவலோக வாழ்வு பெற்ற குருமகாசந்நிதானம் அவர்களுக்கு எமது பிரார்த்தனைகளைத் தெரிவிப்பதுடன் புதிதாக 293 ஆவது குருமகா சந்நிதானமாக பொறுப் பேற்றுள்ள சுவாமி அவர்கள் தனது காலத்தில் சைவத்திற்கும் தமிழுக்கும் சிறந்த தொண்டாற்ற இறை திருவருள் நாடிப் பிரார்த்திக்கின்றோம்” - என்றுள்ளது. (இ)



## யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரால் கொரோனா விழிப்புணர்வு செயற்பாடு

யாழ்ப்பாணம், ஓக. 11

நாடு பூராகவும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பொதுமக்களுக்குக் கொரோனா தொடர்பாக விழிப்புணர்வு ஊட்டும் முகமாக யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியின் வழிகாட்டுதலின் கீழ் யாழ். மாநகரப் பகுதியில் நேற்று இராணுவத்தினரால் கொரோனா விழிப்புணர்வு செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது

பொதுமக்களுக்குத் துண்டுப்பிரசுரங்கள் மற்றும் ஒலிபெருக்கி மூலம் விழிப்புணர்வுச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

இராணுவத்தின் 512 ஆவது பிரிகேட் படையினரால் குறித்த விழிப்புணர்வு செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. (இ - 03)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.08.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-கல்யாணராமன்
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார்-
திறமையாளர்களுக்கான களம்




**இரவு**
7.00 மணி : SPOTLIGHT – சமுதாய வைத்திய
நிபுணர் முரளிவல்லிபுரநாதன்



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி :செல்லாடுகளம்
10.00 மணி:-நேர்கொண்ட பார்வை-வைத்தியர்
அனுஷ்யந்தன் சிவப்பிரகாசம்
கொழும்பு தேசிய வைத்தியசாலை




**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு